KALKI 27.12.98
ரூ. 4.50

கல்கி



இன்று எம்.ஜி.ஆர் இருந்தால்...



CONTRACT FRX 25269 TA

ஆஃபர் 31 டிசம்பர் அல்லது சரக்கு உள்ள வரை மட்டுமே
இந்த ஆஃபர் இல்லாமலும் பேக்குகள் கிடைக்கின்றன

தி.மு.க. ஆட்சிக்கு வந்தாலே அரிசிக்குப் பஞ்சம் வருமா?



(படம் : ஸ்ரீஹரி)

அரசின் செயல்பாட்டை மக்கள் நாடி பிடித்துப் பார்க்கும் இடம் ரேஷன் கடைகள்தான். அரிசி உட்பட அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப் பாடின்றி ரேஷனில் கிடைக்கும்படி பார்த்துக் கொள்வதைத் தவிர வெளிமார்க்கெட்டிலும் அரிசி தாராளமாகக் கிடைக்கும்படி செய்வதும், விலை ஏறாமல் பார்த்துக் கொள்வதும் அரசின் கடமை. இந்த நிலையில் கடந்த நான்கைந்து மாதங்களாகவே வெளிமார்க்கெட்டில் அரிசி விலை ஏறிக் கொண்டிருக்கிறது. இது ஏன்? உணவு அமைச்சர் கே.என். நேருவைச் சந்தித்துக் கேட்டோம்.

"தி.மு.க. ஆட்சிக்கு வந்தாலே அரிசித் தட்டுப்பாடு வந்துவிடும்; விலையும் ஏறி விடும்" என்று ஜெயலலிதா அறிக்கை விட்டிருந்தார். இது தவிர சில பத்திரிகைகளும் அரிசிப் பிரச்னை வரும் என்று பயமுறுத்துகின்றனவே?"



"தமிழகத்தின் அரிசித் தேவை (ரேஷனில் வழங்குவது உட்பட) வருடத்திற்கு 7.5

வாசகர்கள் கவனத்திற்கு!

இந்த வாரம் முதல் ஈ மெயில் முகவரி மாற்றப்பட்டுள்ளது.

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com   ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

லட்சம் டன். சென்ற வருடம் தமிழகத்தில் உற்பத்தி 65 லட்சம் டன். காலம் காலமாகவே துண்டு விழும் நமது தேவைகளை ஈடுகட்டிக் கொண்டு வருவது ஆந்திர மாநில அரிசி தான். ஆந்திராவிலிருந்து வருடத்திற்குச் சுமார் பத்திலிருந்து பதினைந்து லட்சம் டன் அரிசி வரும். ஆனால் இந்த வருடம் ஆந்திர அரிசி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகி விட்டதால் தமிழகத்துக்கு விற்பனைக்கு வர வில்லை. இது தவிர சென்ற பருவத்தில் விவசாயிகள் ஸ்டாக் எதுவும் வைக்காமல் தங்களிடமிருந்த நெல்லை முழுவதும் விற்று விட்டனர். ஆந்திராவில் இருந்து வராததா லும், தமிழக விவசாயிகளிடம் ஸ்டாக் இல் லாததாலும், கடந்த நான்கைந்து மாதங்களாக வெளிமார்க்கெட்டில் அரிசி விலை ஏறி யதை நான் மறுக்கவில்லை. ஆனால் நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் (டிசம்பர் 16) நிலைமை மாறிவிட்டது. கர்நாட கத்திலிருந்து அரிசி வந்து கொண்டிருக்கிறது. விலைகளும் வீழ்ச்சியடைந்து கொண்டிருக் கின்றன. மற்ற பொருள்களின் விலையேற் றத்தை ஒப்பிடும் போது அரிசி விலை ஏற்றம் என்பது பயமுறுத்தும்படியாக இல்லை. மேலும் விலை சற்று ஏறியிருந்த போதும் தட்டுப்பாடின்றி அரிசி கிடைத்ததை நீங்கள் மறுக்க முடியாது."

"அரிசிப் பிரச்னை வரும் போது நீங்கள் 'தமிழகத்தில் தேவையான அளவு ஸ்டாக் இருக்கிறது. எனவே பயப்படத் தேவை யில்லை' என்று அறிக்கை விடுகிறீர்கள். 'ஸ்டாக் இருக்கிறது' என்றால்... வெளிமார்க் கெட்டின் தேவையையும் கணக்கிலெடுத்துக் கொண்டுதான் சொல்கிறீர்களா?"

"பொது விநியோகத்தைப் பற்றித்தான் அரசு முதலில் கவலைப்படும். எனவே சமீ பத்தில் 'ஆறு லட்சம் டன் அரிசி ஸ்டாக் இருக்கிறது' என்று அறிவித்தது கூட ரேஷனின் தேவையை மனத்தில் வைத்துத் தான். வரும் சம்பா பருவத்தில் (ஜனவரி '99) தேவையான அளவு கொள்முதல் செய்து விடுவோம் என்றாலும், முன்னெச்சரிக்கை யாக ஆந்திராவில் இருந்து மூன்று லட்சம் டன் வாங்கி வைக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டு விட்டன. நேரடியாக டெண்டர் போட்டு வாங்குகிறோம். இதில் எந்த பேரத் துக்கும் இடம் கிடையாது. ரேஷனில் தட்டுப் பாடின்றி அரிசி கிடைக்கும்படி பார்த்துக் கொள்ளுகின்ற அதே சமயத்தில், வெளிமார்க் கெட்டிலும் தாராளமாக அரிசி கிடைக்கு மாறும் அதன் விலை தாறுமாறாக ஏறாமலும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதையும் நான் மறுக்கவில்லை. ஏனென்றால் ரேஷன் கார்டு வைத்திருப்பவர் களுக்குக் கூட அறுபது சதவீத தேவைதான் கார்டு மூலமாகக் கிடைக்கிறது. மீதம் நாற்பது சதவீதத் தேவைக்கு வெளி மார்க்கெட்டைத் தான் அவர்களும் நம்பியிருக்கிறார்கள்."

"நீங்கள் விலை குறைந்து கொண்டு வரு கிறது என்கிறீர்கள். மூன்று மாதத்திற்கு முன்பு கிலோ 16 ரூபாய்க்கு விற்ற வெள் ளைப் பொன்னி, கடந்த ஒரு மாதமாக கிலோ இருபது ரூபாய்க்கு விற்கிறது. இன்று கூட விசாரித்தோம். விலை குறைய வில்லையே!"

"வெள்ளைப் பொன்னி போன்ற தரமான அரிசி குறைந்த அளவே பயிரிடப்படுகிறது. ஆனால் பெரும்பான்மையான மக்கள் அதன் தரம் காரணமாக வாங்க விரும்பும் போது அதற்கு கிராக்கி உண்டாகிறது. விலை கூடுகிறது. கிலோ பன்னிரண்டு ரூபாய்க்குக் கூட நல்ல அரிசி கிடைக்கிறது. கர்நாடக மாநில பொன்னி அரிசி கிலோ பதினான்கு, பதினைந்து ரூபாய்க்குக் கிடைக்கிறது. ஆந்திர மாநிலத்தில் 90 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடுகிறார்கள். இதில் 40 சதவீத உற்பத்தியை மத்திய உணவுக் கழகம் கொள் முதல் செய்து விடுகிறது. முப்பது சதவீதத்தை அவர்களது தேவைக்கு வைத்துக் கொண்டு மீதம் உள்ளதை வெளிமாநிலங்களுக்கு, அதிலும் குறிப்பாக தமிழகத்துக்கு அனுப்பி விடுகிறார்கள். இப்போது ஆந்திர அரிசி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆவது நிறுத்தப் பட்டிருக்கிறது. எனவே தரமான ஆந்திர அரிசி தமிழகம் வரத் துவங்கி விடும். சம்பா அறுவடையும் ஜனவரியில் மார்க்கெட்டுக்கு வரும். வெளிமார்க்கெட் நிலை சீராகிவிடும்."

"ரேஷனில் கொடுக்கப்படும் அரிசி சில சமயங்களில் மிகவும் புழுத்துப் போய் நாற்ற மடிக்கிறதே?"

"விவசாயிகளிடமிருந்து நெல் கொள் முதல் செய்யும் போது மிகவும் ஈரத்தோடு கொள்முதல் செய்வதால்தான் இது போன்ற ஒரு நிலை ஏற்படுகிறது. அறுவடை சமயத் தில், நெல்லை காயவைத்துக் கொண்டு வரா மல் அவசரத்தில், கொள்முதல் நிலையத்துக் குக் கொண்டு வந்து விடுகிறார்கள். அப்படிக் கொண்டு வரும் விவசாயிகளின் சரக்கை திருப்பி அனுப்ப முடியாது. சில சமயம் இருபது சதவீதத்துக்கும் அதிகமாக ஈரப்பதம் உள்ள நெல்லைக் கூட கொள்முதல் செய்கி றோம். மத்தியத் தொகுப்பிலிருந்து கொடுக்

“ பதுக்கி வைக்கும் விவகாரம் சாத்தியமில்லை. உரிமம் பெற்ற நெல் வியாபாரிகள் குறிப்பிட்ட அளவுதான் ஸ்டாக் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு உள்ளது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும். ”


• கே.என். நேரு

கப்படும் நெல் கூட பல சமயங்களில் ஈரப் பதத்தோடு இருக்கிறது. எனவே இது போன்ற நெல் அரிசியாக்கப்பட்டு நீண்ட காலத்துக்குப் பின் ரேஷன் கடைகளுக்கு வரும்போது புழுத்துப் போவதற்கான வாய்ப்பு இருக்கிறது.''

''கொள்முதல் செய்ததை மழை, பனி போன்றவற்றில் இருந்து பாதுகாத்து வைக்காவிட்டால் கூட அரிசி புழுத்துப் போகும் வாய்ப்பிருக்கிறதே!''

''குறுவை, சம்பா பருவங்களில் மட்டும் ஆண்டுக்குச் சுமார் பத்து லட்சம் டன் கொள்முதல் செய்கிறது தமிழக அரசு. இதில் ஆறு லட்சம் டன் சேமித்து வைக்க பக்கா கிட்டங்கிகள் உள்ளன. இப்போது 42 இடங்களில் கிட்டங்கிகள் கட்டப் போகிறோம். எனவே வரும் காலத்தில் இது போன்ற நிலை ஏற்படாது.''

''அரசே ஏக போகக் கொள்முதல் செய்யாமல் வியாபாரிகளையும் இணையாகக் கொள்முதல் செய்ய இந்த சம்பா பருவத்தில் அனுமதிக்க வேண்டும் என்று வியாபாரிகள் கோரிக்கை வைத்திருக்கிறார்களே?''

''இது பாலிஸி விவகாரம். முதல்வர் தலைமையில் அமைச்சரவைதான் முடிவு செய்யும். தமிழக உற்பத்தியான அறுபது, அறுபத்தைந்து லட்சம் டன்னில் தமிழக அரசு பொது விநியோகத்துக்குக் கொள்முதல் செய்த்து போக மீதம் உள்ளதை விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் தானே வாங்குகிறார்கள்.''

''வியாபாரிகளை இணையாகக் கொள்முதல் செய்ய அனுமதித்தால் அவர்கள் ஏராளமாகக் கொள்முதல் செய்து பதுக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாடு உண்டாகக் காரணமாக இருப்பார்கள் என்கிறார்கள். எனவே அரசு ஏகபோகக் கொள்முதல் செய்து வியாபாரிகளுக்கு விற்கலாமே!''

''பதுக்கி வைக்கும் விவகாரம் சாத்தியமில்லை. உரிமம் பெற்ற நெல் வியாபாரிகள் குறிப்பிட்ட அளவுதான் ஸ்டாக் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு உள்ளது. மீறினால் உரிமம் ரத்து செய்யப்படும். மத்திய அரசின் உணவுக் கழகம்தான் கொள்முதல் செய்து விற்பனையும் செய்கிறது. தமிழக அரசு வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை.''

''சமீபத்தில் பெய்த மழை வெள்ளம் காரணமாக நெற்பயிர்கள் பாழாகி விட்டதாகச் செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் வரும் ஜனவரியில் எதிர்பார்க்கும் உற்பத்தி இருக்குமா?''

''காவிரி டெல்டா பகுதியில் பெரிய அளவு பயிர்களுக்குச் சேதம் இல்லை. தமிழகத்தின் நெற்களஞ்சியம் அதுதானே!''

''உணவு அமைச்சர் என்றாலே ஒரு ரிஸ்க்கான நாற்காலியில் அமர்ந்திருப்பதாகத்தான் சொல்வார்கள். ஏனென்றால், உங்களுக்குப் பூங்கொத்து கொடுப்பவர்களை விட குறை சொல்பவர்கள் அதிகம் இல்லையா?''

''நீங்கள் சொல்வது உங்கள் கருத்தாக இருக்கலாம். எனது துறையின் செயல்பாடுகளுக்கு ஆதார சுருதியாக இருப்பவர் முதல்வர் கலைஞர் அவர்கள். இந்த இரண்டு வருட காலத்தில் இருநூறு முறைகளுக்கு மேல் எங்கள் துறையின் செயல்பாடுகளைப் பற்றி அவர் விவாதித்திருக்கிறார். அவரது சீரிய வழிகாட்டுதலின் பேரில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். கூடிய மட்டும் எந்தக்குறைபாடுகளுக்கும் இடம் கொடுக்காமல் செயல்படுகிறோம். அப்படி ஏதாவது குறைபாடுகள் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டால் உடனே களைகிறோம். வரும் காலத்திலும் இதே போன்று எங்கள் பணி தொடரும்!''

சந்திப்பு : ஸ்ரீநிவாசன்





இன்று எம்.ஜி.ஆர்

அ.தி.மு.கவின் வெள்ளிவிழா ஆண்டு இது. அக் கட்சியை நிறுவிய எம்.ஜி.ஆர். மறைந்து பதினொரு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அவரது நம்பிக்கைக்குரிய தலைவர்களாக இருந்தவர்கள் இன்று தனித் தனி இயக்கங்களில் இருக்கிறார்கள். அவர்களிடம் 'இன்று எம்.ஜி.ஆர். இருந்திருந்தால்?' என்ற கேள்வியை முன் வைத்தோம்....

நாவலர் நெடுஞ்செழியன் :

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இப்போது இருந்திருந்தால் அரசியல் சூழ்நிலையும், நாட்டின் சூழ்நிலையும் எப்படி இருந்திருக்கும்? புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டிருந்த கொள்கை, குறிக்கோள், பண்பாடு, இயல்பு, அணுகுமுறை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளைக் கற்பனையான முறையில் கணக்கிட்டுப் பார்ப்பது சிறிது கடினம்தான்.

அவர் வாழ்ந்த காலத்திற்கும் இன்றைக்கும் அரசியல் போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கட்சிகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. அவற்றின் அணுகுமுறைகளும் உறவு முறைகளும் மாறியிருக்கின்றன. சமுதாயப் பிரச்னைகள் சிக்கல்கள் நிறைந்துள்ளதாக அமைந்திருக்கின்றன. கட்சிகளுக்குத் தகுந்த தலைவர்கள் என்ற நிலைமாறி தலைவர்களுக்கு உகந்த கட்சிகள் என்ற நிலை வலுப்பெற்றிருக்கிறது!

எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் தொடர்ந்து பெரும் செல்வாக்

இருந்தால்...

கோடு இருந்திருப்பார். அவர் தலைமையில்தான் தமிழக அரசு இயங்கிக் கொண்டிருக்கும். மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு போன்று இருபது ஆண்டு களுக்கு மேல் தொடர்ந்து புரட் சித் தலைவர் முதல்வராகவே நீடித்திருப்பார். அவரது இனிய பண்புகள், ஏழை எளியவர் களுக்கு உதவும் வள்ளல் தன்மை, பிற்படுத்தப்பட்ட மக்களிடம் பெற்ற ஆதரவு, செம்மையிலும் எளிமை ஆகியவற்றின் காரண மாக, இயக்கம் கட்டுக் கோப் பாக-வலிமையாக-தொடர்ந்து இருக்க, புரட்சித் தலைவர் முதல் வராகச் செயல்பட்டுக் கொண் டிருப்பார்.



“ எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் அ.தி.மு.க. ஆட்சியே தொடர்ந்திருக்கும்! ”

'நல்ல சட்டங்களால் ஆளப் படுகிறோம் என்பதைவிட நல்ல மனிதர்களால் ஆளப்படுகிறோம்' என்ற உணர்வு மேலானது என்று பேரறிஞர் பிளேட்டோ கூறியுள்ளதைப் போன்று, எம்.ஜி.ஆர். அவர்கள் பெரும்பான்மை மக் களால் நல்லவர் என்று போற்றப்பட்டு வந்த வர். அதனால் மக்களின் ஆதரவு தொடர்ந்து அவருக்கு இருந்து வந்திருக்கும். சத்துணவு போன்ற சமுதாய நலத் திட்டங்களை அறி முகப்படுத்திச் செயல்படுத்தியது போன்று, புதிய புதிய நலத் திட்டங்களை நடைமுறைப் படுத்தி, பொது மக்களின் நிலைத்த அன்பையும் ஆதரவையும் பெற்றிருப்பார்.

புரட்சித் தலைவர் இன்று இருந்திருந்தால் 'இதனை இதனால் இவன் முடிக்கும் என் றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்ற குறள் நெறிக்கு ஏற்ப, தக்கவர்களை தக்க முறை யில் பயன்படுத்தி, தமது நிலையை மேலும் வலுப்படுத்திக் கொண்டிருப்பார். புரட்சித் தலைவி ஜெயலலிதாவை அரசியலுக்குக் கொண்டு வந்து, அவரது அறிவாற்றல் திற னுக்கு ஏற்ப கொள்கைப் பரப்புச் செயலாளர் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் போன்ற பதவிகளை வழங்கியதைப் போலவே, புரட் சித் தலைவிக்குப் புதிய பொறுப் புக்களைத் தந்து அவரது பணி களைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பார். பகைவர்கள் நட்பையும் நண்பர்கள் நட்பையும் ஒருங்கே பெற்று ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்திருப்பார்!

இன்றைக்கு தமிழக ஆட்சியில் காணப்படும் அவதிகள்- அலங் கோலங்கள்- அசிங்கங்கள்- அநி யாயங்கள்- அக்கிரமங்கள்- அடக்கு முறைகள்- அவமானங் கள் ஆகியவற்றைப் பார்க்கும் போது, எம்.ஜி.ஆர். இருந்திருந் திருந்தால் இந்த நிலை ஏற்பட்டி ருக்காதே என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

ஆர்.எம்.வீரப்பன்:

புரட்சித் தலைவர் இன்றிருந்தால் அவர் உருவாக்கிய அ.தி.மு.க. மாபெரும் அரசியல் இயக்கமாகத்



“ அ.தி.மு.க. கட்டுக் கோப்பாக இருந்து வந்திருக்கும். ”

தொடர்ந்து இருந்திருக்கும். ஒன்று, ஆளும் கட்சியாக இருந்திருக்கும்; அல்லது ஆளும் வாய்ப்பைப் பெறும் மாற்றுக் கட்சியாக இருந் திருக்கும். ஏனென்றால் இந்திய அரசியலில் தாம் இருந்து, பாடுபட்டு வளர்த்து, பங்கு பெற்ற ஓர் அரசியல் இயக்கத்திலிருந்து வெளி யேறுகின்ற சூழல் ஏற்பட்டபோது, தாம் இருந்த தாய்க் கழகத்தையே தேர்தலில் தோல்வியைச் சந்திக்க வைத்த ஒரே தலைவர் இந்தியாவி லேயே புரட்சித் தலைவர் ஒருவர்தாம். இன்

ணமும் சொல்லப் போனால் புரட்சித் தலைவர் தனி இயக்கம் கண்டபோது, தாய்க் கழகம் ஆளும் கட்சியாக இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. புரட்சித் தலைவரைப் போன்று அரசியலில் வெற்றி பெற்றவர்கள் இந்தியாவில் வேறு யாரும் இல்லை என்று அடித்துச் சொல்லலாம். என்.டி.ஆர். கூட, அரசியல் சார்பில்லாமல் இருந்து, பின்னர் புதிதாக ஒரு கட்சியைத் துவங்கித்தான் ஆட்சியைப் பிடித்தார்.

புரட்சித் தலைவர் எந்தத் துறையில் ஈடுபட்டாலும் தம்மைப் பற்றி மாத்திரம் சிந்திக்காமல், மக்களைப் பற்றி சிந்தித்து வந்தவர். ஏழை எளிய மக்களிடம் பற்று வைத்தவர். மேலும், தாம் ஏற்றுக் கொண்ட தலைவர்களின் உயர்வுக்காக உழைத்தவர். அதனால் எல்லோருடைய ஆதரவையும் பெற்றவராக அவர் திகழ்ந்தார். தாம் ஏற்றுக் கொண்ட லட்சியம் அல்லது கொள்கை கட்சியில் சிலருக்கோ அல்லது மக்களில் ஒரு பகுதியினருக்கோ பிடிக்காத நிலை இருந்தாலும் கூட, அவர்களின் உணர்வுக்கு மதிப்பளித்து அவர்களை ஆதரவாளர்களாக மாற்றி, இணக்கமாகச் செயல்படும் முறையை பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கற்றுச் செயல்படுத்தியவர் அவர். இதன் காரணமாகவே அவர் தலைமையேற்று நடத்திய கட்சியும் மக்களிடையே அமோக ஆதரவு பெற்றது. எனவே தான் 1980ல் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தாலும் சில மாதங்களுக்குள்ளாகவே மீண்டும் வெற்றி பெற முடிந்தது.



"ஜாதி அரசியல் வந்திருக்காது!"

1984ல் உடல்நலக் குறைவு காரணமாக அமெரிக்காவில் சிகிச்சை மேற்கொண்டிருந்த போது, சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெற்றார் என்றால் அதற்குக் காரணம், அவர் மக்களிடம் பெற்றிருந்த செல்வாக்கும் மக்கள் அவர் மீது வைத்திருந்த அன்பும் தான்! மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளித்து அவர்களையும் அணைத்துச் செல்லும் பண்பு கொண்ட அவர் தம்மைத் தூற்றியவர்களைக் கூட மரியாதை கொடுத்து, அவர்களை அமைச்சர்களாக்கினார். நல்ல திறமையானவர்கள் சாதாரண நிலையில் இருந்தாலும், அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குப் பொறுப்புகளைக் கொடுத்து இயக்கத்தை நடத்திச் சென்றவர் அவர். இந்த நிலை தொடர்ந்திருந்தால் அ.தி.மு.க. என்பது தோல்வியைச் சந்திக்கும் இயக்கமாக மாறியிருக்காது.

மக்கள் விரோத சக்தியாக அடையாளம் காட்டப்பட்ட ஒருவர் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் அவல நிலை புரட்சித் தலைவர் இருந்திருந்தால் உண்டாகி இருக்காது.

நாங்களெல்லாம் அவருக்கு மிக நெருக்கமாக இருந்தாலும், எங்களால் கூட நெருங்க முடியாத இடத்தில் இருந்தார் ஒருவர். அந்த மாபெரும் தலைவர் இருக்கும் போதே கட்சியைக் கைப்பற்றும் வஞ்சகத் திட்டம் செயல்பட்டது.

இதன் காரணமாக ஏற்பட்ட குழப்பத்தில் புரட்சித் தலைவர் அவர்களும் சில முடிவுகளை எடுத்தார்கள். இதில் ஒன்றுதான் என்னையும் மற்ற ஒன்பது அமைச்சர்களையும் பதவியில் இருந்து நீக்கியது.

தமக்குப் பின் கட்சியை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு இவருக்குத் தான் உண்டு என்று அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதை கவனிக்க வேண்டும்...

தமது உடல் நிலையையும் மீறி ஒரு முடிவெடுக்க அவர் எத்தனித்தபோதுதான் இயற்கை அவரை அழைத்துக் கொண்டது.

புரட்சித் தலைவர் இருந்திருந்தால் அ.தி.மு.க. லட்சோப லட்சம் தொண்டர்களை உள்ளடக்கிய, கட்டுக் கோப்பான மாபெரும் இயக்கமாகவே தொடர்ந்து இருந்து வந்திருக்கும்.

பண்ருட்டி ராமச்சந்திரன்:

'எம்.ஜி.ஆர். இருந்திருந்தால்' என்பது கற்பனையின் விளைவால் உண்டான கேள்வி என்றாலும் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எம்.ஜி.ஆர். தனி இயக்கம் கண்ட போது அவருடன் நெருக்கமாக இணைந்து நின்ற பலர் இன்று தனித்தனி இயக்கங்களாகச் செயல்படுகின்ற நிலையில் இக்கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. அவர் இருந்திருந்தால் பிரிந்து நிற்க வேண்டிய அவசியமே எங்களைப் போன்றோருக்கு ஏற்பட்டிருக்காது. எல்லோரும் அவருடனேயே இருந்திருப்போம். அ.இ.அ.தி.மு.க. என்பது ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மாபெரும் இயக்கமாகத் தொடர்ந்து இருந்து வந்திருக்கும்.



"ஜெ.வின் எதிர்காலம் பிரகாசமாகவே இருக்கும்!"

துரதிர்ஷ்டவசமாக இப்போது அ.தி.மு.க.வுக்குத் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் ஜெயலலிதாவுக்குக் கட்சியை எம்.ஜி.ஆர். பாணியில் நடத்த திறமையும் போதாது, பொறுமையும் கிடையாது. ஜெயலலிதாவுக்கு யாரைப் பார்த்தாலும் சந்தேகம். எம்.ஜி.ஆருக்கு தன்னம்பிக்கை உடன்பிறந்தது. "தான்தான் கட்சி, கட்சிதான் தான்" என்பதில் தெளிவாக இருந்தார் அவர். இதற்குக் காரணம் அந்த அளவுக்கு மக்களின் செல்வாக்குப் பெற்றவராக அவர் இருந்தார். தவறு செய்தவர்களைக் கூட மன்னித்து பக்கத்தில் வைத்துக் கொள்வார். ஆனால் ஜெயலலிதாவோ தவறு செய்யாதவர்களைக் கூட தமக்குப் பிடிக்கவில்லை என்றால் சர்வாதிகாரமாகச் செயல்பட்டுத் தூக்கி அடிப்பார்! 1980ல் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்தபோது சிலர் கட்சியை விட்டு வெளியேறினார்கள். அதற்காக எம்.ஜி.ஆர். எவ்வளவு வருத்தப்பட்டார் என்பது உடனிருந்த எங்களைப் போன்றோருக்கு நன்றாகவே தெரியும்.

கட்சி நடத்துவதில் கூட சில வரைமுறைகளை வைத்திருந்தார் அவர். உதாரணமாக கட்சி மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றுக்கு கட்சிப் பிரமுகர்கள் வசூல் வேட்டையில் இறங்குவது அவருக்கு அறவே பிடிக்காது. கட்சி நடத்துவதற்காக அவருக்கு நெருங்கிய செல்வந்தர்களிடமிருந்து நன்கொடைகள் வாங்குவார். அந்தப் பணத்தைத்தான் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்தக் கொடுப்பார். தமது சொந்தப் பணத்தையும் கட்சிப் பணத்தையும் கலக்காமல் தனித்தனியே வைத்திருந்தார். இந்தச் செயல்பாடுகள் காரணமாக பொது மக்களிடம் இயக்கத்திற்கு நல்ல பெயர் இருந்தது. ஆனால் ஜெயலலிதா தலைமையிலுள்ள அ.தி.மு.க. எப்படிச் செயல்படுகிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.

எம்.ஜி.ஆர். அவர்கள் மறையும் வரை அ.தி.மு.க. என்பது எல்லா தரப்பு மக்களையும் கொண்ட மாபெரும் இயக்கமாக இருந்தது. அவரது மறைவுக்குப் பின்னர்தான் தமிழகத்தில் ஜாதித் தலைவர்கள் உருவானார்கள். ஜாதிக் கட்சிகளும் செல்வாக்குப் பெற்றன. இந்த ஜாதிக் கட்சிகள் இன்று எந்த அளவுக்குத் தமிழக மக்களை ஆட்டுவிக்கின்றன என்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் இது போன்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

தமக்குப் பின்னால் இன்னார் தலைமையில் தான் கட்சி செயல்பட வேண்டும் என்று கடைசி வரை அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஒருமுறை காரில் போய்க் கொண்டிருந்த போது, கட்சிக்காக நிதி வசூலிப்பது சம்பந்தமாகப் பேச்சு வந்தது. எம்.ஜி.ஆர். அவர்கள் உடனடியாக, ''அவசியமானால் சத்யா ஸ்டுடியோவை விற்று பணத்தை வங்கியில் போட்டால், அதன் மூலம் கிடைக்கும் வட்டியைப் பயன்படுத்தி கட்சி நடத்தலாம்!" என்று குறிப்பிட்டார். ஆனால் இன்று...?

கி. கஸ்தூரிரங்கன் :

''எம்.ஜி.ஆர். இல்லாத நிலையில், ஜெயலலிதா மீதும் அவரது சகாக்கள் பலர் மீதும் வழக்குகள் உள்ள சூழ்நிலையில் அ.தி.மு.க.வின் எதிர்காலம் எப்படியிருக்கும்?" என்று தினமணியின் முன்னாள் ஆசிரியரும் பத்திரிகையாளருமான கி. கஸ்தூரிரங்கனிடம் கேட்டபோது, ''மகளிருக்கான இட ஒதுக்கீட்டு மசோதா நிறைவேறிவிட்டால், அனைத்திந்திய அளவிலும் ஜெயலலிதா பிரகாசமாக வந்து விடுவார்!''என்றார்.

வழக்குகள் பற்றிக் கேட்டபோது, "வழக்குகளெல்லாம் ஒரு பெரிய விஷயமேயில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை எந்த அரசியல்வாதிமீது வழக்குப் போட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது? சொல்லப் போனால் இந்த வழக்குகளெல்லாம் ஜெயலலிதாவுக்கு அனுதாபத்தைப் பெற்றுத் தருவதற்கான வாய்ப்புகளே அதிகம் இருக்கிறது!

"தனி நீதி மன்றத்தில் ஜெயலலிதாவுக்கு எதிரான தீர்ப்புகள் கிடைத்தாலும் அதை எதிர்த்து அவர் உச்ச நீதி மன்றத்துக்குச் செல்வார். அங்கே வழக்கு முடிவதற்குள் எத்தனையோ ஆண்டுகள் ஆகி-அதற்குள் என்னென்னவோ மாற்றங்கள் நிகழ்ந்துவிடும். அதோடு, எம்.ஜி.ஆருக்குள்ள அந்த 'வோட் பேங்க்' அப்படியே ஜெயலலிதாவுக்குத் தொடர்கிறது என்பதால் அவருடைய எதிர்காலம் பிரகாசமாகவே இருக்கும்!" என்றார். ●


சந்திப்பு: **ப்ரியன்**

அட்டை வண்ணப்படம்: **'சுபா'**


படங்கள்: **ஸ்ரீஹரி**












ராமர் அயோத்தியில் பிறக்கவில்லையா?

— ஒரு புதிய சர்ச்சை

ராமர் பிறந்த இடம் அயோத்தி என்று பா.ஜ.க.வும் அதன் உபரி அமைப்புகளும் அரசியல் ஆதாயம் தேடிக் கொண்டிருக்கையில், அயோத்தியில் ராமர் பிறக்கவில்லை; அவரது பிறப்பிடம் பஞ்சாப் மாநிலம் பாடியாலா மாவட்டத்தில் உள்ள 'கர்ராம்' என்ற பெயர் கொண்ட ஊர்தான் என்று புதிய தகவல் வெளியாகியுள்ளது!

இந்த கர் ராம், பாடியாலாவிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. கர் ராம் என்பதற்கு ராமனின் இல்லம் என்று பொருள். பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில மக்கள் மத்தியில், பரவலாக, 'கர் ராம்'தான் ராமன் பிறந்த இடம் என்கிற நம்பிக்கை வலுப் பெற்றுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க 'விஷயம் என்னவெனில், இப்பகுதியில் வசிக்கும் இந்துக்களுக்கு மட்டுமில்லாமல், முஸ்லிம்கள், சீக்கியர்களுக்குக் கூட இந்த நம்பிக்கை இருப்பதுதான்!

இந்த விஷயம் குறித்து பாடியாலாவில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகம், ஆராய்ச்சி செய்துள்ளது. அப்பகுதி மக்களின் பாரம்பரியமான பழக்க வழக்கங்கள் போன்ற சிலவற்றை மேற்கோள் காட்டி, ராமர் பிறந்த இடம் 'கர் ராம்' என்ற இடம்தான் என்று ஆராய்ச்சி முடிவில் குறிப்பிட்டுள்ளது. அது மட்டு



• மணியன்

மின்றி, அங்குள்ள ஒரு பழங்காலக் கிணறு, (இன்றைக்கு அது பௌலி சாஹிப் என்கிற சீக்கிய புனித இடம்) தசரத சக்ரவர்த்தியால், கோசலையின் திருமணத்தின் போது வெட்டப்பட்டது என்றும் அது குறிப்பிடுகிறது. இந்த பழங்காலக் கிணற்றிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் பாழடைந்த கோட்டைப் பகுதிகள் காணப்படுகின்றன. கோசலையின் திருமணத்தின் போது, விருந்தினர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டது அது என்றும் கூறப்பட்டுள்ளது.

"ஒரு பெண், தன் தந்தை வீட்டுக்குத்தானே, குழந்தையைப் பெற்றெடுக்க வருவது பாரத நாட்டு மரபு. அதன்படி கோசலை, தன் தகப்பனார் மகாராஜா கோராம் அரண்மனைக்குத்தானே வந்திருக்க வேண்டும்? இது தான் எங்கள் நம்பிக்கையின் அஸ்திவாரம்" என்கிறார் அறுபத்து ஆறு வயது முதியவர் மங்கத் ராம்.

கர் ராம் பகுதியில் இன்று வசிப்பவர்களுள் பெரும்பாலானவர்கள், பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்களும் சுதந்தரமடைந்தவுடன் நடைபெற்ற கலவரத்தில் பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தவர்களின் சொத்துக்களை ஆக்ரமித்துக் கொண்டவர்களுமே. பல நூற்றாண்டுகளாய் அங்கேயே வசித்து வரும் சில குடும்பங்களும் இருக்கவே செய்கின்றன. கர் ராம்தான் ராமன் பிறந்த இடம் என்று ஆழமாக நம்புகிறார்கள். 'பௌலி சாஹிப் கிணற்றின் அமைப்பைச் சுட்டிக்காட்டி, "இது போன்ற செங்கல் பாணியும், கிணற்றுக்குள்ளே இறங்க செங்கல் படிக்கட்டுகளும் கொண்ட கிணறுகள் திரேதா யுகத்தைச் சேர்ந்தவை" என்கிறார்கள்.

முன்னாள் குடியரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங், பஞ்சாப் முதலமைச்சராக இருந்தபோது, இந்த நம்பிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து, கர் ராம் பகுதியில் ஆய்வு நடத்த உத்தரவிட்டார். அவர்களும், இப்பகுதியில், பல இடங்களில் தோண்டி பல வற்றை எடுத்துச் சென்றார்கள். மக்களின் உணர்வுகளை மதித்து, ஜெயில் சிங் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பாடியாலாவில் செயல்பட்டு வரும் பழைமையான லேடி கர் சான் நர்ஸ் பயிற்சிப் பள்ளி மற்றும் ஆஸ்பத்திரியை, மாதா கௌசல்யா ஆஸ்பத்திரி என்று பெயர் மாற்றம் செய்தார்.

பஞ்சாப் மாநில தொல் பொருள் ஆய்வுத் துறையின் ஆராய்ச்சி முடிவு, கர் ராம் மக்களின் நம்பிக்கைக்கு ஆதாரமில்லை என்று சொல்லவில்லை. அதே நேரம் ராமருக்கும் கர் ராமுக்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்தும் வகையிலும் எந்த ஆதாரங்களையும் எடுத்துரைக்கவில்லை. "ஆனால், அயோத்தி விஷயத்திலும் அதுதானே? அயோத்தியில்தான் ராமர் பிறந்தார் என்பதற்கும் தொல் பொருள் ஆய்வின் படி எந்த ஆதாரமும் இல்லையே!" என்கிறார் பஞ்சாப் தொல் பொருள் துறை அதிகாரியான கே.கே. ரிஷி.

இப்போது, கர் ராமில் ராமருக்கும், கோசலைக்கும் ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று உள்ளூர் மக்கள் மத்தியில் ஓர் எண்ணம் தோன்றியுள்ளது!

அண்மையில், இந்துஸ்தான் டைம்ஸ் இதழில் வெளியானது இந்தப் புதிய சர்ச்சை.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதில் தீவிரமாயுள்ள விஸ்வ ஹிந்து பரிஷத் தரப்பில் என்ன சொல்லுகிறார்கள்? சென்னை வி.எஹச்.பி. கிளை முக்கியஸ்தரான மணியனிடம் கேட்டோம்.

'கர் ராம்' தான் ராமர் பிறந்த இடம் என்று அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் நம்பினால், அவர்கள் மனதைப் புண்படுத்தவோ விமர்சிக்கவோ நான் தயாராக இல்லை. சேலம் அருகில் உள்ள அயோத்தியா பட்டிணத்து மக்கள் அங்குதான் ராமர் அவதரித்தார் என்று நம்பினால், நம்பி விட்டுப் போகட்டும். ஏனெனில், ராமாயணச் சம்பவங்கள் சம்பந்தப்பட்ட இடம் குறித்து, பலருக்கும் பலவித நம்பிக்கைகள் உள்ளன. ஆனால், பாரத மக்கள் அனைவராலும், ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விஷயம் அயோத்திதான் ராமஜன்ம பூமி என்பது. மக்களின் நம்பிக்கைக்கே அதை விட்டு விடலாம்!"

— எஸ். சந்திரமௌலி

அண்ணா நகரில் தமிழ் இசை விழா
26-12-98 முதல் 1-1-99 முடிய

கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் (பதிவு) &
ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் நினைவு அறக்கட்டளை

இணைந்து வழங்கும்

தமிழ். இசை விழா

இடம் : வள்ளியம்மாள் மகளிர் ஜூனியர் கல்லூரி
இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர், சென்னை-600 102.

26-12-98 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் தொடக்க விழா

செட்டி நாட்டரசர் டாக்டர் எம்.ஏ.எம். ராமசாமி தலைமை வகிப்பார்கள்

பேராசிரியர். மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள்
(தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர்)

திரு. டி.வி. சங்கரநாராயணன் அவர்களுக்கு
தமிழ் இசை வேந்தர்
என்ற விருதும், ரூ.15,000/- பொற்கிழியும்,
வெள்ளித் தம்புராவும் வழங்கி
தமிழ் இசையின் தூணாகத் திகழ்ந்த
அமரர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களது 100 ஆவது ஆண்டில்
அவர்களது திருஉருவப் படத்தைத் திறந்து வைப்பார்கள்

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்
(முன்னாள் துணைவேந்தர், புதுவைப் பல்கலைக்கழகம்)
சிறப்புரை வழங்குவார்கள்

உயர்திரு. எம். நந்தகோபால்
(நிர்வாக இயக்குநர், ஓரியன் கெமிக்கல்ஸ் டிஸ்டிலரீஸ் லிட் &
இணைவேந்தர், ஸ்ரீராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழகம்)
குத்துவிளக்கேற்றி விழாவைச் சிறப்பிப்பார்கள்

திரு. வ.வே. சுப்ரமண்யம்
(பேராசிரியர் விவேகானந்தா கல்லூரி, சென்னை)
வாழ்த்துரை வழங்குவார்கள்

விழா தொடக்கத்தில், கல்கியின் புதல்வி திருமதி ஆனந்தி ராமசந்திரன்
அமரர் கல்கியின் பாடல்கள் சிலவற்றைப் பாடுவார்கள்

தொடர்ந்து தமிழ் இசை வேந்தர் டி.வி. சங்கரநாராயணன் இசை நிகழ்ச்சி

கல்கி நூற்றாண்டு விழா நிகழ்ச்சி

27-12-98 அன்று காலை 10.30 மணிக்கு

<u>சொல் அரங்கம்</u>

தலைப்பு : அமரர் கல்கியின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம்
வரலாற்று நாவல்களே!
சமூக நாவல்களே - சிறுகதைகளே!
பத்திரிகைப் பணியே!

நடுவர் : டாக்டர் ஔவை நடராசன்
(முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை)

<u>புகழ் சேர்ப்பவர்கள்</u>

டாக்டர் பூவண்ணன்	-	வரலாற்று நாவல்களே!
டாக்டர் தி.ராஜகோபாலன்	-	சமூக நாவல்களே-சிறுகதைகளே!
வழக்கறிஞர் சுமதி	-	பத்திரிகைப் பணியே!

காலை 9.00 மணிக்கு கல்யாணி சுந்தரராசன் குழுவினர் இன்னிசை
அனைவரும் வருக, வருக.

ஏ.வி.எஸ். ராஜா தலைவர்	எஸ். சபாரத்னம் கலைவிழாத் தலைவர்	ஆர். ராஜகோபால் எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி செயலாளர்கள்

புதையல்

பேராசிரியர் ப்ரேமை தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தக் காட்சிகள் அனைத்தையும் உள் வாங்கிக் கொண்டிருந்த ப்ரேமின் மனத்தில் முரணான உணர்வுகள் அலையடித்துக் கொண்டிருந்தன. தான் காண்பது கனவுதான் என்று அவனது ஒரு பக்க மனது தப்பிக்கும் மனோபாவத்துடன் சொல்லிக் கொண்டிருக்க, அவனுடைய இன்னொரு பக்கம், 'நீ இருப்பது ஒரு அதி பயங்கரத்தின் மத்தியில். ஏதாவது செய்!' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தது. இரண்டு சமமான ஆனால் நேரெதிரான தூண்டுதல்களுக்கு ஆட்பட்டு, அதனால் எந்தச் செயல்பாடும் இன்றி மற்றொரு சிலை போல ப்ரேம் நின்று கொண்டிருந்தான். பேராசிரியரின் வெறிக் குரல்தான் அவனை நிலைக்குக் கொண்டு வந்தது.

"ப்ரேம் உன்னை யார் இங்க வரச் சொன்னது?" – அவர் குரல் பூமிக்கடியில் இருந்த அந்த அறையின் சுவர்களில் பட்டு பயங்கரமாய் எதிரொலித்தது.

"அப்பா, என்னப்பா இது... என்ன பண்ணறீங்க?" – ப்ரேமின் குரல், அவன் அறியாமலே உயர்ந்திருந்தது.

"ஏன் இங்க வந்தே? உன்ன வெளியில தானே நிக்கச் சொன்னேன்..."

"ஏதோ திடீர்னு தோணி வந்தேன். வந்தது நல்லதாப் போச்சு. என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க? சோமு ஏன் இப்படிப் படுத்துக்கிட்டிருக்கான்? அவனுக்கு என்ன ஆச்சு?" ப்ரேம் இப்போது முழுவதுமாக தன்னிலைக்கு வந்திருந்தான்.

"ப்ரேம்... பதற்றப்படாம நான் சொல்றதைக் கேளு!" பேராசிரியரின் குரல் இப்போது தாழ்ந்திருந்தது.

"என்ன பண்ணீங்க சோமுவை? அவன் ஏன் இப்படிப் படுத்துருக்கான்?"

"சோமுவை நான்தான் மயக்கத்துல ஆழ்த்தியிருக்கேன், குரங்குகளை மயக்கின அதே ஸ்ப்ரே மருந்தை வச்சி. கடைசி தீப்பந்தத்தை அவன் சுவர்ல சொருகிக்கிட்டு இருக்கும்போது திடீர்னு அவன் முகத்துல ஸ்ப்ரே மருந்தை அடிச்சேன். அவன் இதை எதிர்பார்க்காததால நிறைய மயக்க மருந்தை உள்ளுக்கு இழுத்திட்டான். அதனால ஒரே நிமிஷத்துல முழுசா மயக்கமாயிட்டான்!"

பேராசிரியர் வெறித்தனமான ஒரு சிரிப்பை உதிர்த்தார். ப்ரேமால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

"அப்பா, ஏம்ப்பா இதெல்லாம். எதுக்குப்பா சோமுவை மயங்க வச்சீங்க?" தழுதழுத்த குரலில் அவன் சொன்னபோது, அவனை அறியாமலே அவன் கண்களில் கண்ணீர் திரையிட்டது.

பேராசிரியர் இவற்றை எல்லாம் கவனிக்கக் கூடிய நிலையில் இல்லை. ஏதோ ஆட்பட்டவர் போல அவர் பேசினார்.

"ப்ரேம், நீ ஒரு முட்டாள். இதுகூட இன்னமும் உன்னால புரிஞ்சிக்க முடியலையா? சோமுவை பலிகொடுத்துப் புதையலை அடையப் போறேன். அதுக்காகத்தான் சோமுவை மயக்கமடைய வச்சிருக்கேன்."

ப்ரேம் அதிர்ந்தான். அவன் உடல் நடுங்க ஆரம்பித்தது.

"என்னப்பா... சோமுவை பலியா கொடுக்கப் போறீங்க? என்னப்பா ஆச்சு உங்களுக்கு? ஒரு பூச்சியைக்கூட கொல்லத் தயங்குவீங்களேப்பா. நீங்களா... இதெல்லாம் கனவா இருக்கணும் கடவுளே..."

"இது கனவு இல்ல ப்ரேம். நிஜம். நான் இத்தனை நாளா பட்ட பாடு இப்போ பல னளிக்கப் போகுது! இந்தக் கடைசி நிமிஷச் செயல்பாடுகளை நீ ஒத்துக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும். அதனாலதான் உன்னை வெளியிலயே நிக்கச் சொன்னேன். ஆனா நீ உள்ள வந்துட்ட. பரவாயில்ல. இனிமேலா வது நீ எனக்கு ஒத்துழைப்புக் கொடு. இந்தப் புதையல் நமக்கு கைக்கு எட்டற தூரத்துக்கு வந்திடிச்சி. இவனை பலி கொடுக்க வேண்டியதுதான் பாக்கி. அதுவும் கழுத்தை எல்லாம் வெட்ட வேண்டாம். நெஞ்சுல கத்தியைச் சொருகி அந்தச் சிலை முன்னாடி இருக்கற பள்ளத்துல தள்ளி விட்டுட்டா போதும். புதையல் நமக்குக் கிடைச்சிடும்."

"வேண்டாம்ப்பா. ஒரு மனித பலியை கொடுத்து, அதுவும் நம்மோடு பழகின ஒருத் தனை பலியாக் கொடுத்து, இந்தப் புதை யலை அடைய வேண்டாம்ப்பா!" ப்ரேம் பேராசிரியரை நெருங்கினான்.

"ப்ரேம், அங்கேயே நில்லு. கிட்ட வராதே. எனக்கு சோமு முக்கியமில்ல. எனக்கு இந்தப் புதையலை அடையறதுதான் முக்கியம். உண்மையில எனக்கு இந்தப் புதையல்கூட வேண்டாம் ப்ரேம். இந்தப் புதையலை அடையறதுதான் எனக்கு வெற்றி. ஆயிரம் வருஷங்கள் முன்னாடி இருந்தவங்க எனக்கு வச்சிருக்கிற சவால் இது. இதுல நான் ஜெயிச்சிக் காட்டணும். எனக்கு இந்தப் புதையல்ல இருந்து ஒரு பைசா வேணாம். எல்லாத்தையும் நீயே எடுத்துக்கோ. ஆனா என்னை இந்தப் புதையலை ஆட்கொள்ள விடு. இந்த சவால்ல என்னை ஜெயிக்க விடு."

"அப்பா..." - ப்ரேம் உரக்கக் கத்தினான். "நீங்க இப்ப மனுஷனாவே இல்ல. புத்திக் கூர்மையுள்ள ஒரு மிருகம் மாதிரி பேசறீங்க. உங்க ஈகோவை திருப்தி செய்யறதுக்காக ஒரு மனித பலியைக் கொடுக்கணுமா? நீங்க சவால்ல ஜெயிக்கணுங்கறதுக்காக ஒரு மனிதன் உயிரைத் தரணுமா? ப்ளீஸ்.. மனுஷனாய் இருந்து பேசுங்கப்பா!"

"ப்ரேம். நீ என்ன பேசினாலும் என்னை மாத்த முடியாது. நான் இந்தப் புதையலை ஜெயிச்சே ஆகணும்!" என்றவாறு பேராசிரியர் தம் கையில் இருந்தக் கத்தியை சோமுவின் மார்பிற்காக ஓங்கினார்.

அனிச்சையாக ப்ரேம் இயங்கினான். தம்



கையில் இருந்த தீப்பந்தத்தைப் பேராசிரியர் மேல் வீசினான். கத்தியை ஓங்கியிருந்த பேராசிரியர், தீப்பந்தம் வருவதை உணர்ந்தார். குத்தும் முயற்சியைக் கைவிட்டு இடதுகையால் முகத்தை மறைத்துக் கொண்டார். தீப்பந்தம் அவர் இடது கையில் பட்டு நிறைய தீப்பொறிகளைக் கிளப்பியவாறு தரையில் விழுந்தது. சூடு பட்ட தன் கையைத் தடவியவாறு சற்றே பேராசிரியர் நிலை குலைந்தார். அந்தச் சில கணங்கள் ப்ரேமிற்குப் போதுமானதாய் இருந்தது.

அவன், வேகமாய், கத்தியிருந்த பேராசிரியரின் வலது கையைப் பற்றிக் கொண்டான். அங்கு ஒரு துவந்த யுத்தம் ஆரம்பமானது. பேராசிரியரின் வலிமையைப் ப்ரேம் உடனே புரிந்துகொண்டான். இரும்பைப் போல இருந்த அந்தக் கைகளில் இருந்து கத்தியைப் பறிக்கும் முயற்சி பயனற்றது என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

''ப்ரேம், உன்னால முடியாது. விட்டுடு...'' என்றார் பேராசிரியர்.

ஆனாலும் விடுவதாக இல்லை. மனிதாபிமானமும் நட்பும் கடைசி வரை போராட வேண்டும் என்ற உணர்வை அவனுக்குக் கொடுத்தன. அவன் தன் தந்தையின் கை மீதான தமது பிடியை அழுத்தமாக்கினான். பேராசிரியரும் தன் முழு பலத்தையும் பிரயோகித்து கையை விடுவிடுத்துக் கொள்ள முயன்றார். அப்போது தான் அந்தச் சம்பவம் நிகழ ஆரம்பித்தது.

தளர்வான மண் தரையில் அழுந்தி நின்ற ப்ரேமின் கால்கள் சறுக்கின. அவன் தன்னை விட உயரமாக இருந்த தன் தந்தையின் கையில் ஒரு சாய்வான கோணத்தில் அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்ததால், கால்கள் சறுக்கியதும் அவன் முற்றிலுமாக நிலைகுலைந்தான். வெகு வேகமாகச் சறுக்கிய அவன் கால்கள் தரையில் தேய்த்துக் கொண்டு போய் மிக பலமாகப் பேராசிரியரின் கால்களின் மீது மோதின. தன் கைகளை விடுவித்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பேராசிரியரும் நிலையற்ற தன்மையில் இருந்தார். ப்ரேமின் கால்கள் அவருடைய கால்களின் மீது மோதியதும் அவரும் நிலைகுலைந்தார்.

தன் கால்களின் ஆதாரம் இல்லாமல் ஒருகணம் ப்ரேம் தன் தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். ஆனால் நிலைகுலைந்து கொண்டிருந்த பேராசிரியரால் அவனுடைய கனத்தைத் தாங்க முடியவில்லை. அவர் சரிய ஆரம்பித்தார்.

முதலில் ப்ரேம் தரையில் விழ, பேராசிரியர் அவன் மேல் விழுந்தார். விழும் போதே பேராசிரியர் தன் கத்தியில் இருந்து வந்த அதிர்வை உணர்ந்து கொண்டார். திடீரென்று திகிலும் பதற்றமும் அவரைப் பீடிக்க, அவர் தடுமாற்றத்துடன் எழுந்து கொண்டார். ப்ரேமை விரிந்த கண்களுடன் பார்த்தார்.

ப்ரேம் சற்று நேரம் சலனமில்லாமல் படுத்திருந்தான். பின்னர் மெல்ல சற்று தடுமாற்றத்துடன் எழுந்தான். பேராசிரியர் கையில் இருந்த கத்தி அவன் மார்பில் ஆழமாகப் பாய்ந்திருந்தது. சடாரென்று தடுமாறிய பேராசிரியர் எட்டிப் பிடித்தார்.

"ப்ரேம்...ப்ரேம்..." பேராசிரியருக்கு வார்த்தைகள் குழறின. "சாரி ப்ரேம், சாரி. தெரியாம உன் மேல கத்தி பாஞ்சிடிச்சி!" பேராசிரியரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது. அவர் ஓலமிட ஆரம்பித்தார்.

பேராசிரியரின் பிடியில் இருந்து விலகிய ப்ரேம், பேராசிரியரைப் பார்த்தவாறு பின்பக்கமாக நடந்தான்.

"அப்பா! இப்ப சந்தோஷமா அப்பா. இனி உங்க சவால்ல நீங்க ஜெயிக்கலாம்ப்பா!"

ப்ரேம் சிலைக்குத் தன் முதுகைக் காட்டியவாறு நடந்து, சிலையின் முன் இருந்த பள்ளத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். பேராசிரியர் பிரமித்துப் போய் இருந்தார். அந்தச் சமயத்திலும் ப்ரேம் அந்தப் பள்ளத்தை நெருங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்க வேண்டும்.

''ப்ரேம், பள்ளம் ப்ரேம். பார்த்துப் ப்ரேம்...'' - இயங்க மறுத்த அவர் தொண்



"உன்கிட்ட வாங்கின கடனைத்தான் குடுத்துட்டேனே... மறுபடி வந்து ஏன் கேட்கறே?"

"ராசி பலன்ல ஞாபக மறதியால் பணவரவுன்னு போட்ருந்துச்சு... அதான் ட்ரை பண்ணிப் பார்த்தேன்!"

— அம்பை தேவா

டையில் இருந்து வார்த்தைகள் இரகசியமாய் வெளி வந்தன. அவை ப்ரேமை போய்ச் சேரவில்லை. ஒரு ஏக்கத்துடன் தன் தந்தையைப் பார்த்தவாறு கத்தி புதைந்திருந்த தன் மார்பைப் பிடித்தவாறு அவன் பின்னால் அந்தப் பள்ளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

ஒரு கால் பள்ளத்தின் விளிம்பில் வைக்கப்பட, அடுத்த கால் பள்ளத்தின் மேலே ஒருகணம் நின்று கீழிறங்க, ப்ரேம் அந்தப் பள்ளத்தில் விழுந்தான்.

பள்ளத்தில் விழுந்து ப்ரேம் தன் பார்வையில் மறைந்து விட்ட பிறகும் பேராசிரியர் இயங்கவில்லை. திக் பிரமையுடன் அவர் கண்கள் ப்ரேம் இருந்த இடத்தையே வெறித்துக் கொண்டிருந்தன. அவர் உதடுகள் "ப்ரேம்.. ப்ரேம்" என்ற வார்த்தைகளை சப்தமில்லாமல் உச்சரித்துக் கொண்டிருந்தன.

ஒரு மெல்லிய நடுக்கத்துடன் அவர் உடலில் இயக்கம் வந்தது. ஒரு பிரேதம் போல் அவர் நடந்து சென்று அந்தப் பள்ளத்தின் விளிம்பிற்கு வந்தார். தம் தலையைச் சாய்த்து, அந்தப் பள்ளத்தின் உள்ளே பார்த்தார். ஒரு எட்டடி ஆழத்தில் இருந்த அந்தப் பள்ளத்தின் தரையில் ப்ரேம் மல்லாந்து விழுந்து கிடந்தான். அந்தப் பள்ளத்தின் தரையில் இருந்த சிறிய துவாரங்கள் வழியாக அவன் மார்பில் இருந்து வழிந்த இரத்தம் உள் இறங்கிக் கொண்டிருந்தது.

சில கணங்களில் அந்த மெல்லிய அதிர்வு உண்டானது. அந்த மண்டபத்தின் தரைகள், சுவர்கள் மற்றும் கூரையும் லேசாக அதிர்ந்தன. பின்னர் அந்தப் பள்ளத்தின் நேர் மேலே இருந்த கூரை ஓர் அடி வட்டமாகப் பிளந்தது பிளவுபட்ட அந்த வட்டப் பகுதி சட்டென்று உள்வாங்கி மறைய, அந்தக் கூரையில் ஒரு வெற்றிடம் உருவானது.

அந்த வெற்றிடத்தின் உள்ளிருந்து முதலில் சில மணல் துகள்கள் வெளிவந்து விழுந்தன. பின்னர் ஒன்றிரண்டாக, பின்னர் ஒரு சிறிய தாரையாகத் தங்கக் காசுகள் விழ ஆரம்பித்தன. சற்று நேரத்திலேயே பெருந்தாரையாக அந்தக் காசுகள் அந்தச் சிலையின் முன்னிருந்த பள்ளத்தில் கொட்டின.

தீப்பந்தங்களின் ஒளியில் மின்னிக் கொண்டு விழுந்த அந்தக் காசுகளை பேராசிரியர் பார்க்கவில்லை. அவர் பார்வை எல்லாம் சலனமற்று அந்த பள்ளத்தின் உள்ளே கிடந்த அவர் மகனின் உடல் மேலேயே இருந்தது. அந்த உடல் மேலிருந்து கொட்டிய காசுகளால் கொஞ்சம் கொஞ்சமாக மூடப்படுவதைப் பார்த்தார். கத்தி புதைந்து கிடந்த அவன் மார்பில் மேல் கொட்டிய காசு சிதறிப் போய் அந்தப் பள்ளத்தின் தரையை நிறைத்தது.



"உங்க வியாதிக்கு நாட்டு மருந்து சாப்பிடறதுதான் நல்லதுன்னு டாக்டரே சொல்லிட்ட பிறகு ஏன் யோசிக்கறீங்க; வாங்கிச் சாப்பிட வேண்டியதுதானே?"

"எந்த நாட்டு மருந்துனு கேட்க மறந்துட்டேன்!"

— கபிஸ்தலம் எஸ். இராஜேந்திரன்

சற்று நேரத்தில் அவன் உடலை மறைக்க ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாக ப்ரேமின் உடல் அந்தக் காசு மழையில் புதையுண்டு போனது. அவன் மார்பில் புதையுண்டு கிடந்த கத்தியில் பிடி மட்டும் கூடுதலாக சற்று நேரம் தெரிந்து கொண்டிருந்தது. பின்னர் அதுவும் மறைந்து போனது.

வெகு நேரம் அந்தக் காசுத் தாரை நிற்கவில்லை. பள்ளம் நிரம்பியதும்தான் அந்தத் தாரை மெல்ல குறைய ஆரம்பித்து, தேய்ந்து நின்றது. கடைசியாக விழுந்த சில காசுகள், நிரம்பி இருந்த பள்ளத்தின் மேல் இருந்த காசுகளின் மேல் பட்டுத் தெறித்து அந்த மண்டபம் பூராவும் சிதறி ஓடின.

தம் முன்னால் குவித்திருந்த புதையலை பேராசிரியர் தன் மகனின் பேரை சத்தமில்லாமல் உச்சரித்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் அந்த உச்சரிப்பும் நின்று போனது. அவர் மெல்ல தரையில் உட்கார்ந்தார். தன் இரு கைகளாலும் தம் முன்னால் இருந்த குவியலில் இருந்து காசுகளை எடுத்தார். பின்னர் தன் விரல்களின் வழியே அவற்றை வழிய விட்டார்.

பின்னர் சிரிக்க ஆரம்பித்தார்.

சோமு மயக்கத்தில் இருந்து எழுந்த போது பேராசிரியரின் தொடர்ச்சியான வெறிச் சிரிப்பு, அந்தப் பாதாள மண்டபத்தின் சுவர்களில் மோதி மோதி எதிரொலித்துக் கொண்டிருந்தது.

(முற்றும்)

இரண்டு வருஷம் முன்பே தயாராகி, புது தில்லியில் நடந்த திரைப்பட விழாவில் தலை நீட்டிய படம். இப்போதுதான் சந்தைக்கு வந்து முழு உடம்பையும் நீட்டி கலாசாரக் காவலர்களுக்குத் தாங்க முடியாத குளிர் ஜுரம் ஏற்படுத்தியுள்ளது.

புது தில்லியில் வசிக்கிற ஒரு சாதாரணக் குடும்பத்தின் மூத்த மருமகள் ஷபானா ஆஸ்மி. புதிதாகக் கல்யாணமாகி வரும் இரண்டாவது மருமகள் நந்திதா. இவர்களுக்கு வாய்த்திருக்கும் கணவன்கள் இரண்டு பேரும் தீவிர பக்தர்கள். முதலாமவர் ஒரு குருஜியின் பக்தர். பூஜை, பஜனை, பக்தி என்று பொழுதை ஓட்டி, மனைவி என்கிற பிரகிருதியை ஏகதேசம் மறந்திருப்பவர்.

அடுத்தவரின் பக்தி ஒரு ஹாங்காங் பெண்ணின் மீது! இவருக்குக் காதலாகிக் கசிந்துருகவெல்லாம் தெரியும். ஒரே பிரச்னை, அந்தக் காதல், மனைவியின் மீது இல்லாமல் அந்த ஹாங்காங் மாங்குயிலின் மீது மட்டும் இருப்பது!

ஆக, கணவன்களால் புறக்கணிக்கப்படும் இந்தப் பெண்கள் இரண்டு பேரும் எப்போதும் ஒரே வீட்டில் தனியாக இருக்கிறார்கள். உறவு நட்பாக மாறி, நட்பு காதலாகி, அது விபரீதமாக ஓரினச் சேர்க்கையில் முடிகிறது.

விஷயம் வெளிப்படையானதும் இரண்டு பெண்களும் தத்தம் கணவன்களை மானசிகமாக விவாகரத்து பண்ணிவிட்டு, தனியாகச் 'சேர்ந்து வாழ' வெளியேறுவதுடன் முடிகிறது கதை.

Fire, தன்னளவில் அதிர்ச்சி தரும் படம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், காம சூத்ரா மாதிரி வெறுமனே செக்ஸுக்காக எடுக்கப்பட்ட படம் என்று இதை ஒதுக்கி விட முடியாது.

கணவர்களால் புறக்கணிக்கப்படும் பெண்கள் பொதுவாக நம் படங்களில் ஆரம்பம் முதல் கடைசிவரை அழுது கொண்டு இருப்பார்கள். அல்லது தற்கொலை பண்ணிக்கொண்டு விடுவார்கள். அல்லது வடிகட்டிய தூய அன்பால் தம் கணவனைத் திருத்தி விடுவார்கள்.

இந்த மூன்று சினிமாத்தனமான சாத்தியங்களையும் ஒதுக்கிவிட்டு யோசித்திருக்கிறார் டைரக்டர் தீபா மேத்தா. ஹீரோயின்கள் இருவரும் லெஸ்பியன்களாக மாறுவதுகூட கதையோட்டத்தில் சட்டென்று மடலவிழும் விஷயமாகத்தான் இருக்கிறதே தவிர, மலிவான உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காகத் திணிக்கப்பட்டதாக இல்லை.

தீவிரமான புறக்கணிப்பால் மன அழுத்தத்துக்கு உள்ளாகிற பெண்களாக ஷபானா மற்றும் நந்திதா. குறைவான – அதேசமயம் ஷார்ப்பான வசனங்கள். பெரும்பாலும் கண்களாலும் உதடுகளாலுமே நடிக்க வேண்டிய கட்டாயம். மிகத் திறமையாகச் செய்திருக்கிறார்கள்.

விஷயம் தெரிந்து, 'பாதகி!' என்று கணவன் போட்டுப் பின்னி எடுத்த பிறகு, நிலை குலைந்த கோலத்தில் ஷபானா பார்க்கிற ஒரு பார்வையில் முழுப் படத்தின் தகிப்பும் இறங்கி, திரை வழியே பிரவகித்து வந்து, பார்க்கிறவர் நெஞ்சைப் பொசுக்குகிறது!

படத்தின் ஒரே குறை அந்த வக்கிர சொரூபமான வேலைக்காரன் பாத்திரம். அந்தப் பாத்திரம் இல்லாமலேகூட, படம் தன்னளவில் சொல்ல வேண்டியதைச் சிறப்பாகவே வெளிப்படுத்தியிருக்கிறது.

ஏ.ஆர். ரஹ்மானின் திறமையான பின்னணி இசை, பொருத்தமான லைட்டிங், கூர்மையான எடிட்டிங் என்று ரசனைக்கு விருந்தாகப் பல விஷயங்கள் உண்டு.

இறுக்கமான சூழ்நிலையில் பெண்கள் இப்படித்தான் மாறிப் போவார்கள் என்ற அச்சுறுத்தல் அல்ல இப்படம்... இப்படியும் நடக்கலாம் என்ற எச்சரிக்கைதான்.

— ஆர்.பி.ஆர்





1998 டிசம்பர் 27
வெகுதான்ய மார்கழி 12
மலர் : 57
இதழ் : 22

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.


பி.ஜே.பியின் பல்டி!

துணை சபாநாயகர் சயீதுக்கு இரட்டை வாழ்த்துக்கள்! முதல் வாழ்த்து- தேர்தலில் வெற்றி பெற்றதற்காக; இரண்டாவது... நீண்ட நெடுங்காலத்துக்குப் பிறகு அரசியல் வேறுபாடுகளை மறந்து மக்களவைக் கட்சிகள் ஒன்றுபட்ட முடிவெடுக்கக் காரணமாயிருந்ததற்காக!

சையீத் புதிய பொறுப்புக்குப் பல வகைகளிலும் தகுதியானவர் என்பதை அனைத்துத் தரப்பினரும் ஏற்கின்றனர். பிரதமரே அவர் பெயரை முன்மொழிய, எதிர்க்கட்சித் தலைவர் பவார் வழிமொழிந்திருக்கிறார்.

ஒன்பது மாதகால இழுபறிக்குப் பிறகுதான் பி.ஜே.பி. இந்த முடிவுக்கு வந்தது. தமது கட்சி வேட்பாளரான ரீடா வர்மாவை துணை சபாநாயகர் தேர்தலில் நிறுத்தவே முதலில் திட்டமிட்டிருந்தது. பி.ஜே.பியுடைய கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு இந்த வேட்பாளருக்கு இல்லை என்பதை உணர்ந்ததால், வேறு வழியின்றி வாஜ்பாய் சையீதையே ஆதரிப்பது என்று முடிவெடுத்தார். ஒரு முஸ்லிம் வேட்பாளரான சையீதை எதிர்ப்பதைக் காட்டிலும் ஏற்பதே பி.ஜே.பிக்கு ராஜதந்திரமாக அமையும் என்றும் அவர் கருதியிருக்கக் கூடும்.

சபாநாயகர் தேர்தலின்போதும் தெலுங்கு தேசத்தின் ஆதரவுக்கு விலையாக, சமரசம் செய்து கொண்டு பாலயோகியை சபாநாயகராக ஏற்றது பி.ஜே.பி. இன்று துணை சபாநாயகர் தேர்வில் சமரசம் செய்து கொண்டுள்ளதும் ஆட்சியில் நீடிப்பதற்கான யுக்திதான்.



நிர்வாகம் தடையின்றி நடைபெறுவதற்காகவும் பி.ஜே.பி. ஆட்சி சில சமரசங்களைச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.


பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா, இன்ஷுரன்ஸ் துறையில் அயல்நாட்டினர் முதலிட்டை அனுமதிக்கும் மசோதா ஆகியன பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் ஆய்வுக்கு விடப்படுகின்றன.

பெண்கள் ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்குத் தனி ஒதுக்கீடு தேவை என்று சில கட்சிகள் வாதாடுகின்றன. இன்ஷுரன்ஸ் துறை தனியார் மயமாக்கலில் எத்தனை சதவிகிதம் அன்னிய முதலீடு அனுமதிக்கப்படலாம் என்பது பற்றியும் கருத்து வேறுபாடுகள் தென்படுகின்றன. இந்த விவாதங்களின் இறுதியில் தோன்றும் முடிவுகளின் அடிப்படையில் மசோதாக்கள் சட்டமாகும் என்று எதிர்பார்க்கலாம். பி.ஜே.பி. விரும்பிய இறுதி வடிவம் இந்தச் சட்டங்களுக்குக் கிடைக்காமலே போகும் வாய்ப்புகள்தான் அதிகம்.

துணைசபாநாயகர் தேர்வில் செய்து கொண்ட சமரசத்தை வரவேற்று மகிழலாம். ஆனால், சர்ச்சைக்குரிய இரு மசோதாக்களில் தேச நலனுக்கு விரோதமாகச் சமரசம் செய்து கொள்வதை அனுமதிக்கலாகாது. அதிலும் பெண்களுக்கான ஒதுக்கீட்டு மசோதாவே அபாயகரமானது; அந்த ஒதுக்கீட்டினுள் ஒதுக்கீடுகளை அனுமதிப்பது மேலும் மேலும் மனக் கசப்புகளையும் ஜாதி வேற்றுமை உணர்வுகளையும் குழப்பங்களையும்தான் விளைவிக்கும். இதைவிட, மசோதாவை ஆளுங்கட்சி வாபஸ் வாங்கிக் கொண்டு விடலாம்.

இது விஷயத்தில் பி.ஜே.பியை எச்சரிப்பதோடு மற்றொரு மாபெரும் சமரசத்தைச் செய்து கொண்டதற்காக அக்கட்சியைக் கண்டனம் செய்யவும் வேண்டியிருக்கிறது.

தமிழகத்தில் ஜெயலலிதா தொடர்பான வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் தமிழக அரசால் நிறுவப்பட்டதை நாம் அறிவோம். மூன்று மாதங்களுக்கு முன்பு, மத்திய அரசு தமிழக அரசின் இந்த நடவடிக்கையை ஆமோதித்து ஏற்றது. ஆனால், இம்மாத ஆரம்பத்தில் மத்திய அரசு காதும் காதும் வைத்தாற்போல் ஒரு காரியம் செய்தது. ஓசைப்படாமல்



உச்சநீதிமன்றத்தில் ஒரு தாக்கீது சமர்ப்பித்து, சிறப்பு நீதிமன்றம் குறித்த தனது ஆதரவு நிலையை அப்படியே வாபஸ் வாங்கிக் கொண்டது! அதாவது, உயர் பதவி வகித்தவர்களின் பேரில் உள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவ மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு என்பதை மத்திய அரசு இப்போது ஏற்க மறுக்கிறது!

மத்திய அரசின் இந்தத் தாக்கீது மீது உச்சநீதிமன்றம் விசாரணை நடத்தி தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, மத்திய அரசின் திடீர் பல்டிக்கு என்ன காரணம்...?

தி.மு.க. எம்.பி.க்கள் குழு ஒன்று இந்த பல்டியை ஆட்சேபித்து பிரதமருக்கு மனு கொடுத்திராவிட்டால் இந்த பல்டி செய்தி வெளிப்படையாகத் தெரியவர இன்னும் பல நாட்கள் ஆகியிருக்கக் கூடும்.

சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவ மாநில அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தைத் தட்டிக் கேட்க திடீர் அவசியம் ஏற்பட்டது ஏன்?...

அ.தி.மு.க. தலைவியின் ஆதரவு இன்றி பி.ஜே.பி. மத்திய அரசில் தொடர முடியாது என்பதால் செய்து கொண்ட மிகப் பெரிய சமரசமே இந்தக் குட்டிக் கரணம்.

நாட்டின் ஒட்டுமொத்த நலன் கருதி கட்சிக் கொள்கைகளில் செய்து கொள்ளும் சமரசங்களை வரவேற்கலாம். ஆனால், தார்மிகக் கொள்கைகளான நேர்மை, உண்மை, போன்றவற்றைக் காற்றில் பறக்கவிடும் சமரசங்கள், கட்சியை மட்டுமின்றி நாட்டையே அழிவுப்பாதை நோக்கித்தான் அழைத்துச் செல்லும்.

சிறப்பு நீதிமன்ற விசாரணைகளுக்கு ஜெயலலிதா போடும் முட்டுக்கட்டைகள் போதாதென்று, மத்திய அரசுவேறு தடைக்கற்களை அறிமுகப்படுத்துமானால், நாட்டில் நீதி நேர்மை என்பனவற்றுக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். பி.ஜே.பி. அரசு இத்தகைய கோழைத்தனமான சமரசத்துக்குத் தாழ்வது கேவலமோ கேவலம்!

— ஒரு புலனாய்வு ரிப்போர்ட்

நூறு சதவீதம் சுத்தமான பெட்ரோல், – 'பங்க்' விலையை விடக் குறைச்சலாக வேண்டுமா? உடனே வண்டியை எடுத்துக் கொண்டு கோவை புறநகர்ப் பகுதிகளான இருகூர், குளத்தூர், நீலம்பூர், சிந்தாமணிப் புதூர், சின்னியம்பாளையம் பகுதிகளுக்கு வாருங்கள்! சிறு சிறு ஆயில் கடைகள், சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ் கடைகள், ஆட்டோ மோபைல் ஒர்க் ஷாப்புகள், ஏன் சில மளிகைக் கடைகளில் (உபயம்: சில ஆட்டோ டிரைவர்கள் கூறியது) கூட கேளுங்கள். மார்க்கெட் ரேட்டைவிட 2.50 ரூபாய்வரை மலிவாகக் கிடைக்கிறது. மொத்த வியாபாரம் என்றால் கணக்கே தனியாம்.

எப்படி?

வேறொன்றுமில்லை; டிப்போவில் நிரப்பப்பட்டு சீலிடப்படும் பெட்ரோல், டீஸல், மண்ணெண்ணெய் லாரிகள் பத்திரமாக அதனை 'பங்க்'களில் சேர்ப்பிப்பதற்கு முன்பாக கொஞ்சத்தை வழியிலேயே உறிஞ்சி, இப்படிப்பட்ட சிறு பெட்ரோல் வியாபார ஸ்தலங்களை உருவாக்கி, பொது மக்களுக்கு நற்சேவை புரிகின்றன!

சீலிட்ட லாரிகளில் பெட்ரோலியப் பொருட்கள் உறிஞ்சப்படுவதாவது? சிறுசிறு கடைகளில் பெட்ரோல் விற்கலாமா? பாதுகாப்பில்லாத இடத்தில் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருள்களை வைத்திருப்பதால் எப்படிப்பட்ட பின்விளைவுகள் ஏற்படக் கூடும் என்கிற அசட்டு பிசட்டு கேள்விகளையெல்லாம் கொஞ்சம் ஒதுக்கிவிட்டு, நம்முடன் வாருங்கள்.

கோவை புறநகர்ப் பகுதியான இருகூர் அத்தப்ப கவுண்டன்புதூரில் ஐ.ஓ.சி (Indian Oil Corporation), ஹெச்.பி.சி (Hindustan Petroleum Corporation) பெட்ரோலியக் கிடங்குகள். அதனை ஒட்டியே உருவாகும் மிகப் பெரிய புறவழிச்சாலை. அங்கிருந்து நேரே கிழக்கே வந்து வடக்கே திரும்பினால் சிறு சிறு குக்கிராமக் கடைகள். குறிப்பாகச் சில கடைகளில் பெட்ரோல் விற்பனை. சுமார் இரண்டு கி.மீ தூரத்தில் இருகூர் மெயின் ரயில்வே கேட். கிழக்குப்புறம் சாலைக்குச் சம்பந்தமில்லாத காட்டுப்பகுதியில் திடீரென தடம் மாறிச் செல்லும் பெட்ரோல் லாரிகள். அங்கிருந்து நூறு மீட்டர் தூரத்தில் ஒரு குடோன். அங்கே லாரிகள் அடைக்கலமாவதும், கிளீனர்கள் வேகமாய் பெட்ரோல் பிடிப்பதும், சில ஆட்கள் வேகமாய் வாங்கி நகர்வதும்– சுற்றிலும் கண்காணிக்க ஆட்கள் வேறு. கிட்டே நெருங்கினால் . 'ஏன், எதற்கு, எட்டப்போ..' எனத் துரத்துகிறார்கள். சுற்றிலும் நிறைய குடியிருப்பு. யாரும் அதைப் பெரிதாய் எடுத்துக் கொள்ளக் காணோம். பல ஆண்டுகளாய் நடப்பதால் இயல்பாகிப் போனதாம்.

அது தவிர்த்து, வடக்குப் பக்கம் வந்த வழியிலேயே பயணித்து அசுபுதூர் – நீலம்பூர் சாலையில் திடீரென நிற்கும் லாரி. (3 கி.மீ




• பெட்ரோல் எடுப்பதற்காகச் சம்பந்தமில்லாத இடத்தில் நிற்கும் லாரிகள்.. (இருகூர் ரயில்வே கேட் அருகில்)

அமோகமாக நடக்கும் பெட்ரோல் திருட்டுகள்!

தூரத்தில் - ஹெச்.பி.சி குடோனிலிருந்து) அதற்காக கேனுடன் காத்திருக்கும் ஓரிருவர். ஓடிப் போய் 'சரக்கைப்' பிடித்து, 'சில' பரிமாற்றங்களை நிகழ்த்தி, ஸ்கூட்டரில் வைத்துப் பறக்கும் வேகம்.

"இந்த அக்கிரமம் மூணு - நாலு வருஷமா நடக்குதுங்க. முதல்ல இங்கே ஒரு தகரக் கொட்டகை போட்டே பெட்ரோல் புடிச்சிட்டிருந்தாங்க. இந்த இடத்துக் காரரே ஒரு லாரி ஓனர். இங்கே கொட்டகை



• வெங்கிட்டாபுரத்தில் லாரியிலிருந்து நடக்கும் பெட்ரோல் திருட்டு..



போட்டு சம்பாதிச்சே வாடகைக்கு எடுத்த நிலத்தை விலைக்கு வாங்கிட்டார்னு ஊருக்குள்ளே பேச்சு. (சுமார் ஒன்றரை ஏக்கராம் - 10 லட்சமாம்). என்னாச்சோ ஏதாச்சோ திடீர்னு ஒருநா சில பேர் வந்தாங்க. அந்த ஷெட்டை இடிச்சுட்டுப் போயிட்டாங்க. அப்புறம் இப்படித்தான்! ரோட்ல ரெண்டு பேர் ஸ்கூட்டர்ல காத்துட்டிருப்பாங்க. வண்டி வந்ததும் கிளீனர் தயாரா இறங்கி ஓடிவந்து டேங்கை திறப்பான். புடிச்சதும் கையில காசு. கேன்ல பெட்ரோல். ரொம்ப ஒண்ணும் இல்லீங்க... ஆறு லிட்டர் கொள்ளளவு கொண்ட மூணு கேன் பெட்ரோலின் விலை வெறும் நூத்தம்பது ரூபாய்தானாம். நானே பலதடவை அவன்கிட்டே கேட்டிருக்கேன்...!" என்றார், அப்பகுதியில் மாடு மேய்க்கும் ஒரு பெரியவர்.

அங்கே ஒரு 'ஸ்டோரேஜ்' இருந்ததை ஒரு தினசரி பத்திரிகை சில மாதங்களுக்கு முன் மோப்பம் பிடித்து எழுதப் போக உடனே ஸ்டோரெஜ் ஷெட் தகர்க்கப்பட்டதாகவும் அதன் பின் கொஞ்ச நாள் பெட்ரோல் திருட்டு தவிர்க்கப்பட்டதாகவும் இப்போது மீண்டும் தொடர்வதாகவும் ஓர் இளைஞர் சொன்னார்.

அங்கிருந்து கொஞ்சம் ரிவர்ஸ் கியர் அடித்துத் திரும்பி ஒரு பர்லாங் பயணித்து மேற்காகத் திரும்பினால் வெங்கிட்டாபுரம் என்ட்ரன்ஸ். அங்கே பகிரங்கமாக பெட்ரோல் திருடும் ஸ்டோரேஜ்! சாலையில் காத்திருக்கும் பெட்ரோல் லாரி. சாலையின் இடதுபுறம் கொஞ்சம் உள்ளே தள்ளி ஓர் உயரமான ஓலை மறைப்பு. அதன் மறைவில் உள்ளே சென்று பெட்ரோல் உபயம் கொடுக்

கும் லாரி. ஒரு லாரி முடித்து விட்டுப் பறந்தால் இன்னொரு லாரி உள்ளே நுழைகிறது. வெளியே தயார் நிலையில் அக்கம் பக்கம் கண்காணித்தபடி ஒரு ஜீப். கொஞ்சம் மண்ணெண்ணெய் பேரல்கள். வெளியிலிருந்து பார்த்தால் சுத்தமாய்த் தப்பே நடக்காத மாதிரி தோற்றம்.

"முதல்ல வெறும் கேன்லதான் பிடிச்சிட்டு இருந்தாங்க. இப்ப பேரல் பேரலா ஜீப்புல போகுது. வம்பு வழக்கு வந்திடும்னு உள்ளூர்ல யாரும் நாங்க இதை வாங்கறதில்லே. கண்டிப்பா இதுக்குப் பின்னாடி முக்கியமானவங்க இருக்கணும். ஏன் தம்பி, தெரியாமத்தான் கேட்கிறோம். எல்லா இடத்துலயும் சீல் வச்சு வர்ற லாரியில ஓப்பன் பண்ணி திரும்ப சீல் வைக்கறதுன்னா சும்மா நடக்குமா?"

– நம்மையே திருப்பிச் சந்தேகம் கேட்டனர் இப்பகுதி மளிகைக் கடையில் சிலர்.

சரி, இதனால் பெரும் பாதிப்படைவது 'பங்க்'காரர்களாயிற்றே... அவர்கள் என்ன செய்கிறார்கள்?

"எங்க இருபது வருஷ அனுபவத்துல மூணு வருஷமாத்தான் சார் எங்களுக்கு மாசம் 500-600 லிட்டர் 'ஷார்ட்டேஜ்' வருது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். வேற வழியில்லாம நாங்களே ஒரு ஆள் டெப்போவுக்குப் போய் லாரிகூட வர ஆரம்பிச்சிருக்கோம். இப்படி நாங்களேகூட வரும் போது டிரைவர்கள் இடக்குக் காட்டறாங்கதான். இருந்தாலும் விடாப்பிடியா சகிச்சுக்கிட்டுச் சமாளிக்கிறோம்."–அவினாசி சாலையில் ஒரு 'பங்க்'காரர் புத்திசாலித்தனமாய் இப்படிச் செயல்பட்டாலும், பெரும்பாலானவர்களால் அப்படி முடிவதில்லையாம்.

"நாங்க பெட்ரோல் கொண்டு வரும் லாரி டிரைவர் – கிளீனர்களுக்கு ஒரு ட்ரிப்புக்கு 100 ரூபாய் மாமூல் கொடுக்கவும் செய்கிறோம். என்றாலும் இந்தத் தப்பு நடக்குது. அசோசியேஷன் மூலமா பேசணும். அடையாளத்திற்கு ஒரு மணி நேரமாவது டோக்கன் ஸ்டிரைக் பண்ணணும்னுதான் இருக்கோம்!" என்றனர் பெரும்பாலான 'பங்க்'காரர்கள்.

பொதுவாக லாரிகளில் வரும் பெட்ரோல் கால் மணி நேரம் கழித்தே அளவு கோலை வைத்து செக் செய்யப்படுகிறதாம். என்றாலும் பெட்ரோலியப் பொருள்களின் விரியும் தன்மையினால் ஒரு லாரியில் இருபது லிட்டர் பெட்ரோல் அளவுகளை துல்லியமாகக் கண்டுபிடிக்க முடிவதில்லை. அதற்கு அதிகமாகப் பெட்ரோல் எடுக்கப்பட்ட லாரிகளில் மண்ணெண்ணெய், டீசல் அல்லது மலிவு விலையில் கிடைக்கிற டர்பன்டைன் போன்றவற்றைக் கலந்து விடுகிறார்கள் – இதனால் பெட்ரோல் தரம் குறைந்து பெயர் கெடுவதாகவும் சில பங்க்காரர்கள் சொன்னார்கள்.

ஒரு லாரியில் குறைந்த பட்சம் இருபது லிட்டர் பெட்ரோல் எடுக்கப்படும்பொழுது மாதம் முப்பது லோடு வாங்குகிற ஒரு பங்கிற்கு அது சட்டென்று தெரியாது. அறுநூறு லிட்டர் குறையும்போதுதான் விவரமே தெரிய வரும்! ஒரு நாளைக்கு ஒரு டெப்போவிலிருந்து நூறு லோடு சரக்குப் போனால் அறுபது லாரி டிரைவர்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டாலும் தினம் ஆயிரம் லிட்டர் பெட்ரோல் கள்ள மார்க்கெட்டில் விற்பனையாகிறது. மாதம் 30,000 லிட்டர். வருடம் சுமார் மூன்றரை லட்சம் லிட்டர். இது ஒரு டெப்போவுக்கு. பல டெப்போக்களில் நடந்தால் பங்க்காரர்களுக்கு நேரடி நஷ்டம் ஒரு பக்கம். இன்னொரு பக்கம் திருட்டு பெட்ரோல் அதிகம் விற்கப்படும் ஏரியாவில் இருக்கிற 'பங்க்'கின் விற்பனை மந்தமாகி இரட்டிப்பு நஷ்டமும் அடைய நேரிடுகிறது!

"எங்க ஏரியாவுல இப்படித்தான் இரண்டு வருஷம் முன்னால நிறைய பெட்ரோல் திருட்டு. அப்பவெல்லாம் 300 லிட்டர் பெட்ரோல்தான் விற்கும். அப்புறம் அது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்ததும் 900–1000 லிட்டர் விற்க ஆரம்பிச்சுடுச்சு...!" என்று வாளையார் பக்கமுள்ள ஒரு பங்க் கேஷியர் சொன்னார்.

நாம் இந்தத் திருட்டு பற்றிக் கேட்டதற்கு "டெப்போவிற்குள் செய்யப்பட வேண்டிய வேலைகளை மிகத் துல்லியமாக (சீலிடுவது வரை) செய்தே அனுப்புகிறோம். நீங்கள் கேட்கிற விஷயங்கள் 'கேட்'டுக்கு வெளியே நடக்கிற தவறுகள். அதுகுறித்து நீங்கள் மேலிடத்தில்தான் கேட்க வேண்டும்...!" – என்று டெப்போவின் அதிகாரிகள் கைவிரித்து விட்டார்கள்.

சரி, இப்படியே போனால் இதற்கு யார்தான் நடவடிக்கை எடுப்பது...? சாதாரண போலீஸ் இன்ஸ்பெக்டர்கூட எடுக்கலாமாம். இருந்தும் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள். இதுவே பலரின் பேச்சு. நாம் இந்த விஷயத்தைக் கலெக்டர் (கோவை) சந்தானம் காதில் போட்டு வைத்தோம். உடனடி நடவடிக்கையில் இறங்குவதாக வாக்குக் கொடுத்துள்ளார். பார்ப்போம். ●

கட்டுரை படங்கள்: **செல்வி ரோகிணி**

ஸ்ரீ டிராவல்ஸ்

12/A ரெட்ஹில்ஸ் ரோடு, கொளத்தூர், சென்னை – 99.
போன் : 5378620 டெலி பேக்ஸ் : 5584866
இ-மெயில் : Sritrave@ md.vsnl.net.in

கொட்டும் மழை, கொளுத்தும் வெயில், நடுக்கும் குளிர்

இவை

எதுவுமே இல்லாத வசந்தகால சுற்றுலா!

தென்னிந்திய சுற்றுலா!

புறப்படும் தேதி 29.01.1999

சென்னை – சிதம்பரம் – சீர்காழி – வைத்தீஸ்வரன்கோயில்– சுவாமிமலை– கும்பகோண – தஞ்சாவூர் திருச்சி – கொடைக்கானல் – இராமேஸ்வரம் – மதுரை – கன்னியாகுமரி – திருவனந்தபுரம் – எர்ணாகுளம் – குருவாயூர்– ஊட்டி – மைசூர்– மெர்க்காரா – தலைக்காவிரி – உடுப்பி – தர்மஸ்தாலா – சிருங்கேரி – பேலூர் –ஹாலிபேடு – பெங்களூர் – சென்னை.

பயணத் தொகை ரூ. 5,800/- 15 நாட்கள்

உடனடியாக முன் பணம் ரூபாய் 2,500/- செலுத்துபவர்களுக்கு மட்டுமே கண்டிப்பாக இடங்கள் கிடைக்கும்.

வட இந்திய சுற்றுலா!

புறப்படும் தேதி : 26-02-1999

பெங்களூர்/சென்னை – அவுரங்காபாத் – அஜந்தா – எல்லோரா – பூனா – ஜெய்பூர் – ஆக்ரா– டில்லி – சிம்லா – குலு– மணாலி – சண்டிகார் ஹரித்துவார் – ரிஷிகேஷ் – டில்லி – சென்னை/பெங்களூர்.

பயணத் தொகை ரூபாய் 6,800/- 16 நாட்கள்

- அனைத்து இடங்களிலும் தரமான ரூம் வசதிகள்
- டூர் முழுவதும் சைவ உணவு
- இடங்களைச் சுற்றிப் பார்க்க 2 X 2 அருமையான டீலக்ஸ் பஸ்கள்
- எல்லா இடங்களிலும் சுற்றிக் காட்ட அனுபவம்வாய்ந்த பெண் டூர் மேனேஜர்
- நட்சத்திர ஓட்டலில் மாபெரும் விருந்து
- எல்லா இடங்களிலும் நுழைவுக் கட்டணம் உட்பட
- அனைவருக்கும் குரூப் இன்சூரன்ஸ்
- மேலும் பல பல வசதிகள்!

ஆண்டுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கும், அவர்கள் பெற்றோர்களுக்கும் கண்டிப்பாக அனுமதி இல்லை.

அனைத்து கிரெடிட் கார்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இரயிலில் **II tier A/C** வேண்டுபவர்களுக்கு பிரத்யேக வசதி செய்து கொடுக்கப்படும்!
ஒருமுறை ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் பயணம் செய்திடுங்கள். சுகமான அனுபவம்உங்களுக்கு காத்திருக்கிறது.

ஏமாற்றத்தைத் தவிர்க்க! உடனே முந்துங்கள்!





இன்றைய சூழலில், மக்களுக்கு இருக்கிற கடைசிப் புகலிடம் நீதி மன்றங்கள் மட்டும்தான். அடடா! இப்படியொரு புகலிடம் இருந்து விட்டால், இந்த ஜனங் களுக்கு ரொம்பவே குளிர்விட்டுப் போய் விடும் என்கிற ஆதங்கம் நமது தமிழக அரசுக்கு! இந்த ஆதங்கத்தின் வெளிப்பாடாகத்தான் விளம்பரப் பலகை கள் (Hoardings) தொடர்பான அவசரச் சட்டம், அப்படியே சட்டமாக நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இந்த விளம்பரப் பலகைகள் விஷயத்தில் தமிழக அரசு நடந்து கொள்கிற வேகத்தைப் பார்க்கிற போது, மும்பையின் மாஃபியா கும்பல் அளவுக்கு, சென்னையி லுள்ள விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்கள் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்களோ என்று நமக்கு பயமாக இருக்கிறது. நமது பயம் நியாயமானதாக இல்லையென்றால், 'அரசு, இந்திய ஆட்சிப் பரப்பிற்குள் உள்ள எவருக்கும் சட்டத்தின் முன்னிலையில் சமன்மையையோ, சட்டங்களின் சமன்மையான காப்பளிப்பையோ மறுத்தல் ஆகாது' என்கிற நமது அரசியல் சாசனத்தின் பதினான்காவது பிரிவைத் தூக்கிப் பந்தாடுகிற விதமாக விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்களுக்கு மட்டுமே பயன்படுகிற ஒரு தலைப் பட்சமான சட்டத்தைக் கொண்டு வந்திருக்காது.

ஒருபுறம், முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு இத்தனையா யிரம் மரக்கன்றுகளை நடுகிறோம் என்று அமைச்சர்கள் அறிக்கை விடு கிறார்கள். ஆனால் மறுபுறம், விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்கள், தாங்கள் வைக்கிற விளம்பரப் பலகைகளை மறைக் கின்றன என்பதற்காகவே பச்சை

* நடைபாதைகளில் நடக்க முடியாதபடி வி. பலகைகள்....


மக்களுக்கு எதிரான தமிழக அரசு!

மரங்களையெல்லாம் வெட்டித் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் மரங்களின் மேல் பாச மழை பொழியும் அமைச்சர்களின் அறிக்கைகள் யாரை ஏமாற்ற?

85-ம் ஆண்டு, அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். ஒரு சட்டம் கொண்டு வந்தார். அதன்படி, அப்போது சென்னை மாநகரிலிருந்த 598 விளம்பரப் பலகைகளையும் அரசே கையகப்படுத்துமென்றும், பிறகு விளம்பரப் பலகைகள் வைக்கப்பட வேண்டுமானால் சம்பந்தப்பட்ட அரசுத் துறையின் அனுமதியைப் பெற்றேயாக வேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

இந்தச் சட்டத்தை எதிர்த்து சம்பந்தப்பட்ட





• விளம்பரப் பலகைகளுக்காக இரக்கமின்றி வெட்டப்பட்ட பச்சை மரம்...

வர்கள் நீதி மன்றத்துக்குப் போக, சென்னை உயர்நீதி மன்றம் சட்டம் சரிதான் என்று தீர்ப்பளிக்க, உச்சநீதி மன்றத்துக்குச் சென்றார்கள். அங்கே 598 விளம்பரப் பலகைகள்தான் சென்னை நகரில் இருப்பதாகத் தமிழக அரசு சொன்னது. இல்லையில்லை 1074 பலகைகள் உள்ளன என்று கணக்குச் சொன்னார்கள் விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்கள். சரி, 1074 விளம்பரப் பலகைகள் தவிர, இனி புதிதாக விளம்பரப் பலகைகள் ஏதும் வைக்கப்படக் கூடாது என்று உச்ச நீதி மன்றம் ஓர் இடைக்காலத் தடை விதித்தது.

உச்சநீதி மன்றத்தின் இந்தத் தடையைப் பற்றிப் பிறகு யாருமே – எந்த முதல்வர் தலைமையிலான தமிழக அரசுமே – கவலையே படவில்லை. விளம்பரப் பலகைகளெல்லாம் அது பாட்டுக்குப் புற்றீசல்கள் போல் முளைக்க ஆரம்பித்து விட்டன. சொல்லப்

போனால், சாதாரண சைஸ் பலகைகள் என்பது கூட இல்லாமல் எல்லாமே மெகா மெகா சைஸ்களாக வைக்கப்பட்டன.

இப்படி வைக்கப்படும் விளம்பரப் பலகைகள் – அதில் எழுதப்பட்டிருக்கிற விளம்பர வாசகங்களின் ஈர்ப்பால், வாகன ஓட்டிகளின் கவனம் சிதறடிக்கப்பட்டு, விபத்துகள் நடக்க அதிக வாய்ப்புகள் உருவாயின. சாலைகளின் நடைபாதைகளைத் தோண்டி இரும்புக் கம்பங்களை நட்டுத்தான் வி. பலகைகள் வைக்கப்படுகின்றன என்பதால், நடைபாதைகளில் நடந்து செல்வதற்கான வசதி மட்டுமல்ல; வாய்ப்பும் மக்களுக்கு மறுக்கப்பட ஆரம்பித்தன. இதனாலும் விபத்துகளுக்கான காரணங்கள் கூடின.

இவற்றோடு, பச்சைக் குழந்தைகளைப் போன்ற பச்சை மரங்களும் வி. பலகைகளின் சொந்தக்காரர்களின் வசதிக்காக வெட்டி வெட்டிச் சாய்க்கப்பட்டன. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கட்டடங்கள் உள்பட முக்கியமான அலுவலகங்களின் அழகுகளை மறைத்துக் கொண்டு நிற்கும் இந்த மெகா சைஸ் வி. பலகைகளைப் பற்றி, மூச்சுக்கு முந்நூறு தடவை 'சிங்காரச் சென்னை' பற்றியே பேசிக் கொண்டிருக்கும் மேன்மை தங்கிய மாநகர மேயர் கூட மூச்சு விடாததுதான் அதிர்ச்சியான விஷயம்!

இத்தனைக்கும் மேலாக, இந்த வி. பலகைகளால் சென்னை மாநகராட்சிக்கு வருமானம் ஏதாவது வந்ததா என்றால் அதுவும் இல்லை என்கிற நிலை. காரணம், சம்பந்தப்பட்டவர்களெல்லாம் அரசியல்வாதிகளாகவோ, அல்லது அவர்களின் நிழல்களாகவோ இருப்பது!

இவை எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டுதான், இந்த வி. பலகைகளின் முறைகேடுகள் தொடர்பாகச் சென்னை உயர் நீதி மன்றத்தில் பொது நல வழக்கொன்று தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த, இப்போது மாற்றப்பட்டு விட்ட தலைமை நீதிபதி லிபரானும் நீதிபதி பத்மநாபனும் உச்சநீதி மன்றம் குறிப்பிட்டுள்ளபடி 1074 வி. பலகைகள் தவிர, மற்றவற்றையெல்லாம் சென்னை மாநகராட்சி அகற்ற வேண்டுமென்றும் பொது இடங்களில் மாத்திரமல்லாமல் தனியார் இடங்களில் வைக்கப்படும் வி. பலகைகள் விஷயத்திலும் அரசு ஒரு நெறிமுறையை வகுக்க வேண்டுமென்றும் அந்த நெறிமுறை பொது நலத்தைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டுமென்றும் தீர்ப்புச் சொன்னார்கள். இப்படி தீர்ப்பு வழங்கப்பட்ட தேதி : 22.7.98.

இந்தத் தீர்ப்பை எடுத்துக் குப்பைக் கூடையில் போடுகிற விதமாக, அடுத்த நாளே (23.7.98) ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது நமது மாண்புமிகு தமிழக அரசு! அந்த அவசரச் சட்டத்தின்படி இப்போதிருக்கிற ஆயிரக்கணக்கான வி. பலகைகளின் சொந்தக்காரர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அரசுக்கு விண்ணப்பித்து முறையான அனுமதியைப் பெற்று விடலாம் என்றது அரசு!

அதாவது, பொது மக்களின் நடமாட்டத்துக்கு இடைஞ்சலாக உள்ள வி. பலகைகள் உள்பட சகலவிதமானவற்றுக்கும் அனுமதி தருகிற அவசரச் சட்டம் அது! இன்னும் சொல்லப் போனால், உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை உதாசீனப்படுத்துகிற வகையில் மட்டுமல்ல; பொது மக்களும் எக்கேடு கெட்டால் என்ன, வி. பலகைகளின் சொந்தக்காரர்கள் கொழுத்தால் போதும் என்கிற அவசரச் சட்டம் அது!

ஆனாலும், பொது நலனில் அக்கறையுள்ளவர்கள் சும்மாயிருப்பார்களா? மறுபடியும் உயர் நீதி மன்றத்துக்குச் சென்று அந்த அவசரச் சட்டத்துக்கு இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றார்கள்.

தமிழக அரசு அந்தத் தடையுத்தரவைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா? அண்மையில் நடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அந்த அவசரச் சட்டத்தையே சட்டமாக்கிக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்துக்கு அனுப்பி விட்டது! இதன் காரணமாக அந்த அவசரச் சட்டத்துக்கான இடைக்காலத் தடையுத்தரவு தானாகவே காலாவதியாகி விட்டது!

இத்தனை காரியங்களையும் முழுக்க முழுக்க வி. பலகைகளின் உரிமையாளர்களுக்கு மட்டுமே சாதகமாகச் செய்து கொண்டிருக்கும் தமிழக அரசு, 'இதில் எந்த அமைச்சருக்கும் தொடர்பு இல்லை; இல்லவே இல்லை' என்று சி.பி.சி.ஐ.டி. போலீஸார் மூலம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இதையும் நாம் நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில் தமிழனின் காதுகள் பூச் சுற்றப்படுவதற்காகவே படைக்கப்பட்ட ஸ்பெஷல் காதுகளாயிற்றே!

— இளங்கோவன்

சீஸன், சீஸன்ங்கறாங்களே, அப்படி என்னதான் இருக்குன்னு பார்க்க ஆசைப் பட்டு நாரத கான சபா, ம்யூஸிக் அகடமி, நுங்கம்பாக்கம் கல்கரல்ஸ் - இந்த மூணு இடங்களுக்கும் ஒரு விஸிட் அடிச் சேன்.

அகடமி வாசல்ல அறுசுவை அரசு நடராஜன் கேன்டீன் ஹவுஸ்ஃபுல்லாவே இருக்கு. டிபனை விட மீல்ஸ் பிரமாதம்னு எல்லாரும் சொன்னாங்க. "குடுத்த இரு பத்தஞ்சு ரூபாவும் அந்த வத்தக் குழம் புக்கே சரியா போச்சு; அவ்ளோ பிரமாதம்"னு புளகாங்கிதப்பட்டுச் சொன் னார், தற்செயலா எதிர்ப்பட்ட கவிஞர் மீ. விஸ்வநாதன். நாரதகான சபா கேன் டீன்ல மசால் தோசை ஏ க்ளாஸ். நெய் வாசனை நிஜமாவே இருக்கு. (சட்னி கொஞ்சம் காரம் ஜாஸ்தி.) ராமராவ் கலா மண்டப கேன்டீன்ல ஜவ்வரிசி போண்டா தான் எல்லா வருஷமும் சூப்பர் ஸ்டார்னு எல் லாரும் சொன்னாங்க. It was my badluck. நான் போனபோது இல்லை!

நிறைய யங்ஸ்டர்ஸ் கச்சேரி கேட்க வர்றதை கவனிச்சேன். என்னை மாதிரி கேன்டீனோட திரும் பிடாம உள்ள போய் உட்கார்ந்து நல்லா ரசிச்சே கேக்கறாங்க. ஜீன்ஸ், டீ ஷர்ட், ஃபங்க், ஒரு காது வளையம், ரீபோக் ஷூஸோட கர்நாடக சங்கீதம் கேட்க வர்ற இளைஞர்களைப் பார்க்க ஆச்சர்யமாகவும் சந்தோஷமாகவும் (கொஞ்சம் பொறாமையாகவும்) இருந்தது. அவ்வளவும் என்.ஆர்.ஐ கும்பல்னு தோணலை...

• • •

டயானாவைப் பத்தி ஒரு புஸ்தகம் (தமிழ்தான்: ரா.கி. ரங்கராஜன்) படிச்சேன். 'உலகம் முழுக்க நகைச்சுவை வேறு படலாம்; But சோகம் ஒரே மாதிரிதான் இருக்கும்'னு முன்னுரைல மதன் சொல்லியிருந்த விஷயம் 'அட!'ன்னு உடனே புரட்டிப் படிக்க வெச்சது. பிர மாதமான ஸ்டைல், விறுவிறுப்பு, அடுக் கடுக்கான சம்பவக் கோர்வை. தனியா வர்ணனைன்னு இல்லாமலே ஒரு கேரக் டரை சம்பவங்கள் மூலமாவே மனசுல ஸ்கெட்சா விழ வைச்சிருக்கார் RKR.

கணவரோட தகாத உறவு காரணமா, பிரிய முடிவெடுக்கற டயானா, உலகக் குழந்தைகள், நோயாளிகள் மேல அனுதாபம் காட்டற டயானா, கண்ணி வெடி கல்சருக்கு எதிரா கொடி பிடிக் கற டயானா, அன்பான தாய் டயானா - இப்

எந்த டயானா நிஜம்?



சுமி சூப்பர் மார்க்கெட்!

"அவர் வாழ்க்கைல ரொம்ப அடிபட்டவர்."

"ஏழையா இருக்காரா?"

"இல்லை, நாடாளுமன்ற எம்.பி.யா இருக்காரு!"

— பா. ஜெயக்குமார்





"ஆனாலும் இந்தப் பத்திரிகை இவ்வளவு மோசமா இருக்கக் கூடாது."

"என்ன ஆச்சு?"

"பத்து முடிந்து இயல்பு நிலை திரும்பிய காட்சின்னு ரெண்டு பக்கத்துக்கு எல்லாத் தெருவையும் போட்டோ எடுத்துப் போட்டு நிறைச்சிருக்காங்க!"

— திருச்சி ஆர். வேணுகோபால்

படி உயர்வான பல முகங்கள். சட்டுனு டோடியோட ஊர் சுத்தற டயானா, பிகினி ட்ரெஸ்ல போஸ் குடுக்கற டயானா, அரச குடும்பத்துக்கு தர்ம சங்கடங்கள் உண்டாக்கற டயானான்னு வேறு மாதிரியான முகங்கள்.

இந்தக் கலவையான முகங்களுக்கு அப்பால் ஏதோ ஒரு இன்னொரு முகம் அவருக்கு இருந்திருக்கணும்; அதுதான் நிஜமான டயானான்னு எனக்குத் தோணுது. அந்த ட்ரூ டயானா பற்றிய விவரம் வர்ற வரைக்கும் டயானா உலக மக்கள் ஞாபகத்துல ஒரு ஏஞ்ஜலாத்தான் இருப்பார்!

'டெவில்'ஸ் ட்ரீம்'னு ஒரு ஹாங்கேரி தேசத்துப் படம் பார்த்தேன்.

ஒரு சாக்ஸஃபோன் கலைஞனுக்கு ஹோட்டல்ல டான்ஸ் ஆடற பொண்ணு மேல லவ். அவளோ, அநாதை இல்லங்களுக்கு உதவி செய்யறது, ஸ்கூல் கட்ட டொனேஷன் கலெக்ட் பண்றது, வெள்ள பாதிப்புல இருக்கற கிராமத்துக்கு மீட்புக் குழுவுல சேர்ந்து போய் ஹெல்ப் பண்றதுன்னு சரியான தர்மதேவதையா இருக்கா. பொறுமையா டூயட் பாடி லவ் பண்ணவெல்லாம் அவளுக்கு டயம் இல்லை. பகல் முழுக்க சமூகப் பணி. ராத்திரி ஆனா வேற விதமான 'சமூகப் பணி'.

இவளை எப்படி காதலிக்க வெக்கறதுன்னு ஹீரோவுக்குக் குழப்பம். ஒரு வழி கண்டுபிடிக்கறான். அவ சமூக சேவைசெய்யப் போற (வெள்ளம் பாதித்த) கிராமத்துக்கு இவனும் போறான். கிராம மக்களுக்கு சாக்ஸபோன் வாசிச்சி கொஞ்சம் சோகத்துலேருந்து ரிலீஃப் தர்ற சேவை செய்யற மாதிரி ஒரு செட் அப்.

அது மட்டும் போதுமா? ஹீரோயினோட அனுதாபத்தைப் பெறணும்னு கண் தெரியாதவனாகவும் நடிக்கிறான்.

கரெக்டா பிளான் ஒர்க் அவுட் ஆறது. முதல்ல அவன் இசையை விரும்பறா. அப்புறம் மக்கள் மேல அவன் காட்டும் அன்பை (!) விரும்பறா. கடைசில அவனையே விரும்பறா.

காதல் ஆரம்பிச்சதும்தான் அவனுக்குத் தான் குருடா நடிக்கறதோட விபரீதம் புரியுது. ஆத்மார்த்தமா தன்னை விரும்பற அந்த டான்ஸர், தான் ஒரு ஃப்ராடு வேலை பண்ணியிருக்கோம்ங்கறது தெரிஞ்சா உடைஞ்சி போயிடுவாளேன்னு கவலைப்படறான்.

கிராமத்து வைத்தியரோட நாட்டு மருந்து கலெக்ஷன்லேருந்து ஒரு இசகு பிசகான மூலிகைச் சாறைக் கண்ணுல விட்டுக்கிட்டு நிஜமாவே குருடனாயிடறான்.

இந்தக் கதையை எங்கியோ கேட்ட மாதிரி இருக்கேன்னு மண்டையைப் பிச்சுக்கத் தோணுதா? கண்டுபிடிச்சிட்டீங்கன்னா சொல்லாமலே இருந்துடாதீங்க!

— சுமி

CHEAPEST PRICE IN TAMILNADU SRI VENKATESWARA STEEL HOUSE

CHEAPEST PRICE IN TAMILNADU SRI VENKATESWARA STEEL HOUSE

CHEAPEST PRICE IN TAMILNADU SRI VENKATESWARA STEEL HOUSE

உழைப்பால் உயர்ந்த உத்தமர்
69-வது பிறந்த நாள் (23.12.1998) விழா வாழ்த்துக்கள்

SRI VENKATESWARA STEEL HOUSE
5/12 & 5/14, Ranganathan Street, Star Bazar, T. Nagar, Chennai - 600 017
Phone: 4340088
Cheapest price in all types of Stainless steel articles, Cookers, Mixies, Gas stoves, Brass, Aluminium, plastic goods & toys



5% தள்ளுபடி + ஒரு தெய்வீக அன்பளிப்பு!

இந்த கூப்பனைக் கொண்டு வந்து தாங்கள் எங்கள் கடையில் வாங்கும் பொருட்களின் மீது 5% தள்ளுபடி பெறலாம்

தென்னார்க்காடு மாவட்டம் மூக்கனூரில் 22.12.1930 அன்று திருவாளர் P. சுப்பிரமணிய குப்தா அவர்கள் பட்டாபிராம் குப்தா சீதாலக்ஷ்மி தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். தனது 16-வது வயதிலேயே கடின உழைப்பால் சேலத்தில் அம்பிகாவிலாஸ் என்ற பெயரில் ஹோட்டல் ஒன்றை நிறுவினார். 1952-ம் ஆண்டு திருமதி. அலமேலு அம்மையார் அவர்களை மணந்து கொண்டார். இவர்களுக்கு நான்கு மகன்களும், இரண்டு மகள்களும் உள்ளனர். ஆரம்ப காலத்திலேயே நாட்டுப் பற்றுக் கொண்ட இவர் காங்கிரஸில் இணைந்து போராட்டங்களில் கலந்து கொண்டார். பிறகு சென்னை வந்து மக்களுக்கு **மிக மிக குறைந்த விலையில்** தரமான பொருட்களை கொடுக்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்துடன் சிறிய பாத்திரக்கடை ஒன்றை 1960-ல் நிறுவினார். வெகு விரைவிலேயே இந் நிறுவனம் தரத்தாலும் நேர்மையாலும் புகழ் பெற்று இன்று தமிழ்நாட்டிலேயே குறைந்த விலையில் சிறந்த தரத்திலும் மற்றும் நிரந்தரமான இடத்திலும் இருக்கும் ஒரே கடை ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்டீல் ஹவுஸ் என்று மக்களால் போற்றப்படுகிறது. இவர் மேலும் தனது இல்லத்திலேயே (24-A அரங்கநாதன் சுரங்க பாதை சாலை, காவேரி நகர், சைதாபேட்டை (வடக்கு) சென்னை) குரு சக்ர விநாயகர் ஆலயம் ஒன்றை நிறுவி ஆன்மீகத் தொண்டும் புரிந்து வருகிறார். இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமான் நினைத்ததை முடித்துக் கொடுக்கும் நித்திய புருஷராக உள்ளார்.

'தாரக மந்திரம்' **ஓம் ஸ்ரீகுரு சக்ர விக்னேஷ்வராய நம:**
இந்த மந்திரத்தை தினசரி குறைந்தது 21 தடவை பாராயணம் செய்ய சகலகாரியங்களும் சித்தியாவது திண்ணம். Res. 4337181

CHEAPEST PRICE SHOP IN TAMILNADU

CHEAPEST PRICE IN TAMILNADU SRI VENKATESWARA STEEL HOUSE

உடனே வேலை பெற

நேரிலும் தபாலிலும்

ஓவிய ஆசிரியர் பயிற்சி

வரும் நவம்பரில் தமிழ்நாடு அரசுத் தொழில் நுட்பத் (ஓவியம்) தேர்வு எழுதி நீங்களும் **ஓவிய ஆசிரியர்** ஆகலாம். கல்வித் தகுதி: SSLC, +2, தேறிய, தவறிய ஆண்கள், பெண்கள். போட்டியில்லாத வேலை வாய்ப்பு. அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் பணியாற்றலாம். அடிப்படைச் சம்பளம் ரூ.4,000 + இதர் படிகள் சேர்த்து ரூ.5,300/- வரை மாதச் சம்பளம். எளிமையான பயிற்சி, வெற்றி நிச்சயம். குறைந்த பயிற்சிக் கட்டணம். வீட்டில் இருந்தபடியே தபால் மூலம் படிக்கலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

விவரப் புத்தகம் இலவசம்

அஜந்தா ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்

AJANTHA SCHOOL OF ARTS
(Govt. Regd. No. 1075/89/MS/RD)
6, Muthu Nagar, (Near Sundar Thirumana Mandapam)
POONAMALLEE, MADRAS - 600 056.

கச்சேரியில் குறுக்கெழுத்துப்



• அனுராதா ஸுரேஷ் கிருஷ்ணமூர்த்தி

மத்தியான கச்சேரிகள் டிகிரி காபி தரத்தில் இருக்காது என்பது தெரியும். ஆனால், காபியின் இடத்தில் பச்சைத் தண்ணி கொடுக்கலாமா...! கடுமையாக விமர்சித்தால் 'பாவம் சார்! இளம் தளிர்...' என்று வாசகர்கள் வருத்தப் படுகிறார்கள். அதனால் விமர்சனத்திலும் தாராளமாகத் தண்ணியூற்றித் தருகிறேன்.

நாரத கான சபாவில் pre-season series. சசிகிரண் பாடினார்.

ராகங்களின் தேர்வைப் பாருங்கள்... பலமஞ்சரி, ஹம்சாநந்தி, நாயகி, சலநாட்டை, கரஹரப்ரியா...

ஓர் ஆரம்ப நிலைப் பாடகர் எடுத்து பனிச்சென்று கையாளக் கூடியது கடைசியில் வரும் கரஹரப்ரியா மட்டுமே. ஆனால் ஹம்சாநந்தியில் விஸ்தாரமான ஆலாபனை முயன்றார் சசிகிரண்.



• சசிகிரண்

மதுரை மணி பாட்டு குறித்து கல்கி எழுதியதுதான் எனக்கு ஞாபகம் வந்தது (13.12.98 கல்கி கலெக்ஷன்): 'வித்வான்களில் சிலர் ராக ஆலாபனத்தையே ஸ்வரம் பாடுவது போல் பாடி விடுவதுண்டு.... ஆனால் மதுரை மணி ஐயர் ஸ்வரம் பாடுவதுகூட ஆலாபனம் மாதிரி இருக்கும்...'

முதல் பாதி வாக்கியம் மட்டுமே சசிகிரணுக்குப் பொருந்துகிறது. படியேறக் கற்றுக் கொண்ட புதிதில் தவழும் குழந்தைகள் ஏறி ஏறி இறங்கி விளையாடும்... அந்த மாதிரி ஆர்வமாக ஸ்வரங்களில் ஏறி ஏறி இறங்கியதோடு சரி. கார்வை என்று ஒன்று உண்டு என்பது சசிகிரணுக்குத் தெரியாமல் இருக்க நியாயமில்லை. அதில் நின்று பாடாவிட்டால் எந்த ஆலாபனையும் முழுமை பெறாது. அதிலும் ஹம்சானந்தியின் பாவத்தைக் காட்டவேண்டுமானால் உருட்டாமல் நின்று அளவாகப் பாட வேண்டும். சசிகிரண் உருட்டுவதை நிறுத்துவதாக இல்லை- அதனால் ஆலாபனைக்கு ஒரு ஸ்வரூபமே அமையவில்லை.

'ரங்கநாயகம் பாவையே...' -இந்தக் கீர்த்தனையைக் கேட்டவர்களுக்கு இதன் ராஜகளை என்ன என்பது தெரியும். தெரியா



தும்புரு

தவர்களுக்குச் சொல்கிறேன்- ஒரு ராஜ கோபுரத்தின் அமைப்புடையது இந்த முத்துஸ்வாமி தீக்ஷிதர் கிருதி. சசிகிரண் அதை ஹவுசிங் போர்ட் ஃப்ளாட் மட்டத்துக்குக் கொண்டுவந்து விட்டார்! சங்கதிகள் போடுவதிலேயே கவனம் என்பதால் மனம் கிருதியில் தோயவில்லை.

சல நாட்டையை ஆலாபனை செய்வேன் என்று அடம்பிடித்து அவர் ஆரம்பித்தபோது எனக்கு முன் வரிசையிலிருந்த ஜோடி நியூஸ்பேப்பரைப் பிரித்து குறுக்கெழுத்துப் புதிரை ஆராய ஆரம்பித்து விட்டது. 'ஏதைய்யா கதி...?' என்று பாடகர் ஆரம்பிக்க, பக்கத்து இருக்கைக்காரரிடமிருந்த பேனாவை இரவல் வாங்கி கட்டங்களை நிரப்ப இவர்கள் ஆரம்பிக்க...!

பிரதான ராகமான கரஹரப்ரியாவும் ஏமாற்றம்தான். ஆலாபனை, கிருதி, நிரவல், ஸ்வரம் என்று எதுவும்



* கணேஷ்

நிறைவு தரவில்லை.

தாள சுத்தம் தவிர குறிப்பிடும்படியான பிளஸ் பாயின்டுகள் எதுவும் சசிகிரணிடம் இல்லை. மைனஸ் பாயின்டுகளை நான் பட்டியலிடப்போவதில்லை. அவருக்கே தெரிந்திருக்கும்... தெரிந்திருக்க வேண்டும்!

பி.கு: கரஹப்ரியா முடிவதற்குள் குறுக்கெழுத்துப் புதிரை முடித்து, திருப்தியுடன் பேனாவைத் திருப்பித் தந்து விட்டது அந்த ஜோடி!

வாய்ப்பாட்டுக்கு ஒரு காலத்தில் வீணை பக்கவாத்தியமாக இருந்ததை நினைவூட்டும் வகையில் பிருஹத்வனி அமைப்பு சில கச்சேரிகள் நடத்தியது.

சாம்பிளாக ஒன்றை ருசித்ததில் வீணையைத் தனியே கேட்பதுதான் நல்லது என்று தோன்றிவிட்டது.

பாடியவர்-அனுராதா சுரேஷ் கிருஷ்ணமூர்த்தி. நைலான் இழை மாதிரி சன்னமான குரல். வயலினின் தொடர்ச்சியான ஆதரவு இல்லாமல் அலைபாய்ந்து தவித்தது.

சுப பந்துவராளியை ஆலாபனைக்கு எடுத்துக் கொண்டார் அனுராதா. வளமான கற்பனை, ராக பாவம், இரண்டும் இருந்தாலும் குரல் அவரது கட்டுப்பாட்டில் இல்லை; இல்லை, இல்லவேயில்லை.

இதே காரணத்தால், சங்கராபரணத்தில் தரமான பிரயோகங்களும் நெளிவு சுளிவுகளும் அழகிழக்க நேரிட்டது.

மத்ய ஸ்தாயியிலிருந்து மேல் ஸ்தாயிக்கு ஏறும்போது அனுராதாவின் குரல் முகமூடி போட்டுக் கொண்டதுபோல் மாறிப் போகிறது. சறுக்கல்களும் அதிகமாகின்றன. சுருதி பிசகிப்போகிறது. இந்தக் குறையைச் சீர் செய்து கொள்ளாவிட்டால் அனுராதாவிடம் உள்ள ஓர் அரிய பாணி வெளிச்சம் பெறாமலே அடங்கிப் போய்விடும்.

சுபபந்துவராளி ஆலாபனையில் வீணை ஸ்ரீநிவாஸன் சில நெக்குருக்கும் பிடிகளை வழங்கினார்.

கச்சேரியில் குறிப்பிடும்படியான சுவாரஸ்யம்-வாய்ப்பாட்டுக்கும் வீணைக்கும் மாறி மாறி ம்ருதங்கம் வாசித்தபோது காட்டிய ஒலி வேறுபாடு. வாசித்தவர்: மனோஜ் சிவா.

புதிர்!

இரண்டு பெல் அடித்து, கச்சேரியைத் தொடங்குவது, குறித்த நேரத்துக்கு அரை நிமிஷம் கூடுதலாகப் பாடகர் பாடினாலும் இரக்கமில்லாமல் ஸ்கிரீன் போட்டு விடுவது தொடங்கி ம்யூஸிக் அகடமிக்கென்று சில முரட்டுப் பிடிவாதங்கள் உண்டு. அங்கே மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகிற விஷயங்களில் ஒன்று மரபு.

இந்த மரபைக் கொஞ்சம் கடைசி பெஞ்சுக்குத் தள்ளிவைத்து விட்டு மேடையில் அமர்ந்தார் டாக்டர் கணேஷ். (போன வியாழக்கிழமை) மேடை என்றால் ஒன்று, பாடுவார்கள். அல்லது ஆடுவார்கள். (ஆடு

பவர்களுக்காக மேடை ஓரத்தில் ஒரு கோஷ்டி உட்கார்ந்து பாடுவார்கள்.) யாராவது பாடிக் கொண்டே ஆடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? எப்பேர்ப்பட்ட மரபு மீறல் இது? அகடமி அன்று கணேஷ் கச்சேரியில் இதை அனுமதித்தது ஒருபுறம் இருக்கட்டும்; 'கமலஹாஸன் மாதிரி ஆள் படா ஷோக்காக இருக்கிறார், கைகள், கண், மூக்கு, வாய், கழுத்தெல்லாம் என்ன பிரமாதமாக ஒத்துழைக்கின்றன, இவர் ஏன் பரதநாட்டியம் ஆடப் போகாமல் மகாராஜபுரத்திடம் சென்று பாட்டு கற்றுக் கொண்டு ததரினனா பண்ணுகிறார்' என்று வந்திருந்த அத்தனை பேரும் யோசித்திருக்க வேண்டும். அப்படியொரு சேஷ்டை!

என்னை மாதிரி நாலைந்து வரிசை பின்னால் உட்கார்ந்திருந்தவர்களுக்கு கணேஷின் கச்சேரி நாட்டியமாகத் தெரிந்ததென்றால், முதல் வரிசைக்காரர்களுக்கு குஸ்தி பயில்வானாகக் காட்சி அளித்திருக்கிறார் கணேஷ்!

ஒரு ராகம் தொண்டையிலிருந்து புறப்படும் முன்னரே அவரது இரண்டு கைகளும் முஷ்டி மடக்கி 'டிஷ்யூம்' என்று முன்னால் நீண்டு விடுகின்றன! நேரெதிரே உட்கார்ந்திருப்பவர் மூக்கைப்பார்த்து அடாணாவில் ஒரு குத்து. வயலின்காரருக்கு ஸ்ரீரஞ்சனியில் ஒரு விளாசல். மேலே ஸீலிங்கில் யார் உட்கார்ந்திருந்தார்கள் என்று நமக்குத் தெரியாது. அன்னாருக்கு தர்பாரிலும் தோடியிலுமாக மாற்றி மாற்றி செமை டோஸ்! அத்தனை உக்கிரமாகக் கரங்களை உதறி, உதறி ஹிம்சை பண்ணினால் கழன்று ஓடி விடாதோ? Any how, அன்று வாய்த்தது த்ரீ-இன்-ஒன் கச்சேரி.

அடுத்த இதழில்

ராகு, கேது, ரங்கசாமி

எஸ். சங்கரநாராயணன் எழுதும் மினி தொடர் ஆரம்பம்

கணேஷுக்குப் பிரமாதமான சாரீர வளம் இருக்கிறது. குழாய் திறந்து விட்டாற் போல பிருகாக்கள் கொட்டுகின்றன. சந்தானத்தின் சிஷ்யர் அல்லவா? குழைவு நெளிவெல்லாம் வஞ்சனையில்லாமல் வந்து சேருகின்றன. இத்தனை சொத்து வைத்துக் கொண்டு முதல்தர வித்வானாக இப்போதைக்கு ஆகமாட்டேன் என்று அழிச்சாட்டியம் பண்ணுவது என்ன நியாயம்?

கவனம் முழுக்க, கர்ணம் அடிப்பதில், சிந்தனை முழுக்க சில்மிஷம் பண்ணுவதில்... தீராத விளையாட்டுப் பிள்ளை.

அந்த 'மாருபல்க'வை எத்தனை சுகமாகப் பாடலாம்! மயில் இறகால் வருடுவது மாதிரி என்னவொரு சுகானுபவம் தரக்கூடிய ராகம் அது! ஸ்ரீரஞ்சனியை நடு வீதியில் நிறுத்தி பிருகா சாட்டையால் விளாசு விளா சென்று இவர் விளாச, அது கதறக் கதற அழுதுகொண்டே தலைதெரிக்க ஓட, விட்டேனா பார் என்று இவர் அடித்துப் பிடித்துக் கொண்டு துரத்தி, 'மா மனோரமண' என்கிற இடத்தில் வந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

"சொல்லு! மாமனோ ரமணன்? மாமனுமில்லை மச்சானுமில்லை என்று மரியாதையாகச் சொல்லிவிடு!" என்று கழுத்தை நெரித்துப் பின்னியெடுத்துவிட்டார்!

அந்த வேகமும் உக்கிரமும் ஆளை அயரச் செய்துவிட, அடுத்து கூடிய 'தர்பாரை' அவ்வப்போது 'அட்ஜர்ன்' செய்ய வேண்டியதாகிவிட்டது! (வேறென்ன, மூச்சிரைப்பு!) தொடர்ந்து வந்த தோடியோ, தொகுத்துத்தந்த ஹிந்துஸ்தானி ராக மாலிகையோ ரசிக்காமல் போனதற்கு ஒரே காரணம்தான்! கணேஷ் தம் கிம்மிக்ஸ் அவாவை மூட்டை கட்டி வைத்துவிட்டு ராகங்களின் எழிலில் கரைந்து போகப் பழக வேண்டும். சாஹித்ய சுத்தம் வெகு முக்கியம். வெற்றிலைப் பழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆழாழும் ஏழ் வாழ்க்கைகழ் இப்பழி வழுக்குகிழ்ழுழ?

வயலின் வாசித்த நாராயணனையும் மிருதங்கம் கணபதி ராமனையும் கண்டிப்பாகப் பாராட்ட வேண்டும். வாசிப்புக்காக அல்லாவிட்டாலும் டாக்டரின் சேஷ்டைகளை சிரிக்காமல் சகித்துக் கொண்டதற்காகவாவது! ●


1999



சலசலக்கும் சமத்துவபுரத்தில் அறுஅறுப்பான

'சலசலக்கும் சமத்துவபுரம்!' என்று நாம் கட்டுரை வெளியிட்டவுடனேயே அது குறித்து அரசுத் தரப்பிலிருந்து ஒரு விவரக் குறிப்பு. 'சமத்துவபுர வீடுகளில் ஒழுகல் ஏதும் இல்லை. கடும் மழையின்போது புதிதாகக் கட்டப்படும் கான்க்ரீட் வீடுகளில் ஏற்படும் இயல்பான கசிவுதான். அதுவும் மாவட்ட கலெக்டர் ஆய்வில் சில வீடுகள் உடனடியாகக் கண்டறியப்பட்டு சரி செய்யப்பட்டு வருகின்றன. சமத்துவபுர ரேஷன் கடை முழு நேர ரேஷன் கடையல்ல; பகுதி நேரக்கடை. அதில் ஒழுகல் என்பது, மின்சார இணைப்புக்கென கூரையில் இறக்கப்பட்ட குழாய்க்கான துவாரம் வழியே இறங்கின நீர்தான். அது இப்போது சரி செய்யப்பட்டு விட்டது!' என்ற நீண்ட விவரங்களைக் கண்டதும் மீண்டும் கோவையருகிலுள்ள சமத்துவபுரத்துக்கு ஒரு ரீ விசிட் செய்தோம்.

"இப்பவெல்லாம் தினம் தப்பாம இரண்டு மணி நேரம் தண்ணி வருதுங்க..!"

"நீங்க வந்திருந்த போது மோட்டார் ரிப்பேர். அவ்வளவுதான். போன வாரந்தான் சரி செஞ்சாங்க..!"

– சொல்லி வைத்தாற்போல் அனைத்து வீதிக் குழாய்களிலும் நீர் பீறிடும் காட்சி. பெண்களின் சந்தோஷப் பேச்சு. சென்றமுறை நாம் சென்றதற்கும் இம்முறை பார்ப்பதற்கும் நிறைய வித்தியாசம். இருபது நாட்களுக்கு முன்பு பூட்டப்பட்டிருந்த வீடுகள் இப்போது பெரும்பாலும் திறக்கப்பட்டிருந்தன. எண்ணிச் சில வீடுகள் மட்டுமே பூட்டப்பட்டிருந்தன.

வணிக வளாகச் சுவரில் புதிய பெயிண்ட்டடம். ரேஷன் கடை ஒழுகல் சரிசெய்யப்பட்ட அடையாளமாய் கூரை முழுவதும் புது சிமெண்ட் பூச்சு. பல வீடுகளின் வாசல்களில் செங்கற்கள். அவை பொடியாக்கப்பட்டுத்தான் மேற்கூரையில் இட்டு 'கசிவுகள்' சரி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். ரேஷனில் தங்கு தடையின்றிப் பொருள்கள் கிடைக்கிறதாம். தினம் இரு செவிலியர் வருகிறார்களாம். நாம் போனதற்கு முன்தினம் கூட சொட்டு மருந்து– குழந்தைகளுக்கு இட்டுச் சென்றதாய்ச் சொன்னார்கள். நாம் தகவல் சேகரித்த மூன்று மணி நேரத்தில் இரண்டு பேருந்துகள் வந்து சென்று விட்டன.

"நீங்க உட்கார்ந்து வேணும்னா எண்ணிக்குங்க. தினம் பன்னிரண்டு முறை பஸ் இங்கே வந்து போகுது. கூலிக்காரங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை!"

– நம்மிடம் எண்ணி வைத்த மாதிரி சொன்னவர்கள் சமத்துவபுரவாசியான லோகநாதனும், செட்டி பாளையம் 11–வது வார்டு கவுன்சிலர் பரமேஸ்வரியும்தாம்!



நடவடிக்கைகள்!

இருந்தாலும்–
தினம் தோறும் அத்திக்கடவு தண்ணீர் வேண்டும் என்கிற இப்பகுதி வாசிகளின் ஆசை, நிரந்தர ஆஸ்பத்திரி ஒன்று இங்கே அமைய வேண்டும் என்கிற கோரிக்கை, உள்ளூர் ஆளுங்கட்சிக்காரர்கள் பணம் கேட்டுத் தொல்லை கொடுக்கும் பயம் இன்னும் பலரிடம் அப்படியேதான் இருக்கின்றன.

இவை குறித்து கோவை கலெக்டர் ஜி. சந்தானம் அவர்களிடம் விரிவாக எடுத்துரைத்துக் கேட்டோம்.

"இது முழுக்க முழுக்க அரசின் இலவசத் திட்டம். யார் பணம், விலை கேட்டாலும் கொடுக்கக் கூடாது என முதலிலேயே பயனாளிகளுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. அதையேதான் இப்போதும் சொல்கிறோம். அதுகுறித்து மேற்கொண்டு விசாரித்து நடவடிக்கை எடுப்போம். சமத்துவபுரத்தின் வணிக வளாகம் செட்டிபாளையம் பேரூராட்சியின் நிதி ஆதாரம் தொடர்பானது. இதன் மீதான டெண்டர் 10.12.98 அன்று திறக்கப்பட்டு, விதிமுறைப்படி செயல்படத் துவங்கும்.

"அத்திக்கடவு குடிநீர் தினசரி வேண்டுமென்பது இப்பகுதிவாசிகளின் ஆசைதான். ஆனால் அந்நீர் 'அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் 15 நாட்களுக்கொரு முறை செட்டிபாளையம் பேரூராட்சிக்கு 3.5 லட்சம் லிட்டர் வழங்கப்படுகிறது. அப் பேரூராட்சிக்கு உள்ளிட்ட சமத்துவபுரத்திற்கு அதில் முப்பதாயிரம் லிட்டர் வழங்கப்படுகிறது. இந்த விவரம் பயனாளிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இங்கே அமைக்கப்பட்டுள்ள ஆழ் குழாய்க் கிணற்று நீரும் குடிநீரே. அது தினம் தவறாமல், சமத்துவபுரத்துக்கென குடிநீர் வடிகால் வாரியம் கட்டியுள்ள (30,000 லிட்டர் கொள்ளளவு) மேல் நிலைத் தொட்டி மூலம் வழங்கப்பட்டே வருகிறது.



• கலெக்டர்
ஜி. சந்தானம்

''மருத்துவ வசதிகளைப் பொறுத்தவரை பகல் நேரத்தில் இரண்டு செவிலியர்கள் வந்து பயனாளிகளின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்தே வருகின்றனர். சமத்துவபுரத்திலிருந்து சுமார் முக்கால் கிமீ தூரத்தில் இரவு நேர மருத்துவ வசதிகள் உள்ளன. (நாம் விசாரித்ததில் இரண்டு கிளினிக்குகள்..)

"சமத்துவபுரத்தில் 95 குடும்பங்கள் குடியேறிவிட்டனர். மீதியுள்ள ஐந்து குடும்பங்கள் 'கார்த்திகை' மாதம் முடிவதற்குள் குடி வந்து விடுவதாகத் தெரிவித்துள்ளனர். மேலும் இங்குள்ள மக்களின் கோரிக்கைகளை ஏற்று, ஒவ்வொரு குடும்பமும் கூடுதல் அறை ஒன்று கட்டிக் கொள்ள 12,000 ரூபாய் வரை கடன் வசதி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீட்டுக்கு ஒரு சர்க்கா (ராட்டினம்) மூலம் நூறு பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகளில் ஒருவருக்கு (ஆனந்தன்) மானியத்துடன் கூடிய கடனாக 65,000 ரூபாய் மதிப்பில் ஆட்டோ ரிக்ஷா வழங்கப்பட்டுள்ளது. அவரவர் அனுபவத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ற மாதிரி மளிகைக் கடை வைக்க, தையல் இயந்திரம், ஆடு-மாடு வாங்க, பெட்டிக் கடை, காய்கறிக் கடை வைக்க என இதில் குடியிருக்கும் 50 சதம் பேருக்கு மேல் வருமானம் ஈட்ட 1,07,000 ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவெல்லாம் இந்த இரண்டு மாத காலத்துக்குள் நடந்த துரித ஏற்பாடு. முக்கியமாக வேளாண் பொறியியல் துறை மூலமாக 101 வகை அபூர்வ மரங்களைக் கொண்டு ஒரு மினி பூங்காவே அமைத்துள்ளோம். அதில் 500 மரங்களை (வீட்டுக்கு இரண்டு தென்னை மரங்கள் உட்பட) முழுக்க முழுக்க இலவசமாக சொட்டு நீர்ப் பாசன வசதி ஏற்படுத்தி பராமரித்தும் வருகிறோம்..."– என்று மாவட்ட ஆட்சித் தலைவர் விஷயங்களை விளக்கிக் கொண்டே போனார்.

— கேபெஸ்வி



● கவர்ச்சிப் புயல்கள் கோடம்பாக்கத்தை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கும் போது தென்றல் ஒன்றும் நுழைந்திருக்கிறது. பெயர் லட்சுமி. சமீபத்திய ரிலீஸ் 'தலைமுறை' படத்தில் கேஎஸ். அதியமானின் முறைப் பெண்ணாக நடித்திருக்கிறார். பெங்களூரிலிருந்து பெட்டி, படுக்கையோடு வந்து சென்னையில் குடியேறிவிட்ட லட்சுமியை 'ஹலோ' சொல்லி விசாரித்துக் கொண்டிருந்தபோது, நெப்போலியன் நடிக்கும் 'பரணி' படத்தில் நடிப்பதற்காக கோவில்பட்டிக்குப் பயணப்பட தயாராகிக் கொண்டிருந்தார். அந்த அவசரத்திலும் லட்சுமி சில முத்துக்களை உதிர்த்தார். பெங்களூர்வாசியானாலும் தமிழ்க் குடிமகன் பாராட்டுகிற அளவுக்குத் தமிழ் பேசுவாராம். கன்னடத்தில் மூன்று, தெலுங்கில் ஒன்று என்று நடித்த படங்களின் பட்டியல்கள் இருந்தாலும் 'தலைமுறை' தான் பேர் சொல்லும் படமாம். ஹோம்லி டைப் கதாநாயகியாய் இடம் பிடிப்பதுதான் லட்சியமாம். அதியமானின் அறிமுக வரிசையில் தேவயானிக்குப் பின் லட்சுமி. இதுவே பிரகாசமான எதிர் காலத்திற்கு நம்பிக்கை டானிக்காம் லட்சுமிக்கு. நிஜப் பெயரே அதுதானா? ஆமாமாம்!

● 'ஆனந்தப் பூங்காற்றே' படப்பிடிப்பில் மீனாவை கண்டபோது கண்கொள்ளாக் காட்சிதான். காரணம் மீனா கொஞ்சம் வெயிட் போட்டிருந்ததுதான். எதனால் அது? படப்பிடிப்பு இல்லாமல் வீட்டிலேயே சாப்பிட்டு விட்டு அடைந்து கிடப்பதால் இருக்குமோ? சந்தேகம் கேள்வியாய் வெளிவர, சங்கடத்தில் நெளிந்தார். கன்னத்தில் அறைகிற மாதிரி பதில் சொல்ல வார்த்தைகளைத் தேடுகிறாரோ என்று காத்திருந்தோம். "கொஞ்சம் வெயிட் போட்டிருப்பது வாஸ்தவம்தான். அதுக்காக ஷூட்டிங் இல்லேன்னுட்டு யார் சொன்னா? தெலுங்கில் ரெகுலர் கமிட்மெண்ட்ஸ் இருக்கு. இப்பக் கூட சக்கரவர்த்தி கூட ஒரு படம். இங்க பிரபு கூட 'மனம் விரும்புதே உன்னை'. இப்ப 'ஆனந்தப் பூங்காற்றே'. இதுக்கப்புறம் ராஜீவ் மேனனோட படத்துல பிரசாந்துக்கு ஜோடியா நடிக்கிறேன். முன்ன மாதிரி பிஸி இல்லதான். அதுக்காக வீட்ல சாப்பிட்டு தூங்கிட்டிருக்கேன்னுட்டு எப்படிச் சொல்றீங்க? எதுன்னாலும் நீங்களே ஒரு காரணத்தைக் கண்டு பிடிச்சிடறதா? பத்திரிகைகாரங்கன்னாலே இப்படித்தான்


• மீனா



• லட்சுமி

பூவுக்கு நடுவே ஒரு தென்றல்!

போலிருக்கு!''

என்று டென்ஷனாகாமல் விளக்க மளித்து, சிரிப்பொன்றையும் உதிர்த்தார் மீரா!

● 'மருதநாயகம்' படத்திற்கு இடை வேளை விட்டது விட்டதுதானாம். அதற் கிடையில் கமல் நடிக்க இருக்கும் படத்தைத் தயாரிக்க இருப்பவர் பிரமிட் பிலிம்ஸ் நடராஜன். படத்தின் பெயர் 'லண்டனில் காமேஸ்வரன்' படத்தை இயக்க இருப்பவர் கமல் ஹாசனே. படத்தின் படப் பிடிப்பு முழுக்க முழுக்க லண்டனில்தானாம். ஹாலி வுட் ரேஞ்சுக்குக் கதையை யோசித்தாலும் யோசித் தார், அதிலிருந்து இறங்கி வருகிற வழி தெரியாமல் கமல் இருக்கிறார் போலிருக்கிறது.

● படங்களில் காமெடி பண்ணும் தாமு நிஜத்தில் சீரியஸ்லாய் சில வேலைகளும் செய் கிறார். வாஸ்து சாஸ்திரத் தில் கில்லாடி என்று பெயரெடுத்திருக்கிறார். பிரபு தேவாவின் வீட் டைப் பார்த்தார். 'அப்படி மாத்து' என்றார். பிரபு தேவாவுக்கு இப்போது கைவசம் மூன்று படங்கள். தாரா கிரியேஷன்ஸின் அலு வலகத்தையும் அடியோடு மாற்ற வைத்திருக்கிறார். 'கோடீஸ்வர'னில் சிக்கித் தவிக்கும் குஞ்சுமோனிடம் அலுவலகத்தையே இடிக்கச் சொல்லிவிட்டார். குஞ்சு மோனும் இடிக்க ஆரம்பித்து விட்டார்.

"தெரிஞ்ச நல்ல விஷயத்தை நாலு பேருக் குச் செய்யுறதுல என்ன தப்பு? உங்க வீட்டுக் கும் வரவா?" என்று நம்மிடம் தாமு பதில் சொல்லி முடிக்கும் முன் 'தேங்க்ஸ்' சொல்லி விட்டுப் பிடித்தோம் ஓட்டம்! ○

— மஹேந்த்

“சீதா பிராட்டியின் வனவாசம்” – ஓர் ஆராய்ச்சி

சீதா பிராட்டியைச் சிறையெடுத்த ராவணன் ஏன் அசோகவனத்தில், குறிப்பாக அசோக மரத்தடியில் காவலில் வைத்தான்? அதற்குக் காரணம் ஏதாவது உண்டா” என்ற கேள்வியை மாண்புமிகு மனிதவள, கலாசார அமைச்சர் சமீபத்தில் ஜபல்பூரில் நடந்த ராமாயண கலாசார விழாவில் எழுப்பியது நினைவில் இருக்கலாம்.

இது தொடர்பாக அமைச்சரின் ஆணையின் பேரில் ராமாயண ஆராய்ச்சி கமிட்டி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஆறு அங்கத்தினர் கொண்ட இந்தக் குழுவின் தலைவராக வாரணாசி சம்ஸ்கிருத கல்லூரி பேராசிரியர் ஸ்ரீ ராம்தத் திரிவேதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கமிட்டி ஆராய்ச்சி தொடர்பான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம். தேவைப்பட்டால் உள்நாடு, வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

இதன் நடைமுறை மற்றும் பயண செலவினங்களுக்காக ரூபாய் முப்பது லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த கமிட்டி தனது முடிவான அறிக்கையை ஆறு மாதத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

– மத்திய அமைச்சரகத்தின் செய்திக் குறிப்பு 31.1.98

“ராமாயண ஆராய்ச்சிக் குழுவா – தனியார் நிறுவனமா?”

– ராம் ப்ரேரண யாதவ் குமுறல்!

புதுதில்லி:

ராமாயண ஆராய்ச்சிக்கு அமைக்கப்பட்டுள்ள கமிட்டியில் மத்திய மனிதவள, கலாசார அமைச்சர் தமது உறவினர்களை நியமித்து அவர்களுக்கு சொகுசு பங்களா, குளுகுளு கார் மற்றும் உல்லாசப் பயண வசதி



களுக்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் ராம் ப்ரேரண் யாதவ் அறிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், தேசிய அளவிலான நடவடிக்கைகள் இது போல நீடித்தால் சிறுபான்மை அரசுக்குத் தம் கட்சி அளித்து வரும் ஆதரவை வாபஸ் வாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

– சங்கநாதம் பத்திரிகையில் செய்தி 1.2.98

"ராம்நாத் திரிவேதியின் தலைமை பறிப்பு!"

– ராமாயண ஆராய்ச்சி கமிட்டியில் மாற்றம்!"

புதுதில்லி:

ராமாயண ஆராய்ச்சி கமிட்டியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ராம் ப்ரேரண் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களை இந்தக் கமிட்டியில் நியமிப்பதன் மூலம் கமிட்டி விரிவு படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கமிட்டிக்கான நிதி ஒதுக்கீடு ஒரு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

தோழமைக் கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை மனத்தில் கொண்டு ஜனநாயக மரபுகளை மதித்து இந்த மாற்றங்களை அறிவித்திருப்பதாக மத்திய

ரா.ச. கிருஷ்ணன்

மனிதவள, கலாசார அமைச்சர் அறிக்கை விடுத்துள்ளார். தமது உறவினர்களை இந்த கமிட்டியில் நியமித்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை ஆதாரமற்றது, விஷமத்தனமானது என்று வன்மையாகக் கண்டித்திருக்கிறார். தற்போது, உள்ள கமிட்டியில் மூன்று அங்கத்தினர் பழங்குடி இனத்தவர், மூன்று பேர் தலித் மேலும் கிறிஸ்துவர், முஸ்லிம், சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்கள் தலா ஒருவர் உறுப்பினர் என்பதையும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

– சங்கநாதம் பத்திரிகையில் செய்தி.



மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பூஜ்ய நேரத்தில் (zero hour) எழுப்பிய கேள்விகளுக்கான விடைகள் பின் வருமாறு:

1) ராம் ப்ரேரண் யாதவ் கமிட்டியின் அங்கத்தினர்கள் பணியின் காரணமாக மெக்ஸிகோ போன்ற நாடுகளில் பயணங்கள் மேற் கொண்டுள்ள நிலையில், அவர்கள் பணி இன்னும் முடிவடையவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு இந்த கமிட்டியின் ஆயுட்காலம் ஓராண்டாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

2) கமிட்டியின் செலவினங்கள் கடந்த மாத முடிவில் கிடைத்த தகவலின்படி ஒரு கோடியே பதினோரு லட்ச ரூபாய். அதிகப்படி செலவு மீறல்கள் முறைப்படி சரி செய்யப்படுகின்றன.

3) மேற்படி கமிட்டி தனது அறிக்கையை டிசம்பர் '98 முடிவிற்குள் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கமிட்டியின் பதவிக் காலம் நிச்சயம் நீட்டிக்கப்பட மாட்டாது.

4) அசோக மரம் சீதா தேவியின் சிறை வாசத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அது "துக்கத்திற்கான" அடையாளப் பொருள். ஆதலால் "அசோக மரத்தை" தேசிய மரமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் கிடையாது.

– (பாராளுமன்றத்தில் மாண்புமிகு மனிதவள, கலாசார அமைச்சரின் பதில்களின் நகல்)

சீதை ஏன் அசோக மரத்தடியில் சிறை வைக்கப்பட்டாள்.

– ராம் ப்ரேரண் கமிட்டியின் அறிக்கை

புதுதில்லி:

பாராளுமன்ற உறுப்பினர் ராம் ப்ரேரண் யாதவின் தலைமையில் அமைக்கப்பட்ட ராமாயண ஆராய்ச்சி கமிட்டி சமர்ப்பித்த முடிவான அறிக்கை இன்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

அறிக்கையின் சுருக்கம் பின் வருமாறு :

ராவணனால் சிறையெடுக்கப்பட்ட சீதா பிராட்டி குறிப்பாக ஏன் அசோக மரத்தடியில் காவலில் வைக்கப்பட்டாள் என்ற பிரச்னையை ஆராய்ச்சிக் குழு விரிவாக ஆராய்ந்தது.

இது சம்பந்தமாக பல மொழிகளில் உள்ள ராமகதைகள் ஆராயப்பட்டன. பல பௌராணிகர்களின் கருத்துக்கள், அறிஞர்களின் ஆய்வுரைகள் கலந்து ஆலோசிக்கப்பட்டன.

ராம காவியத்தில் குறிப்பிடப்பட்ட இடங்கள், மேலும் ராமாயண கலாசாரம் பரவிய ஸ்ரீலங்கா, தாய்லாந்து, இந்தோனேஷியா, பாலி தீவுகள், மெக்ஸிகோ போன்ற மேலை, கீழை நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு தேவையான விடை காண முயன்றது.

பரந்த ஆராய்ச்சியின் முடிவாக ராவணன் சீதா பிராட்டியை பாதுகாப்பான இடத்தில் காவலில் வைக்கக் கருதி கானகத்தைத் தேர்ந்தெடுத்தான் என்றும், அந்தக் கானகம் அசோக வனம் என்ற பெயர் கொண்டது என்றும், அங்கு ஏதாவது ஒரு மரத்தடியில் சீதா பிராட்டி அமர நேர்ந்தது அசோக மரமாக அமைந்தது என்றும், இது தற்செயலான நிகழ்ச்சிதான் என்றும், இதைத் தவிர விசேஷமாக வேறு ஏதும் காரணம் இருப்பதாகப் புலப்படவில்லை என்றும் இந்த ஆராய்ச்சிக் குழு ஏக மனதாகக் கருதுகிறது.

– சங்கநாதம் பத்திரிகையில் செய்தி.



இந்த ஊருக்கு ஒன்றரைக் கோடி செலவு!

கர்நாடகத்திலுள்ள ஹம்பிக்கு அருகில் இருக்கும் ஊர்தான் இந்தப் படத்தில் உள்ளது. இந்த ஊரை உருவாக்க 1.5 கோடி ரூபாய் செலவானதாம்! வியப்பாய் இருக்கிறதா? அண்மையில் வெளியான 'சைனா கேட்' ஹிந்திப் படத்துக்காக நிர்மாணிக்கப்பட்ட செட்தான் இந்த ஊர்.

– ஜி.





கல்கி கலெக்ஷன்

முப்பத்து ஒன்பதாம் அத்தியாயம்

"இதோ யுத்தம்!"

வந்தியத்தேவன், "உறையிலிருந்து கத்தியை எடுங்கள்!" என்று சொன்ன உடனே, இளவரசர் "இதோ எடுத்து விட்டேன்!" என்று பட்டாக் கத்தியை உருவி எடுத்தார். அதே சமயத்தில் வந்தியத்தேவனும் உறையிலிருந்து கத்தியை எடுத்தான். அவை பிரம்மாண்டமான ராட்சதக் கத்திகள். அனுராதபுரத்துப் போதி விருட்சத்தின் அருகில் குதிரைகளுடன் வந்து நின்றவர்கள் அந்தக் கத்திகளையும் கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

இளவரசர் குதிரையிலிருந்து கீழே குதித்து "வா இறங்கி! உன்னுடைய அதிகப் பிரசங்கத்தை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது! இங்கேயே ஒருகை பார்த்து விட்டுத்தான் போக வேண்டும்!" என்று கடுமையாகக் கூறியதும், வந்தியத்தேவன் திகைத்துப் போனான். இது விளையாட்டா, வினையா என்று அவனுக்குத் தெரியவில்லை. எனினும், இளவரசர் குதிரையிலிருந்து பூமியில் இறங்கி விட்டபடியால் அவனும் இறங்க வேண்டியதாயிற்று.

"என்ன ஐயா! ஏன் தயங்குகிறீர்? நேற்றிரவு என்னை நீர் அவமானப்படுத்தப் பார்த்தீர் அல்லவா? உம்முடைய பாட்டன் வீட்டு அரண்மனை முற்றத்தில் என் பாட்டன்மார்கள் வந்து காத்திருந்தார்கள் என்று சொல்லவில்லையா? அவர்களுடைய குடை, சிவிகை ஆகியவற்றைப் புலவர்கள் தட்டிக் கொண்டு போவதைப் பார்த்துப் பொருமினார்கள் என்று கூறவில்லையா? அதை நினைத்துப் பார்க்கப் பார்க்க எனக்குப் பொறுக்க முடியவில்லை. இரண்டில் ஒன்று தீர்த்துக் கட்டிவிட்டுத்தான் இங்கிருந்து புறப்பட வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டு இளவரசர் இரண்டு

அமரர் கல்கி

கைகளினாலும் தமது பட்டாக்கத்தியின் அடியைப் பிடித்துச் சுழற்றிக் கொண்டே வந்தியத்தேவனிடம் அணுகினார்.

ஆம்; அது சாதாரண கத்தி அன்று என்பதாகச் சொன்னோமே? எவ்வளவு பலசாலியானாலும் அதை ஒரு கையினால் தூக்கி நிறுத்துவதே பெரிய காரியம். இரண்டு கைகளினாலும் பிடித்துக் கொண்டால்தான் கத்தியைச் சுழற்றவும் எதிரியைத் தாக்கவும் முடியும்.

இளவரசர் அவ்விதம் இரு கைகளினாலும் கத்தியைச் சுழற்றியபோது அவரைப் பார்த்தால் அரண்மனையில் சுக போகங்களில் வளர்ந்த கோமள சுபாவம் படைத்த இராஜ குமாரனாகத் தோன்றவில்லை. பழைய காலத்து வீராதி வீரர்களான பீமனையும் அர்ச்சுனனையும் அரவானையும், அபிமன்யுவையும் போல் விளங்கினார். இன்னும் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழரையும் யானை மேல் துஞ்சியவரான இராஜாதித்த தேவரையும் ஒத்து, அவர்களுடைய வழியில் வந்தவர் தாம் என்பதை ஞாபகப் படுத்துமாறு வீர கம்பீரத் தோற்றத்துடன் திகழ்ந்தார்.

வந்தியத்தேவனும் இரண்டு கைகளினாலும் கத்தியைப் பிடித்துச் சுழற்றத் தொடங்கினான். ஆரம்பத்தில் அவனுடைய மனத்தில் குழப்பமும் தயக்கமும் குடி கொண்டிருந்தன. போகப் போக, மனம் திடப்பட்டது. வீர வெறி மிகுந்தது. எதிரி தன் போற்றுதலுக்கு உரிய இளவரசர் என்பது மறந்தது. எதற்காக இந்தச் சண்டை என்னும் எண்ணமும் மறைந்தது. எதிரியின் கையில் சுழலும் கத்தி ஒன்றே அவனது கண் முன் நின்றது. அக் கத்தியினால் தாக்கப்படாமல் தான் தப்புவது எப்படி, அதைத் தட்டி எறிந்து விட்டு எதிரியைக் காயப்படுத்துவது எப்படி என்ற ஒரே விஷயத்தில் அவன் கவனமெல்லாம் பதிந்திருந்தது.

கத்திகள் சுழலும் வேகமும் அவை ஒன்றின் மேல் ஒன்று மோதி 'டணார்' 'டணார்' என்ற ஒலியை எழுப்பும் வேகமும் முதலில் சவுக்க காலத்தில் தொடங்கி, மத்தியம காலத்தைத் தாண்டி, துரித காலத்துக்கு வந்தன.

இளவரசருடைய காரியம் முதலில் ஆழ்வார்க்கடியானுக்கும் விளங்கவில்லை. ஆனாலும், அதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும் என்று அவன் கருதினான். வருகிறவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், அவர்கள் இன்னார் என்று தெரிந்து கொண்டு அதற்கேற்ப நாம் செய்ய வேண்டியதை நிர்ணயிப்பதற்கும் அது ஓர் உபாயமாயிருக்கலாம். ஆகவே அந்த இரு வீரர்களுடைய குதிரைகளையும் சாலை மத்தியில் குறுக்கே நிற்கும்படி விட்டு, அவற்றின் தலைக் கயிறுகளைப் பிடித்துக்கொண்டு ஆழ்வார்க்கடியான் காத்திருந்தான்.

சாலையில் எதிர்ப்புறமிருந்து வந்து கொண்டிருந்த குதிரை வீரர்கள் நெருங்கி வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் புலிக்கொடி பறந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் ஆழ்வார்க்கடியானுடைய கவலை நீங்கியது. வருகிறவர்கள் நம்மவர்கள்தான். ஆனால் யாராயிருக்கும்?

அவர்களில் முன்னால் வந்த கட்டியக்காரர்கள் அந்த விஷயத்தைப் பறையறைந்து அறிவித்தார்கள்.

"ஈழத்துப் போரில் மகிந்தனைப் புறங்கண்ட இலங்கைப் படைகளின் சேநாதிபதி – வைகையாற்றுப் போரில் வீர பாண்டியன் தலை கொண்ட கொடும்பாளூர்ப் பெரிய வேளார் – பூதி விக்கிரம கேசரி மகாராஜா விஜயமாகிறார்! பராக்!" என்று ஒரு இடி முழக்கக் குரல் ஒலித்தது.

"பல்லவ குலத் தோன்றல் – வைகைப் போரில் வீர பாண்டியன் தலை கொண்ட வீராதி வீரர் – வடபெண்ணைப் போரில் வேங்கிப் படையை முறியடித்த பராக்கிரம பூபதி – பார்த்திபேந்திரவர்மர் விஜயமாகிறார்! – பராக்!" என்று இன்னொரு இடி முழக்கக் குரல் ஒலித்தது.

இப்படிக் கட்டியம் கூறியவர்களுக்குப் பின்னால் சுமார் முப்பது குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்களுள் நடுநாயகமாக, கம்பீரமான வெள்ளைப் புரவிகளின் மீது சேநாதிபதி பெரிய வேளாரும் பார்த்திபேந்திரனும் வீற்றிருந்தார்கள்.

குதிரை வீரர்களைத் தொடர்ந்து அம்பாரியுடன் ஒரு பெரிய யானை வந்தது.

இன்னும் சிறிது தூரத்துக்குப் பின்னால்

வந்த காலாட்படை புழுதிப் படலத்தில் மங்கலடைந்து காணப்பட்டது.

முன்னால் வந்த குதிரை வீரர்கள் வழியில் ஏற்பட்ட தடையினால் அதிருப்தி அடைந்தவர்களாகத் தோன்றினார்கள்.

"யார் அது?" "விலகு!" "வழி விடு!" என்ற சில குரல்களும் கேட்டன.

பின்னர் அக்கூட்டத்தில் 'கசமுச கசமுச' என்ற இரகசியப் பேச்சு வார்த்தைகளும் "ஓஹோ!" "ஆஹா!" என்ற வியப் பொலிகளும் எழுந்தன.

வீரர்கள் குதிரைகள் மீதிருந்து குதித்தார்கள். கத்திச் சண்டை போட்டவர்களைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனுங்கூடக் குதிரை மீதிருந்து பூமியில் இறங்கி விட்டார்கள். வீரர்களின் முன்னணியில் வந்து நின்றார்கள்.

பார்த்திபேந்திரன் பட படத்தான். விக்கிரம கேசரியிடம் "பார்த்தீர்களா? வல்லத்தானைப் பற்றி நான் சொன்னது உண்மையா, இல்லையா? சுத்த அதிகப்பிரசங்கி! இளவரசரிடமே தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டான். இதை நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதா...?" என்று தன் கையிலிருந்த கத்தியை ஓங்கினான்.

பூதி விக்கிரம கேசரி அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்தார்.

"கொஞ்சம் பொறுங்கள். பார்க்கலாம்! என்ன அற்புதமான கத்திப் போர்! இந்த மாதிரி பார்த்து எத்தனையோ நாள் ஆயிற்று!" என்றார்.

சற்றுப் பின்னால் வந்த காலாள் வீரர்கள் - சுமார் முந்நூறு பேர் - அவர்களும் வந்து சேர்ந்தார்கள். வட்ட வடிவமாக நின்று வேடிக்கை பார்க்கலானார்கள்.

இதற்குள் யானை மேல் அம்பாரியிலிருந்து ஒரு பெண் கீழே இறங்கினாள். குதிரைகளுக்கும் வீரர்களுக்கும் இடையிடையே புகுந்து வந்து அவள் வேடிக்கை பார்த்த வட்டத்தின் முன்னணியில் நின்று கொண்டாள்.

அவளுடைய முகத்தில் அச்சமயம் குடி கொண்டிருந்த கிளர்ச்சியை இப்படி யென்று சொல்ல முடியாது. கத்திகள் அங்கு மிங்கும் பாய்ந்தபோது அவளுடைய கண் விழிகளும் பாய்ந்தன. போரிட்டவர்கள் அப்படியும் இப்படியும் குதித்தபோது அவளையறியாமல் அவளுடைய இடை துவண்டு அப்படியும் இப்படியும் ஆடியது. சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் தன் கூந்தலில் செருகியிருந்த காம்புடன் கூடிய நீலோத்பல மலரை எடுத்துக்கொண்டாள். அதை இப்படியும் அப்படியும் சுற்றிச் சுழற்றத் தொடங்கினாள். கத்திகள் சுழன்ற தாளத்துக்கு இசைய அவளுடைய கையிலிருந்த பூவின் தண்டு சுழன்றது. - இந்தப் பெண் யார் என்று வாசகர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆம்; பூங்குழலியை அவர்கள் மறந்திருக்க முடியாதல்லவா?

சிறிது நேரம் வரையில் அவளுடைய முகத்துக்கு எதிரே இளவரசர் முகம் தெரியும்படியாக அவ்வீரர்கள் நின்று போரிட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து பாதி வட்டம் சுற்றி வந்தனர். கடைசியில் வந்தியத்தேவனுடைய முகம் பூங்குழலியின் முகத்துக்கு எதிராக வந்தது. இடையிடையே வந்தியத்தேவனுடைய கண்கள் சுற்றிலும் பெருகி வந்த வீரர் கூட்டத்தைக் கவனித்து வந்தன. அப்போது பூங்குழலியையும் பார்த்து விட்டன. திடீரென்று அந்தப் பெண்ணைப் பார்த்த வியப்பினால் ஒருகணம் அவன் கவனம் சிதறியது. அந்த ஒருகண நேரமே இளவரசருக்குப் போதுமாயிருந்தது. வந்தியத்தேவனுடைய கத்தியின் மீது தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்தைப் போல் இளவரசரின் கத்தி தாக்கியது. வாணர்குல வீரன் தடுமாறினான். அவனுடைய கைப்பிடியிலிருந்து நழுவிப் பட்டாக்கத்தி கீழே விழுந்தது.

சுற்றிலும் கூடியிருந்தவர்கள் அச்சமயம் எழுப்பிய ஆரவாரம் அலைகடலின் ஓசையை ஒத்திருந்தது. அவ்வளவு ஆரவாரத்தையும் மீறிக் கொண்டு ஓர் இளம் பெண்ணின் உற்சாகமான சிரிப்பொலி கேட்டது.

வந்தியத்தேவன், கீழே விழுந்த கத்தியை மீண்டும் எடுப்பதற்குப் பிரயத்தனம் செய்தான்.

இதற்குள் இளவரசர் பாய்ந்து சென்று அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"நீர் என்னுடைய வாளுக்குத் தோற்க

வில்லை. வாளுக்கு வாள் சமமான லாகவத்துடன் போரிட்டீர். ஆனால் ஒரு பெண்ணின் கண் வாளுக்குத் தோற்றீர்! இதில் அவமானம் ஒன்றுமில்லை. எல்லோருக்கும் நேரக் கூடியதுதான்!'' என்றார்.

வந்தியத்தேவன் அதற்கு ஏதோ சமாதானம் சொல்ல ஆரம்பித்தான். அதற்குள் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனும் அவர்களை நெருங்கி வந்து விட்டார்கள்.

"இளவரசே! இந்தப் பிள்ளையை நான் தான் தங்களிடம் அனுப்பினேன்! இவன் ஏதாவது தவறாக நடந்து கொண்டு விட்டானா? கொஞ்ச நேரம் கதி கலங்கிப் போய் விட்டோம்!'' என்றார்.

"ஆம், தளபதி! இவருடைய ஏச்சை என்னால் பொறுக்க முடியவில்லை. 'இலங்கையில் யுத்தம் நடக்கிறது என்றார்களே, யுத்தம் எங்கே? யுத்தம் எங்கே?' என்று கேட்டு என்னைத் துளைத்து விட்டார். 'இதோ யுத்தம்!' என்று காட்டினேன்!''

இவ்வாறு இளவரசர் கூறியதும் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் மறுபடியும் ஆரவாரம் செய்தார்கள்.



சேனாதிபதி வந்தியத்தேவனுடைய அருகில் வந்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். "அப்பனே! இந்த மாதிரி கத்திச் சண்டை பார்த்து எத்தனையோ நாள் ஆயிற்று! இளவரசருக்கு சரியான துணைவன் நீ! சில சமயம் அவருக்கு இப்படித்தான் திமுர் திமுர் என்று தோள் தினவு எடுக்கும்! 'குஞ்சர மல்லன்' என்று பெயர் பெற்ற பராந்தக சக்கரவர்த்தியின் வம்சத்தில் பிறந்தவர் அல்லவா? அவருடன் நேருக்கு நேர் நின்று சண்டை பிடிக்க முடியாதவர்கள் அவருடன் நெடுநாள் சிநேகமாயிருக்க முடியாது!" என்றார்.

இதற்குள் இளவரசர் பார்த்திபேந்திர பல்லவரின் சமீபமாகச் சென்று, "ஐயா! தாங்கள் என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். தங்களைச் சந்திப்பதற்காகவே விரைந்து வந்தேன். காஞ்சியில் தமையனார் சௌக்கியமா? என் பாட்டனார் எப்படியிருக்கிறார்?" என்று கேட்டார்.

"தமையனாரும் பாட்டனாரும் தங்களுக்கு மிகவும் முக்கியமான செய்தி அனுப்பியிருக்கிறார்கள். இலங்கைக்கு வந்து தங்களைக் கண்டுபிடிப்பதற்கே



நாலைந்து தினங்கள் ஆகிவிட்டன. இனி ஒருகணமும் தாமதிப்பதற்கில்லை..." என்று பார்த்திபேந்திரன் கூறுவதற்குள், இளவரசர்–

"முக்கிய காரியமாக இல்லாவிட்டால் தாங்களே புறப்பட்டு வருவீர்களா? இனி ஒருகணமும் தாமதிக்க வேண்டியதில்லை. இப்போதே செய்தியைத் தெரிவிக்க வேணும்!" என்றார்.

இச்சமயம் அவர்கள் சமீபத்தில் வந்த சேனாதிபதி பெரிய வேளார் "நடுச் சாலையில் இத்தனை பேருக்கு நடுவிலே ஒன்றும் பேச முடியாது. அதோ ஒரு பாழும் மண்டபம் தெரிகிறதே! அங்கே போகலாம்! நல்ல வேளையாக இந்த இலங்கையில் பாழும் மண்டபத்துக்குக் குறைவு கிடையாது!" என்றார்.

சாலைக்கு அப்பால் கொஞ்ச தூரத்திலிருந்த பாழும் மண்டபத்தை நோக்கி அனைவரும் போனார்கள்.

நாற்பதாம் அத்தியாயம்

மந்திராலோசனை

போகும் போது வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானை நெருங்கி, "இது என்ன, இளவரசர் இப்படிச் செய்கிறார்? அன்று திடீர் என்று குத்துச்சண்டை போட்டார்; இன்று கத்திச் சண்டையில் இறங்கினார். சொல்லி விட்டாவது சண்டையை ஆரம்பிக்கக் கூடாதா! இளவரசருடைய சிநேகம் மிகவும் ஆபத்தாயிருக்கும் போலிருக்கிறதே!" என்றான்.

இளவரசர் இதைக் கேட்டுக் கொண்டே அவர்கள் பக்கத்தில் வந்து விட்டார்.

"ஆம், ஐயா! என்னுடைய சிநேகம் மிகவும் ஆபத்தானதுதான். நேற்றிரவே அது உமக்குத் தெரிந்திருக்குமே? ஆபத்துக்கு உள்ளாகாமல் இருக்க வேண்டுமானால் நான் இருக்குமிடத்திலிருந்து குறைந்தது பத்து காத தூரத்தில் இருக்க வேண்டும்!" என்றார்.

"இளவரசே! அதற்காக நான் சொல்லவில்லை. தங்கள் பக்கத்திலிருந்து எந்தவித ஆபத்துக்கும் உட்படுவதற்கு நான் சித்தம். ஆனால் இப்படி நீங்கள் திடீர் திடீர் என்று..."

இப்போது வீர வைஷ்ணவன் குறுக்கிட்டு, "இது தெரியவில்லையா தம்பி உனக்கு? எதிரே வருகிறவர்கள் யார் என்று தெரிந்து அதற்குத் தக்கபடி காரியம் செய்வதற்காக இளவரசர் இந்த உபாயத்தைக் கையாண்டார்! வருகிறவர்கள் யாராயிருந்தாலும் கத்திச் சண்டையைக் கண்டால் கொஞ்சம் நின்று பார்ப்பார்கள் அல்லவா?" என்றான்.

இளவரசர், "திருமலை சொல்வதும் சரிதான். என்னுடைய ஜாதக விசேஷமும் ஒன்று இருக்கிறது. என்னுடன் யாராவது சிநேகமாயிருந்தால் அவர்களுக்கு மற்றவர்களின் அசூயையும் பகைமையும் நிச்சயம் சித்திக்கும். அதற்காக, நான் யாருடைய சிநேகத்தையாவது விரும்பினால் அவர்களுடன் அடிக்கடி சண்டை பிடிப்பது வழக்கம். இதைப் பொருட்படுத்தாதவர்கள்தான் என்னுடைய சிநேகிதர்களாயிருக்க முடியும்!" என்றார்.

"அப்படியானால் சரி! இனிமேல் தாங்கள் சண்டையை ஆரம்பிப்பதற்குக் காத்திராமல் நானே ஆரம்பித்து விடுகிறேன். இளவரசே! தங்களுக்குச் செய்தி கொண்டு வந்த நான் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல மறந்து விட்டேன். அதை இப்போது சொல்லி விட விரும்புகிறேன்! சொல்லியே ஆக வேண்டும். தாங்கள் கேட்க விரும்பா விட்டால், மறுபடியும் கத்தியை எடுங்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

"வேண்டாம்! செய்தியைச் சொல்லுங்கள். கேட்கிறேன்."

"நம்மைச் சுற்றி நின்ற கூட்டத்தில் ஒரு பெண் கையில் காம்புள்ள குமுத மலருடன் நின்று கொண்டிருந்தாளே, அவளுடைய கண் வீச்சுக்கு நான் தோற்று விட்டேன் என்று கூடத் தாங்கள் சொல்லவில்லையா? அந்தப் பெண் யார் தெரியுமா?"

"தெரியாது; அவளை நான் நன்றாய்ப்

பார்க்கவில்லை. பார்க்கும் வழக்கமும் எனக்குக் கிடையாது."

"இளவரசே! அவள்தான் தங்களுக்கு ஒரு செய்தி சொல்லி அனுப்பினாள். சொல்லத் தவறி விட்டேன். எப்படிச் சொல்வது? தங்களைச் சந்தித்ததிலிருந்து தங்களுடன் துவந்த யுத்தம் செய்வதற்கும் தலையில் விடு இடிந்து விழாமல் தப்பு வதற்கும் சரியாயிருக்கிறதே! ஆகையால் சொல்லச் சரியான சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. திடீரென்று அந்தப் பெண்ணைப் பார்த்தபோது அவள் கூறிய செய்தியைச் சொல்லவில்லையே என்ற நினைவு வந்தது. அப்போது சிறிது அசந்து விட்டேன். அந்தச்சமயம் பார்த்து என் கத்தியைத் தட்டி விட்டீர்கள்..."

"போகட்டும்; அந்தப் பெண் யார்? அவள் எதற்காக எனக்குச் செய்தி அனுப்ப வேண்டும்?"

"ஐயா! அவள்தான் பூங்குழலி."

"அழகான பெயர். ஆனால் நான் கேள்விப்பட்டதில்லை."

"ஐயா! 'சமுத்திர குமாரி' என்ற பெயர் நினைவிருக்கிறதா?"

"சமுத்திர குமாரி – சமுத்திர குமாரி – அப்படி ஒரு பெயரும் எனக்கு நினைவில் இல்லையே! அவளைப் பார்த்ததாகக் கூட ஞாபகம் இல்லையே!"

"தயவு செய்து கொஞ்சம் ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். தங்களுக்கு நினைவில்லையென்றால் அந்தப் பெண் ணின் நெஞ்சு உடைந்து விடும். கோடிக் கரையில் தாங்கள் மரக்கலம் சேருவதற் காகப் படகில் ஏறச் சித்தமாயிருந்தீர்கள். அச்சமயம் ஒரு பெண் தன்னந் தனியாகப் படகு விட்டுக் கொண்டு கடலிலிருந்து கரைக்கு வந்தாள். தாங்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அவளும் நீங்கள் எல்லாரும் யார் என்று தெரிந்து கொள்வதற்காக நீங்கள் நின்ற இடத்துக்குச் சமீபமாக வந்தாள். 'இந்தப் பெண் யார்?' என்று தாங்கள் கலங்கரை விளக்குத் தலைவரைக் கேட்டீர்கள். அவர் 'இவள் என் குமாரி' என்றார். தாங்கள் உடனே 'ஓகோ! இவள் உமது குமாரியா? சமுத்திர குமாரி என்றல்லவா நினைத்தேன்?' என்றீர் கள். அதை அந்தப் பெண் மறக்காமல் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணின் உதவியினால்தான் நான் கடல் கடந்து இலங்கைக்கு வர முடிந்தது..."

"நீர் சொன்ன பிறகு எனக்கும் இலே சாகக் கொஞ்சம் நினைவுக்கு வருகிறது. ஆனால் கோடிக்கரை சமுத்திர குமாரிக்கு இங்கே அநுராதபுரத்துக்குச் சமீபத்தில் என்ன வேலை? இவர்களுடன் எதற்காக வந்திருக்கிறாள்? ஒருவேளை உம்மைத் தேடிக் கொண்டா...?"

"இல்லை: அப்படி ஒரு நாளுமிராது. என்னைத் தேடி வர நியாயம் இல்லை. யாரையாவது தேடி வந்திருந்தால் அது தங்களைத் தேடித்தான் இருக்க வேண்டும். எதற்காக என்று எனக்குத் தெரியாது!"

இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தியத்தேவன் சற்று தூரத்தில் சேநாதிபதியின் பக்கத்தில் வந்து கொண்டிருந்த பூங்குழலியைப் பார்த்தான். அவள் தலை குனிந்த வண்ணம் நடந்தான். ஆயினும் அவளுடைய கவனம் கருத்து எல்லாம் இளவரசரிடமே இருக்கின்றன என்பதை உணர்ந்து கொண்டான். சிறிது நேரத்துக்கொரு தடவை அவளுடைய கடைக்கண் இளவரசரை நோக்குவதையும் அறிந்தான். அச்சமயம் அவளைப் பற்றித் தாங்கள் பேசுகிறோம் என்பதும் உள்ளு ணர்வினால் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அப்படி அவள் குனிந்த தலை நிமிராமல் நடப்பதற்கு யாதொரு அவசியமும் இல்லையே! அம் மம்மா! ஒருகணமும் பார்த்த திசையைப் பாராமல் ஓயாமல் சலித்துக் கொண்டி ருக்கும் கண்கள் அல்லவா அவளுடைய கண்கள்!

மேற் கூரையில்லாமல் வேலைப் பாடான கருங்கல் தூண்கள் மட்டும் நின்ற மண்டபத்தை அவர்கள் அடைந்தார்கள். சுற்றிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் அந்த மண்டபத் துக்கு ஓரளவு நிழலை அளித்தன. மண்ட பத்தின் மத்தியில் ஒரு மேடான பீடமும் இருந்தது. அங்கே சென்று இளவரசரும் சேநாதிபதியும் பார்த்திபேந்திரனும் அமர்ந்தார்கள்.

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடி யானும் சற்றுத் தள்ளி நின்றார்கள்.

இன்னொரு பக்கத்தில் ஒரு தூணின்

மறைவில் பூங்குழலி நின்று கொண்டிருந்தாள். அங்கிருந்தபடி அவள் இளவரசரையும் வந்தியத்தேவனையும் பார்க்கக் கூடியதாயிருந்தது.

அந்தக் கூரையில்லாத மண்டபத்தைச் சுற்றிலும் வீரர்கள் வியூகம் வகுத்தது போல் இரண்டு வரிசையாக நின்றார்கள்.

இன்னும் சற்றுத் தூரத்தில் குதிரைகளும் யானையும் நிறுத்தப்பட்டிருந்தன.

இளவரசர் பார்த்திபேந்திரனைப் பார்த்து "எம் தமையனாரும் பாட்டனாரும் என்ன செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்? கேட்க ஆவலாயிருக்கிறேன்!" என்றார்.

"இளவரசே! சோழ ராஜ்யம் பெரிய அபாயத்துக்குள்ளாகியிருக்கிறது. இது தங்களுக்குத் தெரிந்திருக்கும்..."

"ஆம், ஐயா! சக்கரவர்த்தி நெடு நாளாக நோய்ப்பட்டிருக்கிறார்..."

"அபாயம் அது மட்டுமல்ல; சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது. பெரிய அதிகாரங்களில் உள்ளவர்கள் துரோகிகளாகி விட்டார்கள். சக்கரவர்த்திக்கும் பட்டத்து இளவரசருக்கும் தங்





களுக்கும் விரோதமாகச் சதி செய்யத் தொடங்கி விட்டார்கள். தங்கள் தமைய னாருக்குப் பட்டம் இல்லை என்று சொல்லி விட்டுச் சிவபக்தி வேஷதாரி யான உருத்திராட்சப் பூனை மதுராந்த கனுக்குப் பட்டம் கட்டுவது என்றும் தீர் மானித்திருக்கிறார்கள். பழுவேட்டரையர் களும், சம்புவரையர்களும், இரட்டைக் குடை இராஜாளியாரும், மழபாடி மழ வரையரும், மற்றும் இவர்களைப் போன்ற வேறு பல துரோகிகளும் இந்தக் கூட்டுச் சதியில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பற்றி நாம் சிறிதும் கவ லைப்பட வேண்டியதில்லை. வடதிசை சைன்யமும் தென்திசை சைன்யமும் நம் வசத்தில் இருக்கின்றன. திருக்கோவலூர் மிலாடுடையாரும் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரும் நம் பக்கம் இருக்கிறார் கள். இவர்களுடைய உதவிகளைக் கொண் டும் சைன்யத்தின் துணை கொண்டும் துரோகிகளின் சதியை ஒரு நொடியில் சின் னாபின்னப் படுத்தி விடலாம். ஆனால் எதிரிகளுக்கு அதிக காலம் இடங் கொடுத்து விடக் கூடாது. துரோகிகளின் சூழ்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதை முன்னிட்டுத் தங்களை உடனே காஞ்சிக்கு அழைத்து வரும்படியா கத் தங்கள் தமையனாரும் பாட்டனாரும் என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள். இச்சமயத்தில் நீங்கள் சகோதரர்கள் இரு வரும் பிரிந்திருக்கலாகாது என்றும் ஒரே இடத்தில் இருப்பது மிக அவசியம் என்றும் தங்கள் பாட்டனார் கருதுகிறார். இன்னும், தங்கள் தமையனாரின் உள்ளத்தில் இருப் பதையும் சொல்லிவிட விரும்புகிறேன். அவருக்கு ஒரே இடத்தில் இருந்து இராஜ் யம் ஆளுவதில் விருப்பம் இல்லை. கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் கப்பலேறிச் செல்ல வேண்டுமென்றும் அந்த நாடுகளை யெல்லாம் வென்று சோழர் புலிக் கொடி யைப் பறக்க விட வேண்டுமென்றும் அவர் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார். வடநாட் டுப் படையெடுப்புக்குப் பழுவேட்டரை யர்கள் முட்டுக்கட்டை போட்டதிலிருந்து அவருடைய போர் வெறி ஒன்றுக்குப் பத்து மடங்கு ஆகியிருக்கிறது. ஆகையால் தாங் கள் காஞ்சி வந்து சேர்ந்ததும் தஞ்சைக்குப் படையெடுத்துச் சென்று சதிகாரர்களை யெல்லாம் அதம் செய்து ஒழித்து விட்டுச் சோழ சிம்மாசனத்தில் தங்களை அமர்த்தி முடிசூட்டி விட்டு..."

இத்தனை நேரம் கவனத்துடனும் மரி யாதையுடனும் கேட்டு வந்த இளவரசர் இப்போது தம் செவிகளைக் கையினால் மூடிக்கொண்டு, "வேண்டாம்! அத்தகைய விபரீத வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். சோழ சிம்மாசனத்துக்கும் எனக்கும் வெகு தூரம்!" என்றார்.

"தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் நான் சொல்லவில்லை. அது தங்களுடைய தமையனார் இஷ்டம்; தங்கள் இஷ்டம். நீங்கள் சகோதரர்கள் விவாதித்துத் தீர்த்துக் கொள்ள வேண்டியது. ஆனால் சதிகாரர் களை ஒழிப்பதில் இரண்டு பேரும் ஒன்று பட வேண்டியது அவசியம். உடனே தாங் கள் காஞ்சிக்குப் புறப்பட்டு வாருங்கள். பழுவேட்டரையர்களையும் சம்புவரை யர்களையும் பூண்டோடு அழிப்போம். சிவபக்தி வேஷதாரியான மதுராந்தகனைச் சிவலோகத்துக்கே அனுப்பி வைப்போம். பிறகு தாங்களும் தங்கள் தமையனாரும் யோசித்து உசிதம்போல் முடிவு செய்யுங் கள்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஐயா! எல்லாம் நாமே முடிவு செய்ய வேண்டியதுதானா? என் தந்தை – சக்கர வர்த்தி – அவருடைய விருப்பம் இன்ன தென்று நாம் தெரிந்து கொள்ள வேண் டாமா? ஒருவேளை தாங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா? என் தமையனாருக் குத் தந்தையிடமிருந்து ஏதேனும் அந்தரங் கச் செய்தி வந்ததா...?"

"இளவரசே! இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையைச் சொல்ல வேண்டியது அவசி யம். மூடி மறைப்பதில் பயனில்லை. தங்கள் தந்தையின் விருப்பத்தை இச் சமயம் அறிந்து கொள்வது இயலாத காரியம். சக்கரவர்த்தி இப்போது சுதந்திர புருஷரா யில்லை. பழுவேட்டரையர்களின் சிறை யில் இருக்கிறார். அவர்களுடைய அனுமதி யின்றி யாரும் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது; பேசவும் முடியாது. அவருடைய விருப்பத்தைத் தெரிந்து கொள்வது எங் ஙனம்? தந்தையைக் காஞ்சிக்கு வரச் சொல் வதற்காகத் தங்கள் தமையனார் பெரு முயற்சி செய்தார். காஞ்சியில் பொன் மாளிகை கட்டினார். சக்கரவர்த்தி விஜயம் செய்து கிரகப்பிரவேசம் செய்ய வேண்டும்

என்று அழைப்பு அனுப்பினார். ஆனால் சக்கரவர்த்தியிடமிருந்து மறு ஓலை வரவில்லை..."

"என் தந்தை நோய்ப்பட்டிருப் பதும் நடக்க முடியாதவராயிருப் பதும் தெரிந்த விஷயந்தானே?"

"இளவரசே! தங்கள் தந்தை - மூன்று உலகங்களின் சக்கரவர்த்தி - காஞ்சிக்குக் காலால் நடந்து வர வேண்டுமா? யானைகள் குதிரை கள் இல்லையா? வண்டி வாகனங் கள் இல்லையா? தங்க ரதங்களும் முத்துச் சிவிகைகளும் இல்லையா? தலையால் சுமந்து கொண்டு வரு வதற்கு முடிசூடிய சிற்றரசர்கள் ஆயிரம் பதினாயிரம் பேர் போட்டி போட்டுக் கொண்டு வர மாட்டார் களா? காரணம் அதுவன்று. பழுவேட்டரையர்களின் துரோகந் தான் காரணம். தஞ்சை அரண் மனை இப்போது சக்கரவர்த்தியின் சிறையாக மாறி விட்டது... இள வரசே! தங்கள் தந்தையின் உயிரைக் காப்பாற்ற விரும்பினால் உடனே புறப்பட்டு வாருங்கள்!"

இந்த வார்த்தைகள் இளவர சரின் உள்ளத்தைக் கலக்கி விட்டன என்பது நன்றா கத் தெரிந்தது. அவருடைய களை பொருந்திய முகத்தில் முதன்முத லாகக் கவலைக் குறி தென்பட்டது.

இளவரசர் சிறிது நேரம் சிந்த னையில் ஆழ்ந்திருந்து விட்டுச் சேநாதிபதியின் முகத்தை ஏறிட் டுப் பார்த்தார்.

"தளபதி! தங்களுடைய யோசனை என்ன? சில நாளைக்கு முன்பு முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் வந்திருந்தார். அவர் என் தந்தையின் மதிப்புக்கும் அந்த ரங்க அபிமானத்துக்கும் உரியவர். அவர் என்னை இலங்கையிலேயே சில காலம் இருக்கும்படி யோசனை சொன்னார். தாங்களும் அதை ஆமோதித்தீர்கள். 'இங்கே சண்டை ஒன்றும் நடக்கவில்லையே, நான் எதற்கு இருக்க வேண்டும்?' என்று



கேட்டதற்குச் சமாதானம் சொன்னீர்கள். முதன்மந்திரி இதோ நிற்கும் வைஷ்ண வரிடம் அதே யோசனையைத் திரும்பச் சொல்லி அனுப்பியிருக்கிறார். என் தமக்கை இளையபிராட்டியிடம் எனக்கு எவ்வளவு மதிப்பு உண்டு என்பது தங்களுக் குத் தெரியும். அவர் இட்ட கோட்டை நான் தாண்ட மாட்டேன். இலங்கைக்கு அவர் வரச் சொல்லித்தான் வந்தேன். இளைய பிராட்டி இதோ இந்த வாணர் குலத்து வீரனிடம் ஓலை அனுப்பியிருக் கிறார். ஒரு விதத்தில் என் தமக்கையின் செய்தியும் பார்த்திபேந்திரர் கூறியதை ஒட்டியிருக்கிறது. ஆனால் உடனே புறப் பட்டுப் பழையாறைக்கு வரும்படி எழுதி அனுப்பியிருக்கிறார். என் தமையனாரோ காஞ்சிக்கு வரும்படி இவரிடம் கூறி அனுப்பியுள்ளார். சேநாதிபதி! தங்களு டைய கருத்து என்ன?" என்றார்.

"இளவரசே! இன்று காலை வரையில் தாங்கள் இந்த இலங்கைத் தீவிலேயே இருக்க வேண்டும் என்ற கருத்துடனேயே நான் இருந்தேன். நேற்றிரவுகூட இவருடன் நெடுநேரம் விவாதித்துக் கொண்டிருந் தேன். இவர் வெகு நேரம் வாதித்தும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இன்று அதிகாலையில், அதோ நிற்கிறாளே, அந் தப் பெண் வந்து ஒரு செய்தி சொன்னாள். அதைக் கேட்டதும் என் கருத்தை மாற்றிக் கொண்டேன். தாங்கள் உடனே காஞ்சிக் குப் போக வேண்டியது அவசியம் என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது!" என் றார் இலங்கைச் சேநாதிபதி.

தூண் மறைவிலே நின்று தன்னைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த பூங்குழலியின் மீது இளவரசர் தம் பார்வையைச் செலுத்தி னார்.

"அபிமன்யுவை நாலாபுறமும் பகைவர் கள் தாக்கிக் கொன்றதாகக் கேள்விப்பட்டி ருக்கிறேன். என்னை நாலாபுறமிருந்து வரும் செய்திகளே தாக்கிக் கொன்று விடும் போலிருக்கிறது!" என்று இளவரசர் சொல் லிக் கொண்டார்.

"அந்தப் பெண் என்னதான் செய்தி கொண்டு வந்திருக்கிறாள்?" என்றார்.

"அவளே சொல்லட்டும்!" என்றார் பெரிய வேளார்.

பூங்குழலி தயங்கித் தயங்கி நடந்து வந் தாள். இளவரசர் முன்னால் வந்து நின் றாள். நாலு பக்கமும் திரும்பிப் பார்த்தாள். சேநாதிபதியைப் பார்த்தாள்; பார்த்திபேந் திரனைப் பார்த்தாள்; சற்றுத் தூரத்தில் நின்ற வந்தியத்தேவனையும் ஆழ்வார்க்கடி யானையும் பார்த்தாள். இளவரசர் முகத்தை மட்டும் அவளால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

"பெண்ணே! சொல், சீக்கிரம்!" என்றார் சேநாதிபதி.

பூங்குழலி ஏதோ சொல்ல முயன்றாள். ஆனால் வார்த்தைகள் ஒன்றும் வர வில்லை.

"ஆகா! இந்த உலகமே ஊமை மயமாகி விட்டது போல் காண்கிறது!" என்றார் அருள்மொழிவர்மர்.

அவ்வளவுதான். பூங்குழலி தன் கண்ணி மைகளை உயர்த்தி ஒருதடவை, ஒருகணத்தி லும் சிறிய நேரம் இளவரசரை நோக்கி னாள். அதற்குள் அக் கண்களில் கண்ணீர் ததும்பி வழிய ஆரம்பித்து விட்டது. உடனே அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள். ஓடிப் போய்த் தூரத்தில் அடர்ந்து வளர்ந் திருந்திருந்த மரங்களுக்கிடையில் மறைந் தாள்.

எல்லாரும் வியப்புடன் அதைப் பார்த் துக் கொண்டு நின்றார்கள்.

வந்தியத்தேவன் முன் வந்து "ஐயா! இவள் முன்னொருதடவை இப்படித்தான் ஓடினாள். நான் தொடர்ந்து போய்ப் பிடித்து விட்டேன். அனுமதி கொடுத்தால் இப்போதும் சென்று பிடித்துக் கொண்டு வருகிறேன்!" என்றான்.

"அப்படியே செய்! ஆனால் அதற்குள் அவள் கொண்டு வந்த செய்தி என்ன என் பதைச் சேநாதிபதி சொல்லட்டும்!" என் றார் இளவரசர்.

அதற்குச் சேநாதிபதி, "அதை இரண்டே வார்த்தைகளில் சொல்லி விடலாம். இளவரசே! தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரை யர்கள் இரண்டு பெரிய மரக்கலங்களையும் அவை நிறையப் போர் வீரர்களையும் அனுப்பியிருக்கிறார்கள். மரக்கலங்கள் தொண்டைமான் ஆற்றுக் கால்வாயில் புகுந்து மறைவான இடத்திலே வந்து நிற் கின்றன!" என்றார்.

(தொடரும்)

பதவி துரத்துகிறது!

மனிதன் தப்புவதற்கு என்னென்ன முயற்சி செய்தாலும் எங்கே போய் ஒளிந்தாலும் விதி அவனை விடாமல் துரத்திச் செல்வது போலவும், கோதண்டத்திலிருந்து விடப்பட்ட ராம பாணம் குறியை விடாது துரத்திக்கொண்டு போவது போலவும், காட்டு மிருகங்களை வேட்டைக்காரர்கள் துரத்திக் கொண்டு ஓடுவது போலவும், சிலர் இந்த உலக வாழ்க்கையில் பதவிகளைத் துரத்திக் கொண்டு போவதுண்டு.

ஆனால் வேறு சிலரையோ அவர்கள் என்னதான் தப்பிக்கப் பார்த்தாலும் விடாமல் பதவி துரத்திக்கொண்டு போகிறது! அவர்கள் ஓடிப் போய் ஒளிந்து கொண்டாலும் பதவி அவர்களை விடுவதில்லை. வேண்டாம் என்று எவ்வளவு மறுத்தாலும் கேட்பதில்லை. அவ்விதம் பதவி தற்போது நம் தலைவர் ராஜாஜியைத் துரத்திக் கொண்டிருக்கிறது! துரத்திப் பிடித்து விட்டதென்றே சொல்லும்படியிருக்கிறது.

ஒரு காலத்தில் ராஜாஜியைப் பதவி வேட்டைக்காரர் என்று சில மகான்கள் சொன்னதுண்டு; அதைக் கேட்டு நம்மவர்களில் சிலர் கோபங் கொண்டதுண்டு. இப்போது அவர்கள் சொன்னதை நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. நமக்குக் கோபம் வந்ததையெண்ணினாலும் சிரிப்புத்தான் வருகிறது!

சர்வ சங்கபரித் தியாகியான ஒருவரைப் பதவி மோகம் கொண்டவர் என்று சொல்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்? அத்தகைய பைத்தியக்காரத்தனத்தைக் குறித்துச் சிரிக்கத்தானே வேண்டும்? அன்றியும், தாமரை இலைத் தண்ணீர்போல் வாழ்க்கை நடத்தும் ஒருவரைக் குறித்து யாரோ குறை சொல்லி விட்டதற்காக நமக்கு ஏன் கோபம் வர வேண்டும்? இதுவும் சிரிக்கத்தக்க விஷயந்தான்! அந்தக் குறை அவரைப் பாதிக்காதிருக்கும்போது நம்மை ஏன் பாதிக்க வேண்டும்?

• • •

சென்னை மாகாணத்துப் பிரதம மந்திரி பதவிமீது ஒருசமயம் ராஜாஜி அவர்களுக்கு 'மோகம்' இருந்தது உண்மைதான். அத்தகைய 'மோகம்' கொண்டதற்குச் சரியான காரணங்களும் இருந்தன. முன்னொரு சமயம் ராஜாஜி இரண்டு வருஷம் இம் மாகாணத்தின் பிரதம மந்திரியாயிருந்தபோது சில முக்கியமான நிர்மாண வேலைகளை ஆரம்பித்திருந்தார். இம் மாகாண மக்களுக்குச் சில நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார். மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டியாயிருப்பதற்குரிய சிற்சில இலட்சியங்களை வகுத்திருந்தார். அந்த வேலைகள் – இலட்சியங்களையெல்லாம் அரைகுறையாகவும் ஆரம்பித்தவுடனேயேயும் அப்படியே நிறுத்தி விட்டு, ராஜினாமா செய்யும்படி நேரிட்டது. மகா யுத்தம் காரணமாகத்தான். யுத்தம் முடிந்த பிறகு தாம் ஆரம்பித்திருந்த, திட்டமிட்டிருந்த, அந்த வேலைகளையெல்லாம் மறுபடியும் தொடங்கித் துரிதமாக முடிக்க வேண்டும் என்று கருதினார். அது தம் கடமை என்றும் நம்பினார். துரதிர்ஷ்டவசமாக அந்தச்

அமரர் கல்கி

சமயத்திலேதான் "ராஜாஜி பதவி வேட்டைக்காரர்!" என்ற அவதூறு எழுந்தது. தம்மீது கூறப்பட்ட அவதூறை ராஜாஜி பொருட்படுத்தவில்லை. ஆனால் புனிதமான மகாத்மாவின் திருநாமம் மேற்படி விவாதத்தில் இழுக்கப்பட்டபோது, "ராஜாஜியின் பதவி மோகம் மகாத்மாவையும் பிடித்துக் கொண்டது!" என்று சிலர் வாய் கூசாமல் சொல்லத் துணிந்தபோது, ராஜாஜி "ஐயோ! நமது அருமைத் தமிழ்நாட்டு மக்கள் இப்படி அநியாயமாய் அபசாரத்துக்கு உள்ளாகிறார்களே!" என்று இரக்கங் கொண்டார். உடனே சட்டசபைத் தேர்தலிலிருந்து விலகிக் கொண்டார். அச்சமயம் ராஜாஜி அரசியலிலிருந்து அடியோடு விலகி வேறு வகை தேசத் தொண்டுகள் புரிவது என்றே முடிவு செய்திருந்தார்.

ஆனால் ராஜாஜி பதவியை விட்டுத் தொலைத்துத் தலை முழுகிவிட்டாலும், பதவி அவரை விடுகிற வழியாயில்லை. பதவி அவரைத் துரத்தத் தொடங்கியது. துரத்திப் பிடித்துக்கொண்டு போய் முதலில் புது டில்லியில் அமர்த்தியது. பிறகு கல்கத்தா வரையில் துரத்திச் சென்று வங்கக் கவர்னர் சிம்மாசனத்தில் அமர்த்தியது. அதற்குப் பிறகாவது விட்டதா? மறுபடியும் புதுடில்லிக்கு அழைத்து வந்து கவர்னர்-ஜெனரல் சிம்மாசனத்திலும் அவரை உட்கார வைத்தது!

இந்தப் பதவிகள் எப்போது தம்மை விடப் போகின்றன என்று ராஜாஜி காத்துக் கொண்டிருந்தார் என்று சொன்னால், ராஜாஜியை அறிந்தவர்கள் அது உண்மையென்று உணர்வார்கள். களங்கமுற்ற மனதையுடையவர்கள் வேறு ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. கடைசியாக, ராஜாஜியின் பேரில் பதவிகளுக்கிருந்த மோகம் தீர்ந்து விட்டதாகத் தோன்றியது. பத



விகள் அவரை இனித் தொடர மாட்டா என்றும் ஆசையுடன் நம்பினோம். கவர்னர் ஜெனரல் பதவியை விட்டு, ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் அவர்களிடம் பொறுப்புக்களை ஒப்புவித்து விட்டு ராஜாஜி சென்னைக்கு வந்தார். திரும்பிப் போகும் எண்ணம் அணுவளவும் அவருக்கு இருக்கவில்லை. வயது எழுபது பூர்த்தியாகிவிட்டது. வானப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொள்ள வேண்டிய காலந்தான். உடலுக்கும் உள்ளத்துக்கும் ஓய்வு அளிக்கவும், மனதுக்குந்த சில திருப்பணிகளைச் செய்யவும் திட்டமிட்டிருந்தார். ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்று தயாரிக்க வேண்டும் என்பது ராஜாஜி வெகுநாளாகக் கொண்டிருக்கும் ஆர்வம். கூடியவரையில் ஆங்கிலத்தில் உள்ள முக்கியமான எல்லா வார்த்தைகளுக்கும் தமிழில் பிரதி பதம் கண்டுபிடிப்பது, பிரதி பதம் இல்லாவிட்டால் புதிதாகக் கற்பிப்பது, - என்னும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து விட்டார். இத்தகைய சொல்லாராய்ச்சியில் மிக்க ஆர்வமும் ஊக்கமும் கொண்டவர் ராஜாஜியின் நெடுநாள் நண்பரான ஸ்ரீ ஏ.வி. ராமன் அவர்கள். ஸ்ரீ ஏ.வி. ராமன் அவர்களுடைய இல்லத்தில் இந்த வேலைக்காக ஒரு காரியாலய அறையும் தயாராயிற்று. தினந்தோறும் மாலையில் மேற்படி காரியாலயத்துக்குச் சென்று ராஜாஜி மூன்று அல்லது நான்கு மணி நேரம் வேலை செய்து வந்தார். இது அவருடைய மனதுக்கு உகந்த வேலை. நல்ல பொழுதுபோக்கு; அதேசமயத்தில் தமிழுக்கு அருமையான திருப்பணி. அகராதி தயாரானதும் அதை வெளியிடுவதற்கு வேண்டிய பொருளைக் காரைக்குடி சா. கணேசன் தாமாகவே திரட்டிக் கொண்டு வந்து விட்டார்! ஆனாலும், என்ன பயன்? இந்த அகராதி வேலை ஆரம்பித்த வேளை, என்ன வேளையோ தெரியவில்லை! 'அ' எழுத்தில் ஒரு சிறு பகுதி முடிவதற்குள்ளேயே புதுடில்லியிலிருந்து மறுபடியும் பதவி துரத்திக் கொண்டு வந்துவிட்டது! "உடனே புறப்படுங்கள்!" என்று அவசரப்படுத்துகிறது. "உடல் நலம் சரியாயில்லையே!" என்ற காரணத்தைக்கூட ஒப்புக்கொள்வதாக இல்லை. "புதுடில்லிக்கு வாருங்கள்! எல்லாம் சரியாகி விடும்!" என்று ராஜாஜியை வற்புறுத்துகிறது பதவி! எப்படியிருக்கிறது கதை!



ராஜாஜி அவர்கள் இப்போதெல்லாம் தமக்கு எழுபது பிராயம் ஆகி விட்டதை அடிக்கடி தாமும் நினைவூட்டிக் கொண்டு மற்றவர்களுக்கும் சொல்கிறார்கள். அதற்குத் தகுந்தபடியே அவர்களுடைய உடல் நிலையும் இருக்கிறது. சில காலத்துக்கு முன்பு கண்ணில் ஏதோ உபத்திரவம் வந்தது. அது குணமாவதற்கு நெடுநாள் ஆயிற்று. கண் சரியாகும் சமயத்தில் அற்ப ஜலதோஷம் வந்து மார்ச்சளியாகிச் சுரமும் வந்து விட்டது. சுரம் முற்றிலும் குணமாவதற்குப் பல தினங்கள் பிடித்தன. பல தினங்கள் படுத்த படுக்கையாகவே இருக்க வேண்டி வந்தது. இப்போதுதான் சுரம் நின்றிருக்கிறது. இந்த நிலைமையில் மறுபடியும் அவர்கள் புதுடில்லி போக வேண்டியிருக்கிறது!

"திறமை ஒரு குற்றமா?" என்று நம் சகோதரப் பத்திரிகையில் ராஜாஜியைப் பற்றி எழுதியிருந்தது. "ஆம்; திறமை ஒரு குற்றந்தான்! அறிவும் ஆற்றலும் தீர்க்க தரிசனமும் குற்றங்கள்தான்!" என்று நாம் இப்போது ஒப்புக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அந்தக் குற்றங்களின் காரணமாகத்தானே ராஜாஜி மறுபடியும் இவ்வளவு சீக்கிரத்தில் நம்மைவிட்டுப் போக வேண்டியதாகிறது?

ராஜாஜி இப்போது புது டில்லிக்குப் போவது அவர்களுடைய நீடித்த தியாக வாழ்க்கையில் ஒரு பெருந் தியாகமேயாகும். அதை அவர்கள் செய்தே தீர வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. பண்டித ஜவாஹர்லால் நேரு சென்ற 22உ பத்திரிகை நிருபர்களிடம் ராஜாஜியைப் பற்றிக் கூறிய விஷயங்களை நேயர்கள் தினப் பத்திரிகைகளில் படித்திருப் பார்கள். எவ்வளவு அன்பும் ஆர்வமும் பக்தியும் சிரத்தையும் அந்த வார்த் தைகளில் ததும்புகின்றன! "நாங்கள் மிக வற்புறுத்தி வேண்டிக் கொண்டதன் பேரில் ராஜாஜி மந்திரி சபையில் சேர் வதற்கு இசைந்திருக்கிறார். அதற்காக நாங்கள் மிக்க நன்றியுள்ளவர் களாயிருக்கிறோம்!'' என்று ஜவா ஹர்லால்ஜி சொல்லியிருப்பது நம் மனத்தை உருக்குகிறது.

அதைக் காட்டிலும் நமக்கு மகிழ்ச்சி தரும் விஷயம் ஒன்றையும் ஜவா ஹர்லால்ஜி சொல்லியிருக்கிறார். "ராஜாஜிக்கு நாங்கள் அதிக வேலை கொடுக்கப் போவதில்லை. எந்த இலாகா நிர்வாகத்தையும் அவரிடம் ஒப்படைக்கப் போகிறதில்லை. பிரிட்டிஷ் மந்திரி சபையில் உள்ள 'லார்டு பிரஸிடெண்டு ஆப் தி கௌன்சில்' என்ற பதவியைப்போல் விசேஷ ஸ்தானத்தை அவருக்கு அளிக்க எண்ணியிருக்கிறோம். முக்கியமான எல்லா விஷயங்களைப் பற்றியும் அவருடைய யோசனைகளைக் கேட்டுக் கொள்வதுடன் திருப்தியடைவோம்'' என்று ஜவாஹர்லால்ஜி கூறியிருப்பதில் அவருடைய பெருந்தன்மை நன்கு வெளியாகிறது.

ராஜாஜி விசேஷ ஸ்தானம் வேண்டும் என்று விரும்புகிறவர் அல்ல; அதைப் பொருட்படுத்துகிறவரும் அல்ல; ஜவாஹரின் மேற்படி பேச்சைக் குறித்துப் பத்திரிகை நிருபர்கள் ராஜாஜியைக் கேட்டபோது இதைக் குறிப்பாக வெளியிட்டிருக்கிறார். "இந்தக் காலத்து மகான் ஒருவர் கூறிய உபதேசத்தை நான் என் வாழ்க்கையில் நெடுகிலும் கடைப்பிடித்து வந் திருக்கிறேன். 'இந்த வேலைதான் வேண்டும்; அந்த வேலைதான் வேண் டும் என்று பொருக்கிக் கொண்டும் தேடிக் கொண்டும் இருக்க வேண்டாம். எந்த வேலை உன்பால் வருகிறதோ, அதை எடுத்துக் கொண்டு செய்!' என்று அந்த மகான் போதித்தார். அது போலவே இப்போது என்பால் வருகிற வேலையையும் மறுக்காமல் ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்று ராஜாஜி கூறியிருக்கிறார்.

ராஜாஜிக்கு விசேஷ ஸ்தானத்தைப் பற்றியோ வேலையின் அந்தஸ்தைப் பற்றியோ கவலையில்லைதான். நமக்கும் அத்தகைய கவலை இல்லை. ஆனால் சக்திக்கு மீறிய அதிகமான வேலை அவர் தலையில் சுமரக் கூடாதே என்ற கவலை நமக்கு இருக்கிறது. அது ஜவாஹர்லால்ஜிக்கும் இருக்கிறது என்று அறிந்து மகிழ்கிறோம்.

நாளது மே மாதம் 27உ ராஜாஜி புதுடில்லிக்குப் புறப்படுகிறார். தமிழ் மக்களின் சார்பாக ராஜாஜி அவர் களுக்கு விடை கொடுத்து அனுப்பு கிறோம். கூட ஒரு விண்ணப்பமும் செய்து கொள்கிறோம். அந்த விண் ணப்பம் இதுதான்: - "பிரதம அமைச் சர் ஜவாஹர்லால்ஜியின் வார்த்தைக்குத் தயவு செய்து மதிப்புக் கொடுத்து நடந்து கொள்ளுங்கள். வருகிற வேலையையெல்லாம் ஏற்றுக்கொண்டு செய்கிறது என்ற கொள்கையைக் கொஞ்சம் தளர்த்தி விடுங்கள். யோசனை கேட்கிறவர்களுக்கு யோசனை சொல்வதுடன் தயவுசெய்து நிறுத்திக் கொள்ளுங்கள். தங்களுடைய உடல்நலம் எங்களுடைய பெருஞ் செல்வம்; தங்களுடைய அறிவுத் திறன் தமிழ்நாடும் பாரதமும் இழக்க முடியாத அரும்பெரும் ஐசுவரியம்; ஆகையால் தங்களுடைய உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கக் கூடிய அளவு எந்த வேலையையும் இழுத்துப் போட் டுக் கொள்ள வேண்டாம்!'' என்று பணிவுடன் கேட்டுக் கொள் கிறோம்.

(கல்கி, மே 28, 1950)


இண்டர்நெட்டில்

இசை விழா!













• காயத்ரி





இண்டர்நெட்டில், ஆடியோ பதிவுசெய்து ஹூக் பண்ணி, முப்பது கச்சேரிகளைக் கேட்கிற வாய்ப்பை www.cutchery.com வெப்-ஸைட் மூலம் உருவாக்கியிருக்கிறது ஓர் இளைஞர் பட்டாளம். வித்யா சங்கர் (பி.இ. மாணவர்), சங்கர் நாராயணன் (சுற்றுச் சூழல் இஞ்சினீயரிங்), நாராயணன் (பி.டெக்) மகேஷ் (மஹிந்த்ரா ஃபோர்டு), ஹரி (பி.இ. மாணவர்), காயத்ரி, ஹரிணி, தீபா (கம்ப்யூட்டர் சயன்ஸ்), அபிராமி ஸ்ரீராம் (இப்போது தில்லியில் எம்.ஏ. இலக்கியம்) எல்லோருமே ஒருமனதாக அதற்கான முயற்சிகளில் குதித்தார்கள்.

''டிசம்பர் சீசனில் வெளிநாட்டிலிருந்து பலர் சென்னைக்கு வந்தாலும், ஏராளமான இந்தியர்களும், அமெரிக்கர்களும் கச்சேரிகளைக் கேட்க முடியாமல் வருத்தப்படுகிறார்கள். இதன் மூலம் அந்தக் குறையை ஓரளவு நீக்க முடியும் என்று தோன்றவே, வெப்–ஸைட் வாங்கினோம்.''

இந்த வெப்ஸைட் பெயர் www.kutcheri.com!

லாபமும் வேண்டாம், நஷ்டமும் வேண்டாம் என்ற அடிப்படையில் 30 கச்சேரிகளுக்குக் கணக்குப் பார்த்தபோது, மொத்தம் 45,000 ரூபாய் ஆவது தெரிந்தது.

"நிறுவனங்கள் சில ஸ்பான்ஸர் செய்ய முன்வந்தன. தனிநபர் பலர் தாங்களாகவே ஸ்பான்ஸர் செய்ய முன்வந்தார்கள். ஒரு கச்சேரிக்கு 1500

ரூபாய் ஆகிறது. சிலர் முழுக் கச்சேரியும் வேண்டாம், இரண்டு – மூன்று கச்சேரிகளின் தொகுப்பு கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள்.

"முன்னதாகவே வெப்-ஸைட்டில் இந்தத் திட்டத்தை அறிவித்து விட்டதால், இந்தப் பாடகர் இந்தப் பாட்டைப் பாடவேண்டும் என்று 'நேயர் விருப்பம்' வர ஆரம்பித்து விட்டது!''

பாடகர்கள் சிலரின் சம்மதத்தைப் பெற்று விட்டார்கள். சென்னை நகர சபாக்கள் ஃபெடரேஷன் தலைவர் ஆர். கிருஷ்ணசாமி, சட்டரீதியாக எந்தப் பிரச்னையும் இல்லை என்று சொல்லி, முயற்சியையும் பாராட்டியிருக்கிறார்.

கச்சேரி முடிந்தவுடனே, டேப்பிலிருந்து ஃப்ளாப்பிக்கு மாற்றி விட்டு வெப்-ஸைட்டில் போடுவார்கள். அதிகபட்சம் 72 மணி நேரத்துக்கு அந்தக் கச்சேரியைக் கேட்கிற வாய்ப்பு இருக்கும். அப்புறம் அதை எடுத்து விட்டு வேறு கச்சேரியைப் போடுவார்கள். ஒரே சமயத்தில் இரண்டு கச்சேரிகள் வெப்-ஸைட்டில் இருக்கும். எது வேண்டுமோ அதை மட்டும் க்ளிக் பண்ணிக் கேட்கலாம்!

''நேரடியாக, கச்சேரி நடைபெறும் போதே கேட்கிற மாதிரி பண்ணினால் அது இன்னும் புதுமை அல்லவா? அப்படிச் செய்ய முடியாதா?''

''அது இப்போதைக்குச் சிரமமான காரியம். கம்ப்யூட்டர்களைக் கச்சேரிகள் நடக்கிற இடத்தில் வைத்திருக்க வேண்டும். சாஃப்ட்வேர் புரோகிராம் மாற்றங்கள் செய்ய வேண்டும். அதற்கான வசதிகள் நம்மிடம் இப்போது இல்லை. மேலும், இங்கே இரவுக் கச்சேரி நடக்கிற போது அங்கே விடிகாலையாக இருக்கும். கச்சேரி கேட்கிற சமயமாக இருக்காது. ஆனாலும் கூட அடுத்த வருடம், அதுவும் சாத்தியமா என்று முயன்று பார்க்கப் போகிறோம்.''

இந்த வெப்-ஸைட், கச்சேரிகள் சீசன் முடிந்த பிறகும் தொடரும்!

கர்னாடக சங்கீதத்துக்காகவே தொடங்கப்பட்ட carnaticmusic.com என்கிற வெப்ஸைட், www.chennaionline.com ஆகியன 'சீசன்' சிறப்புப் பக்கங்கள் அளித்து வருகின்றன. ஸ்ருதி இதழும் வெப்ஸைட்டில் அரங்கேறியிருக்கிறது.

— சாருகேசி

வண்ணப்படங்கள் : **ஸ்ரீஹரி**

மத்திய அமைச்சரின் மாமா ஏன் பேசவில்லை?

● மத்திய மின்சக்தித் துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்துக்கு, சமீபகாலமாய் ஒரு வருத்தம். அண்மையில் மே. வங்காளம் வந்திருந்தபோது, "இப்போதெல்லாம் என் 'மாமா' என்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை! என் மாமா யார் தெரியுமா? உங்கள் முதலமைச்சர் தான்!" என்றார். (ரங்கராஜன் குமாரமங்கலத்தின் தாய் வழியில் ஜோதி பாசுவும் இவரும் உறவு என்பதைத் தெரிந்து கொள்க).

● அண்மையில் ஸ்விஸ் நாட்டு ஜனாதிபதி இந்தியா வந்திருந்தபோது, ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் அளித்த விருந்தில் கலகலப்புடன் சிரித்துப் பேசி வளைய வந்தவர் யார் தெரியுமா? வாஜ்பாயோ, அத்வானியோ அல்ல. சோனியா காந்திதான்! (ஆடுகளம் தயார்; ஆட்டக்காரரும் ரெடி என்று உணர்ந்து கொள்க).



• ரங்கராஜன் குமாரமங்கலம்

(படம் : சௌந்தர்ராஜன்)



• சோனியா



• வாஜ்பாய்

● குளிர்காலக் கூட்டத் தொடரின் முதல் நாள், பிரதமர் வாஜ்பாயும், பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் மதன்லால் குரானாவும் பாராளுமன்றத்துக்குள் நுழைந்தபோது, ஏகப்பட்ட புகைப்படக்காரர்கள். "இங்கே பாருங்கள்! இப்படி நில்லுங்கள்; ஸ்மைல் ப்ளீஸ்!" என்றெல்லாம் பலவித கோரிக்கைகள். "எல்லோரும் ஒரே சமயத்தில் கேட்காமல் ஒவ்வொருத்தராய்க் கேளுங்கள். அதன்படி பிரதமரை நிற்கச் சொல்கிறேன்; போட்டோ எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் குரானா. (வாஜ்பாயை ஆட்டுவிப்பவர்கள் மமதா, லலிதா மட்டுமில்லை என்று புரிந்து கொள்க!)

● கேரளாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கூட்டணி, மாநிலத்திலுள்ள அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் ஓர் உத்தரவை அனுப்பியுள்ளது. பஞ்சாயத்துப் பணத்தைக் கொண்டு 'ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடின் படைப்புகள்' என்ற தொகுப்பு வெளியீட்டை உடனடியாய் வாங்க வேண்டும் என்பதே அந்த உத்தரவு. இதனை வெளியிட்டிருப்பது ஒரு தனியார் பதிப்பகம். எதிர்க்கட்சியான காங்கிரஸ் தரப்பிலிருந்து மட்டுமின்றி, ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள சி.பி.ஐ. தரப்பிலிருந்து கூட இதற்கு எதிர்ப்பு எழுந்துள்ளது. (அட! மார்க்சிஸ்ட்டுகள் கூடவா இப்படி என்று ஆச்சரியம் கொள்க!) ●

— மௌலஷ்மி

நிலா

ரிஷபன்

2

"பார்த்து... பார்த்து. மெதுவா... இடிச்சுரப் போவுது..."

டெம்போ வேனிலிருந்து இறக்கப்பட்ட பீரோவைச் சிரமத்துடன் தூக்கி வந்தனர்.

"எந்த ஃப்ளாட்?"

"சி ப்ளாக்ல... ரெண்டாவது மாடி."

"ப்ச். நல்ல கனம். இன்னும் ரெண்டு பேராவது இருந்தால் தேவலை."

தலைக்குத் தலை ஆலோசனைகள். உதவத்தான் முன்வரவில்லை.

ராஜப்பா எட்டிப் பார்த்தார். பீரோவைத் தூக்கிய நபர்கள் திணறியது புரிந்தது.

"நான் புடிச்சுக்கட்டுமா?"

"அப்பா..." மகனின் குரல் அதட்டியது.

"பேசாம உள்ளே வாங்கோ."

"வந்து... ஒரு ஹெல்ப்தானே."

"நீங்க விழுந்து வச்சா."

பாசத்தை விட குரலில், கடமையின் வெறுப்பு தெரிந்தது. ராஜப்பா பின் வாங்கினார்.

"என்ன?" சிவராமின் குரல் கேட்டது.

"பீரோ மேலே போகணும். ஆள் பத்தலே."

"ம்..."

அருகில் வந்து பிடித்துப் பார்த்தான்.

"நல்ல வெயிட்தான். ஒரு நிமிஷம்."

வெளியே போனவன் வேறு இரு ஆசாமிகளுடன் திரும்பினான்.

"பக்கத்துலதான் குடியிருக்காங்க. என் ஃப்ரெண்ட்ஸ்..."

கேட்காமலேயே சொன்னான்.

"இதோ.... இதுதான். ரெண்டாவது மாடிக்குப் போகணும்."

மேலும் நான்கு கைகள் உதவ, பீரோ மேலேறியது.

ராஜப்பாவின் முகத்தில் நிம்மதி தெரிந்தது.

அருகில் வந்து சிவராமின் முதுகில் தட்டிக் கொடுத்தார். கண்களில் லேசாய்க் கலங்கல்.

"அப்புறம். உங்க ஐடியா... வொர்க் அவுட் ஆகும்னு தோணுது" என்றான் அவரிடம்.

"எ...து?"

"ரீடிங் ரூம் ப்ளஸ் லைப்ரரி."

"நெஜம்மா?"

"இம்மீடியட்டா... எதுவும் ப்ராமிஸ் பண்ண முடியாது. ஒரு ஷெட் போடறோம். டெய்லீஸ் உண்டு. தமிழ், இங்கிலீஷ் அப்புறம் ரெண்டு ஷெல்ஃப்... புக் டோனர்ஸ் ஆர் வெல்கம். எக்ஸ்டிராவா இருக்கற புக்ஸைத் தரலாம். சிமெண்ட் பெஞ்ச் போடறோம்."

ஒருவர் குறுக்கிட்டார்.

"இது யாரோட காஸ்ட்ல?"

குரலில் லேசான எதிர்ப்பு. பராமரிப்புத் தொகை உயர்த்தப்படக்கூடும் என்ற பயம் தெரிந்தது.

சிவராம் சிரித்தான்.

"புரமோட்டரோட அன்பளிப்புன்னு வச்சுக்குங்க. ஷெட்.... புக்ஸ்... நம்ம கலெக்ஷன்."

யாரோ முனகியது கேட்டது.

"என்ன ஸார்?"

"லைப்ரரிக்கு இப்ப என்ன அவசரம். நடைபாதைல தடுக்கிற மாதிரி கம்பி நீட்டிக்கிட்டு இருக்கு நோபடி பாதர்ஸ்."

சிவராம் பரபரப்பானான்.

"எங்கே... எங்கே?"

சி ப்ளாக்கின் பின்புறம் காம்பவுண்டு சுவரை ஒட்டிய பகுதிக்கு இழுத்துப் போனார்.

"இதோ."

ராஜப்பாவும் வந்து கலந்து கொண்டார்.

"செப்டிக் டாங்க் லிட்... ஹேண்டில் இல்லேன்னா கஷ்டமாச்சே?" என்றார்.

"பார்க்காமல் வந்தால்... சிரமம்தான். ஸார் சொல்ற மாதிரி" என்றான் சிவராம்.

அழைத்து வந்தவரின் முகம் பளபளத்தது.

"ஏதாவது ஐடியா பண்ணலாம். அது வரை... ப்ளீஸ்... கொஞ்சம் ஜாக்கிரதையாப் போகணும்."

ராஜப்பா சிவராம் தனியாக வந்ததும்

பிடித்துக் கொண்டார்.

"என்ன நீ... சில்லியா பேசறான். நாம தானே பார்த்துப் போகணும். அதுவும் இல்லாமல் அந்த ஏரியாவுக்குப் போக வேண்டிய நெஸஸிட்டியே இல்லியே. ஒதுக்குப்புறம்னா அது..."

சிவராமின் குரல் தணிந்து ஒலித்தது.

"அனுசரிச்சுப் போகலாமே... ஸார்."

"ப்ச். குடி வந்திருக்கிறதே... பத்து, பனிரெண்டு ஃப்ளாட்லதான். டோடலா எல்லாரும் வந்து..."

சிவராம் அவர் பேச்சை பாதி கவனித்த நிலையில் பி பிளாக்கின் முதல் மாடிப் போர்ஷனையே வெறித்தான்.

திறக்காத ஜன்னல்கள். மூன்று நாட்களாய்க் கவனிக்கிறான். யார் தங்கி இருக்கிறார்கள் என்றே புலப்படவில்லை.

அவன் கவனம் வேறு திசையில் என்று புரிய ராஜப்பா பேச்சை நிறுத்தி அவனைப் பார்த்தார்.

"என்ன சிவராம்?"

"அதோ... அந்த ஃப்ளாட்... யாருன்னே தெரியலே. நைட்ல முழுக்க லைட் எரியுது. கதவு மூடியே இருக்கு."

"ஆள் இல்லையா?"

"இருக்காங்க."

பால்கனியில் உலர்த்தியிருந்த துணிகளைக் காட்டினான்.

மனதுக்குள் என்னவோ குறளி செய்தது. இனம் புரியாத கலவரம்.

"சிவராம்..." ராஜப்பாவின் குரல் அவனை இழுத்தது.

"நமக்கென்ன. அவங்க போர்ஷன்ல எப்படி வேணா இருக்கட்டுமே."

சரிதான். ஆனாலும் பதற்றம். நேற்று இரவு பத்து மணிக்கு அந்த ப்ளாட் வாசலில் தயங்கி, நின்றான். ஜன்னல் வழியே டியூப் லைட்டின் வெளிச்சம். உள்ளிருக்கும் நபர் புலப்படாத கண்ணாடி ஜன்னல்.

பேசமாட்டார்களா. ரேடியோ.... டீ.வி.

வட்டம்





இது காஸ்ட்லி போட்டோ!

சென்னை 'ஈசல் கேலரி'யின் உரிமையாளரான ஷர்மிளா மோகன் தாஸ், சில மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா சென்றிருந்தார். அங்கு மார்ஷல் கேப்பல் என்ற நியூயார்க்கைச் சேர்ந்த போட்டோகிராபரின் புகைப்படக் கண்காட்சியைக் கண்டார். பதினைந்தாவது வயதில் கேப்பல் எடுத்த போட்டோவுக்குப் பரிசு கிடைத்தது. பல பிரபலங்களைப் புகைப்படமெடுத்த அனுபவசாலி. ஃபேஷன் போட்டோகிராபியிலும் இவர் நிபுணர்.

''நீங்கள் எடுத்த போட்டோக்களைத் தாருங்கள் சென்னையில் ஒரு கண்காட்சி நடத்துகிறேன்'' என்று ஷர்மிளா கேட்க, கேப்பல் தம் புகைப்படங்களைக் கொடுக்க, சென்னை ஈசல் கேலரியில் கேப்பலின் புகைப்படங்கள் அரங்கேறின. இங்கே நீங்கள் பார்க்கும் போட்டோவின் விலை எவ்வளவு தெரியுமா? வாயைப் பிளக்காதீர்கள்! சுமார் பதினாறாயிரம் ரூபாய்! நம் ஊரில் வாங்க ஆள் உண்டா?

— சி.எம்.

கூடவா கேட்க மாட்டார்கள். இத்தனை அமைதியாய்.

கதவைத் தட்டி விடலாமா? கை உயர்ந்து தட்டவே போய் விட்டான். எங்கோ மணி அடித்தது. கடிகார மணி..

இரவு பத்து. இந்த நேரத்தில்... கதவைத் தட்டுவது அநாகரிகம். வேண்டாம்.

அதிகாலை மூன்று மணிக்குத் தற்செயலாய் விழிப்பு வர, எதிர் பிளாக்கைக் கவனித்தான். இப்போதும் அணையாத டியூப் லைட். என்னவோ சரியில்லை.

ராஜப்பா மீண்டும் அவனைத் தட்டினார்.

"சிவராம்."

இவரிடம் எதுவும் சொல்ல வேண்டாம். வீணாகக் கலவரப்படுத்துவானேன்.

''என்ன ஸார்?''

ராஜப்பா கேலியாகச் சிரித்தார்.

''புரிகிறது தம்பி... நானும் உன்னைப் போல இளைஞனாய் இருந்தவன் நான்."

என்ன சொல்கிறார்.

"இந்த வயசுல இது சகஜம்" என்றார் மேலும்.

"ஸார்... நான்..."

''லட்சணமாகத்தான் இருக்கிறான். முகத்தைப் பார்த்தால் மணமான மாதிரி தெரியவில்லை. ஜோடிப் பொருத்தம் இருக்கிறது."

அடுக்கிக் கொண்டே போனார்.

"என்ன சொல்றீங்க?"

'சி' பிளாக்கின் மேல் மாடியைக் கைகாட்டினார். ஸ்வேதா.

"சீக்கரமேவ விவாஹ ப்ராப்தி ரஸ்து."

பதிலேதும் சொல்லாமல் போய் விட்டான்.

இத்தனை வருஷ இளமைக் காலத்தில் முதன் முறையாய்த் தந்தி அதிர்ந்தது. என்ன உணர்வு இது. என்னைப் பித்தனாக்கி விட்டதே. கண்டதும் காதல் என்பது இதுதானா.

வெளியில் வந்து நின்றபடியே சுற்றிலும் பார்த்தான். பி, ஏ பிளாக்குகள்... சுற்றி காம்பவுண்டு... ஆண்டெனா கொம்புகள் முளைத்த மொட்டை மாடி.

பார்வையில் சட்டென்று அந்த நிமிஷம் அந்தக் காட்சி தட்டுப்பட்டது.

ஏ பிளாக்கின் மொட்டை மாடியில் நின்றிருந்த நபர். விசித்திரமான உருவம். நாலடிக்குள் உயரம். அல்லது அதையும் விட குறைவு. முன் தலை வழுக்கை. வினோதமாய் பெரிய தாடி. ஒழுங்கற்ற நிறம் மங்கிய முடி. கழுத்தில் மின்னிய மாலை ஸ்படிகமா...

நின்ற நிலையில் கை உயர்த்தி சூரியனை நோக்கி எதையோ வீசினான் அந்த நபர். சிவப்புக் கலரில் ஏதோ மொட்டை மாடி



"'மறப்போம், மன்னிப்போம்' – தான் தலைவரோட பாலிசி!"
"அடடே! அவ்வளவு உயர்ந்த குணமா?"
"ம்.... கொடுத்த வாக்குறுதிகளை மறந்துடுவார்; கட்சிக்காரங்க செய்யற தவறுகளை மன்னிச்சிடுவார்!"
– சீர்காழி ரேவதி

முழுக்கச் சிதறியது. தன்னைத் தானே ஒரு முறை சுற்றிக் கொண்டு கீழிறங்கிப் போய் விட்டான்.

சிவராமுக்கு இன்னமும் அதிர்ச்சி விட்ட பாடில்லை. கீழே சிதறிக் கிடந்தது. ரத்த நிறத்தில் சோற்றுப் பருக்கைகள். ஏ பிளாக்கின் மொட்டை மாடியில்.

யார் அந்த மனிதன்? இது என்ன வினோதப் பழக்கம்?

'டாடா' வேலையை ரிஸைன் செய்து விட்டான். அப்பா சொற்படியே.

வேதாசலத்தின் முகத்தில் இப்போதுதான் நிம்மதி பரவியது.

"இனிமேல் நீதான்... நான் ஜஸ்ட் கைடன்ஸுக்கு மட்டும்தான்..." என்று பத்துத் தடவை சொல்லிவிட்டார்.

மேலும் இரண்டும் இடங்களை வாங்கி வைத்திருந்தார். முனிசிபல் அப்ருவல் வாங்கப்பட்டிருந்தது. குடியிருந்தவர்களில் பெரும்பாலோர் காலி செய்து விட்டனர். ஓரிரண்டு நபர்களைத் தவிர.

"இந்த மாசம் வேற எடம் கிடைச்சு போகிறதாச் சொல்லியிருக்காங்க. முழுக்க காலி பண்ணிட்டா... இடிச்சுட்டு.. வேலையை ஆரம்பிச்சுரலாம். புக்கிங் பண்ண ஆரம்பிச்சாச்சு..." என்றார் வேதாசலம்.

"நான் போய்ப் பார்க்கவா?"

வேதாசலம் சிரித்தார்.

"அதற்குத்தான் சொல்றேன். ஒரு ஆளு மட்டும் கொஞ்சம் ரப்சர் பண்றதாத் தகவல். பணம் ஏதாவது கூட எதிர் பார்க்கிறானோ என்னவோ... ஸெட்டில் ஹிம்" என்றார்.

"நான் பார்த்துக்கிறேன்பா!"

வேதாசலத்துக்கு மகனின் குணம் தெரியும்.

ஏனோதானோவென்று ஈடுபட மாட்டான். இறங்கிவிட்டால் முழு சிரத்தைதான்.

கதவு மூடியிருந்தது. தட்டினான். பதில் இல்லை. நிச்சயம் உட்புறம்தான் தாளிடப்பட்டு இருக்கிறது.

சிவராம் சுற்று முற்றும் பார்த்தான்.

அடுத்த வருட இறுதியில் இந்த இடத்திலும் ஒரு புது அபார்ட்மெண்ட். பெயர் கூட ரெடி. 'கோகுல் அபார்ட்மெண்ட்ஸ்'. புதுப் பொலிவோடு மாறப் போகிறது.

இந்த ஒரே ஒரு நபர் மட்டுந்தான் இடைஞ்சல். ஏற்கெனவே பேசி முடிவு செய்தது. ஒப்புக் கொண்டபடி காலி செய்யாமல் வீண் வம்பு செய்கிறான்.

கதவை மீண்டும் தட்டினான். பதில் இல்லை. ஜன்னல் கதவு மூடியிருந்தது. பழைய கதவு. அழுத்தம் கொடுத்ததும் கிரீச்சிட்டு திறந்து கொண்டது. எட்டிப் பார்த்ததில் உட்புறம் புலனானது.

மங்கலான வெளிச்சம். கரண்ட் லைட் இல்லை. சிம்னியோ... பார்வை பழகியதும் தட்டுப்பட்ட காட்சி அவனை அதிர வைத்தது.

கோரைப் பாயின் மீது யாரோ. படுத்திருந்தார். ஒழுங்கற்ற கோணம். கை கால்களை வினோதமாய்ப் பரத்தி தலை நெட்டுக் குத்தாய் நிற்க.

சிவராம் வாசற் கதவை வேகமாய் முட்டினான். திறந்து கொண்டு விட்டது. அவசரமாய் உள்ளே ஓடினான்.

ராஜப்பா 'ஊம்' கொட்டினார்.

"அப்புறம்?"

சிவராம்தான் எதிரில். நேற்று நடந்ததை விவரமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"வேறென்ன.. இதான்!"

கட்டைவிரலை உயர்த்தி கண்கள் சொருகிக் காட்டினான்.

"அப்படியே ஃப்ளாட்... உலுக்கி எழுப்ப முடியலை. நேராப் படுக்க வச்சுட்டு வந்தேன்! இன்னிக்குக் காலையில போனப்ப போதை தெளிஞ்சிருந்தான். பேரு வேலுவாம்.



வட்சாதிபதிகளின் கிறுக்கல்கள்!

இதோ இந்தப் படத்திலிருக்கும் கிறுக்கல்களை அல்லது சித்திரங்களை வரைந்திருப்பவர்கள் எதிர்கால லட்சாதிபதிகள்! ஆனால், இன்றைக்கு பெங்களூரில் அனாதை இல்லத்தில் இருப்பவர்கள்! இது என்ன புதிர் என்கிறீர்களா? விவரம் இதுதான்...

'பி(ட்)ஸா (இதாலிய உணவு ஐட்டம்) கார்னர்' நிறுவனம், சில மாதங்களுக்கு முன் பெங்களூரில் தன் முதல் கிளையைத் துவக்கியது-அதன் துவக்க விழாவன்று, பெங்களூரைச் சேர்ந்த இருபது அனாதைக் குழந்தைகள், பி(ட்)ஸா கார்னர் வளாகச் சுவரில் தம் இஷ்டம் போல சித்திரங்களாய் வரைந்து தள்ளினார்கள். அதே தினத்தில், அவர்களுக்குப் பதினெட்டு வயதாகிறபோது, ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும்படி, அவர்கள் ஒவ்வொருவர் பெயரிலும் குறிப்பிட்ட தொகை வைப்பு நிதியாகப் போடப்பட்டுள்ளது. ஆக, நாளைய லட்சாதிபதிகள் நேற்றுத் தீட்டிய சித்திரங்களைத்தான் நீங்கள் இன்று பார்க்கிறீர்கள்! இவ்வாண்டு, பி(ட்)ஸா கார்னரின் புத்தாண்டு வாழ்த்திலும் இதுவே இடம் பெற்றுள்ளது!

- மௌலி

பனிரெண்டு வருஷமாக் குடியிருக்கானாம். திடீர்னு காலி பண்ணச் சொன்னால் எப்படின்னு கூச்சல்..."

சுவாரசியமாய் கதை கேட்டுக் கொண்டிருந்தார் ராஜப்பா. அதென்னவோ சிவராம் அருகில் இருந்தால் அலாதியான மன அமைதி அவருக்கு. இதனால் தினசரி ஒரு தடவையாவது பார்த்துப் பேச வந்து விடுகிறார்.

"வேற எடம் பார்த்துத் தாங்க. இதைக் காலி பண்றேன்னு கத்தினான். ஒரு வேலையும் இல்லே. கணக்கு எழுதிப் பழக்கம் இருக்காம். குடி பிரச்னையில யாரும் வேலைக்கு வச்சுக்கத் தயார் இல்லே..."

சிவராம் குரலில் நிதானம் வந்தது.

"இன்னமும் அப்பாகிட்டே சொல்லலே. நானா பிராமிஸ் பண்ணிட்டேன். வேலுவை எங்க கணக்கு எழுத வரச் சொன்னேன். என்னோட ஃப்ளாட்ல நான் இப்ப தனி ஆளு தானே. என்னோட இரு. ஆனா ஒரு கண்டிஷன். இனிமேல் இந்தக் குடி... கிடி எதுவும் கூடாதுன்னு 'வார்ன்' பண்ணியிருக்கேன்."

ராஜப்பாவுக்கு ஆட்சேபிக்கத் தோன்றியது.

சிவராம் முகத்தில் தெரிந்த தன்னம்பிக்கை அவரைத் தடுத்தது.

"பார்க்கலாம். ஒத்து வரலேன்னா, போடான்னு சொல்லிரலாம். ஒன்னு அழுதான். ஒரு சான்ஸ் தரலாமேன்னு..."

"அவனுக்குக் குடும்பம் எதுவும்..."

"தெரியலே. விசாரிக்கலே. பார்த்தால் தனி ஆளு மாதிரிதான் தெரியறான்."

"ம். அப்ப நீ அந்த ஃப்ளாட் வேலைல பிஸியாயிருவே. உன்னைப் பார்க்கிறது இனிமேல் கஷ்டம்." ராஜப்பா பெருமூச்சு விட்டார்.

சிவராம் சிரிப்புடன் அவரைப் பார்த்தான்.

"என்னால உங்களைப் பார்க்காமல் இருக்க முடியாது ஸார்..."

கைகளைப் பற்றி அழுத்தினான்.

ராஜப்பா நெகிழ்ந்தார். கூடவே மனதை உறுத்திய கேள்வியும்.

"ஒன்னு கேட்கலாமா உன்கிட்டே."

"என்னது?"

"நீ ஏன் தனியா இங்கே தங்கியிருக்கே, உங்கப்பா, அம்மா கூட இல்லாமல்?"

சிவராம் முகம் சட்டென்று இருண்டு போனது.

(தொடரும்)

வையவன்

ராட்டினம்

இப்போது தேவலாபுரத்துக் கனவுத் தேவதையான (1994) கலாவைக் கட்டியணைக்கலாம். முத்தமிடலாம், ஆட்சேபிக்க மாட்டாள். ஏன்? பெருமையே படுவாள் போலிருந்தது.

தண்ணீர் லாரியை அந்த பத்தடுக்குக் கட்டடத்தின் எதிர்ச்சாரியில் நிறுத்தி எஞ்சின் அணைத்து எட்டாவது ஃப்ளோரில் குடியிருக்கும் மெட்ரோ வாட்டர் மானேஜரைப் பார்க்க லிஃப்டில் ஏறியபோதுதான் கலா சிரித்தாள். ஆரம்பத்தில் அறிமுகச் சிரிப்புதான்.

"எங்கே வந்தே?" என்று தொடங்கும் போதே அவன் மனசில் ராட்டினம் ஒன்று சுழன்றது.

அவன் வீட்டுக் கிணற்று ராட்டினம்.

"நைன்த் ஃப்ளோரிலே எஞ்சினியரைப் பார்க்கணும்" என்றான்.

மூன்றே நிமிஷத்தில் ப்ளஸ் டூ படித்த, ஊரில் கிரிக்கெட் வீரனாக விளங்கிய உமாபதி குடிநீர் லாரி ஓட்டுவதும், அவள் ஒரு அபார்ட்மெண்ட்ஸ் கட்டடக் காவல் வேலையில் இருப்பதுமான பொருளாதார சோகம் பரிமாறப்பட்டு செகண்ட் ஃப்ளோர் வரை பயணம் செய்த ஒரு ஜீன்ஸ் – ஸ்பெக்ஸ் இளைஞனுடைய சின்ன ட்ரான்ஸிஸ்டரின் சின்ன வால்யூமில் கேட்ட பாட்டான 'என்னடா பொல்லாத வாழ்கை இதுக்குப் போயி அலட்டிக்கலாமா'வில் தொலைந்து போயிற்று.

"திருந்திட்டே போலிருக்கு?"

அவர்கள் இருவரையும் ஒற்றையில் விட்டு பயணிகள் எல்லோரும் செகண்ட் ஃப்ளோரில் இறங்கிய பின் கலா கேட்டாள்.

அவன் கவர்ச்சி இன்னும் காலாவதியாகவில்லை. உதட்டிலும் கண்களிலும் சிரிப்பிலும் ததும்பி வழிந்தது. துளைத்தது.

"ஏன் இப்படிக் கேக்கிறே?"

"சாராய லாரி ஓட்றேன்னு கேள்விப்பட்டேனே!"

உமாபதி கூசிக்குறுகவில்லை.

"பழைய கதை!"

"அதான் கேட்டேன்."

"ப்பூ– இத வச்சா?"

"ஏன் இது ஒரு கவுண்ட் இல்லியா?"

"பரவால்லே. கவுண்ட் கிவுண்ட்னு ஸ்டைலா பேசறே!"

"அதான் டீவியிலே தெனம் சேனல் சேனலா கவுண்ட் டவுன் கவுண்ட் டவுன்னு அறுக்கறாங்களே!"

"டீவி இருக்கா வூட்டிலே?"

"இது நக்கல்தானே!"

"ஏன்?"

"ஒரு போர்ட்டபிள் டீவியை இன்சால்மெண்ட்ல கூடவா வாங்க முடியாத பூடும்?"

"கலா நீ மாறவே இல்லே."

"நீ?"

"அதான் சொன்னியே."

"கண்ணு மட்டும் செவந்திருக்கு."

"ராத்திரி ஷார்ஜாலே ஒண்டே மேச். பாத்தேன்."

"நானும் பார்த்தேன். ஜெயிச்சுட்டுப் போறப்ப அகர்கர் மூஞ்சியிலே ஒரு வெக்கம். ஒரு பெருமை. நான் ஒன்னை நெனச்சுக்கிட்டேன்."

"இது கதை!"

கலா கோபமாய் அவனைப் பார்த்தாள்.

உமாபதி சினந்து போனான்.

அந்த ராட்டினம்?

உமாபதி மரங்கள் சூழ்ந்த தேவலாபுரம் மேல் நிலைப்பள்ளியின் விசாலமான கிரிக்கெட் மைதானத்தில் மனசிற்குள் இடம் பெயர்ந்து கலைமான் கலைமான் என்று ஒரு குமுறல் போட்டான்.

உடனே ஒரு ஒளியும் ஒலியும் மின் வீச்சு!



"டேய் உமாபதி இந்த ஹராத்து பொம்பளை ஜாதி கிட்டே மாட்னோம். சாலா... குருமா வச்சுடுவாளுங்க உஷார்!"

"இத சாலமோன் கிட்டே சொல்றா. அவந்தான் அந்தக் கலா பொண்ணுகிட்டே வழிஞ்சுக்கிட்டு நிக்கறான்."

"டேய் உமாபதி என்ன வலிக்கலேன்னா ஒனக்கு டைம் பாஸ் ஆவாதே! கர்த்தர் ஆணையாச் சொல்றேன் அவ ட்ரிக்னாமெட்ரி நோட்டு கேட்டா. நான் பிசிக்ஸ் பிராக்டிக்கல் நோட் குடு தர்றேன்னேன்!"

''ஆணை வைக்காதேடா'' கலைமான் கர்ஜித்தான்.

''இல்லே'' சாலமோன் நடுங்கினான்.

''மக்களே... கேட்டுக்கங்க. இப்ப நான் சொல்றது வார்த்தை!"

கலைமான் ஒரு பீடிகை விட்டுப் பிரகடனம் ஒன்று தொடங்கினான்.

''நம்மன்னே எவனாச்சியும் சூரிய கலா, சந்திரகலா ஆகிய எந்தக் கலாவையும் ஏறெடுத்துப் பார்த்து டொய்யாங் விடக் கூடாது. இளிக்கக் கூடாது. ஷொட்டாவக் கூடாது!"

"சரி தலைவா!"

''அடே ஞானியாகிய சாலமோன்!'' என்று ஷாஹென்ஷா மாதிரி கலைமான் அவனை விளித்தான்.

"தலைவா!"

"நம்ம ஸ்கூல்ல மட்டும் இல்லே. பஜார்லே பேட்டைல நம்ப பஞ்சாயத்து முழுசும் வுடறானுங்க. நாம்ப யார்?"

உமாபதியும் சாலமோனும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள்.

விடையை கலைமான்தான் அருளிச் செய்ய வேண்டும். முகங்களைத் திருப்பினார்கள்.

"நாம்ப ஸ்கூல்டா. இந்த ஒடம்பை மண் சாப்டட்டும். பொன் சாப்டக் கூடாது. இப்ப மட்டுமில்லே. எப்பக்கியும். கபர்ஸ்தான் போற வரிக்கும்."

ஒரு நெடிய மௌனம்.

ஏதேனும் சந்தேகம் உண்டா என்ற சந்தேகத்தோடு கலைமான் மீண்டும் கேட்டான்.

"நாம்ப யாரு?"

"ஸ்கூல்."

"ஹோஷியா'' கலைமான் மடக்கிக் கை உயர்த்தினான்.



வந்தே மாதரம் சொல்வது போல் உமாபதியும் சாலமோனும் வானோக்கிக் கை உயர்த்தினர்.

"ஹோஷியார்."

பாவம் கலைமான்! மலையாள மாந்திரீகம் கற்க மலபாருக்குப் போய் விட்டான் (அல்லது அந்தப் போர்வையில் வேறு வீர பராக்கிரம விவகாரங்களிலும் சிக்கியிருக்கலாம். அவன் அவ்வளவு 'ஜல்தி' அணைகிற அக்னியல்ல.

சாலமோன் வாலாஜாபேட்டையில் தச்சுப் பட்டறை வைத்திருக்கிறானாம்.

நான்காவது ஃப்ளோரில் லிஃப்ட் கதவு திறந்தபோது, பாதி லிஃப்ட்டை அடைக்கிற மாதிரி ஒரு நடு வயது குஜராத்திப் பெண்மணி ஏறினாள்.

முகத்துச் சதை அவள் கண்களை மிகவும் இடுக்கியிருந்தது. அவள் இருவரையும் ஒரு நோட்டம் விட்ட போது அவனுக்கு இடமளிப்பதற்காக கலா தன்னருகே நெருங்கி வந்தது தற்செயலா, வேண்டுமென்றா?

உமாபதி அதை வேண்டுமென்றே என நினைக்க விரும்பினான்.

கலைமான் முன்பு செய்த அந்த ஸ்டூல் சபதத்திற்குப் பிறகு தேவலாபுரத்தில் எவள் ஒருத்தியும் அவனைக் குருமா வைக்க ஒரு மில்லி மீட்டர் கூட உமாபதி அனுமதித்ததில்லை.

"அகர்கர் ஒன்னை மாதிரி இருந்தான்!" கலா விட்ட இடத்தில் தொடர்ந்தாள்.

குஜராத்திப் பெண்மணி ஐந்தாவது ஃப்ளோருக்கான பட்டனை அழுத்தி விட்டு தெரிந்த சிறு கண்களையும் சிவோஹம் என்று மூடிக் கொண்டாள்.

கலாவிடமிருந்து வாசனையாக வந்தது. கலா வாசனை. 1994ல் தேவலாபுரம் பேரூராட்சியில் இந்தச் சிரிப்புக்கு இந்தப் பார்வைக்கு இந்த வாசனைக்கு எத்தனை பிரஜைகள் 'டிங்கி டிமாய்ந்து' அந்தர் பல்டி அடித்திருப்பார்கள்!

"எப்படி இருந்திஙே?"

குஜராத்திப் பெண்மணியைப் பற்றிக் கவலைப்படாமல் கலா கேட்டாள்.

'கலா... கலா... உன் வீட்டுக் கிணற்றிலே மாட்டியிருந்த ராட்டினம் ஏன் காணாமல் போயிற்று, யார் எடுத்திருப்பார்கள் என்று நீ கவலைப்பட்டதே இல்லையா?' மனசுள் கேட்டவாறு மெலிசாகச் சிரித்தான்.

கண்மூடி நிற்கும் குஜராத்திப் பெண் ஐந்தாவது ஃப்ளோரில் இறங்கும் வரை கலா வாசனையில் கரைவதே போதும் என்று வாய் மூடி நின்றான்.

அது அவளுக்கும் புரிந்தது.

அவளும் மௌனமானாள்.

உமாபதி மனசில் மீண்டும் தேவலாபுரம் வந்தது. எந்த ஒருத்தியும் ஒரு மி.மீ கூட உமாபதியைக் குருமா வைத்துவிட கலைமானோ சாலமோனோ அனுமதிக்காத தேவலாபுரம்.

அந்தப் பேரூராட்சியில் இருந்து சுற்றிப் பதினெட்டுப் பட்டிகளில் எந்த கிரிக்கெட் டீமும் விரலசைக்க முடியாத அணி கொண்ட தேவலாபுரம்.

பெருமாள் கோயில் தொட்டு ஓடிய சாலையில் ஒரு சைக்கிள். கேரியரில் கிரிக்கெட் பேட் வைத்த பழைய ஹீரோ சைக்கிள்.

துரிஞ்சிப்புதர் சூழ்ந்த ஒரு வீட்டுப் புழக்கடை ஓரம் வரும்போது அந்த சைக்கிள் பிரேக்கின் கிரீச்சொலி எழுந்தது.

கிணற்றின் கைப்பிடிச் சுவர் மீது நின்று தையல் மிஷினுக்கு எண்ணெய் விடும் கேனிலிருந்து கலா ராட்டினத்திற்கு எண்ணெய் விட்டு விட்டு அதை உருட்டிக் கொண்டிருந்தாள்.

நீலப் பாவாடை. வெள்ளிக் கொலுசு. தங்க வளையல். ஜிமிக்கி. மூக்குத்தி. கருத்தை அழிப்பது போல் தகதகக்கும் அஸ்தமனச் செங்கதிர்கள்.

ராட்டினத்தை அவள் விரல்கள் டிகிரி டிகிரியாக நகர்த்தி தொட்டுத் தொட்டு உருட்டி எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்

தன.

"டீ கலா! கெணத்து மேல ஏறி நின்னுக் குனுதான் ராட்டனத்துக்கு எண்ணெய் வுடணுமா... உள்ளே வுழுந்து கெழுந்து தொலைக்கப் போறடீ" என்று வீட்டினுள் இருந்து ஒரு கத்தல்.

"சும்மா வாய மூடிக்கிட்டு கெடம்மா. கத்தத்தொட நடுங்கி'" என்று அவள் மேலும் உருட்டினாள்.

சாலையில் 'பேட்' வைத்த சைக்கிளுக்குப் பின்னால் வந்து ஒரு சைக்கிள் நின்றது. பேட் இல்லாத ஹெர்குலஸ்.

"ஏண்டா உமாபதி வண்டி நிக்கிது?"

"ஃப்ரீவில் உடுதுடா."

"சரி... நான் என் வண்டியை மெறிக்கறேன். நீ என் கேரியரைப் புடிச்சுக்கோ. ரெண்டு எட்டு மெறிச்சா அப்புறம் டௌனுதான்."

சைலைமாமன் முன்னிலையில் ஸ்கூல் சபதம் ஏற்ற உமாபதியை அன்று இரவு ஓர் உருளும் ராட்டினம் படாதபாடு படுத்தி விட்டது.

அவள் தொட்ட ராட்டினம். அவளது ஒவ்வொரு விரலும் பட்டு உருண்ட பவித்திரமான ராட்டினம். குருமா கொதிக்க ஆரம்பித்து விட்டதா?

நெடுநேரம் அந்த ராட்டினம் அவனைச் சுழற்றி சுழற்றி தூக்கம் வராமல் உபத்திரவம் செய்தது.

வெள்ளி முளைக்கு முன்பே மாடு வைத்திருப்போர் வீடுகளுக்குப் பால் வசூல் செய்ய வரும் பால் டிப்போக்காரர் சைக்கிள் மணி கிணுகிணுத்தது.

உமாபதிக்குள் ஓர் உறுதியான தீர்மானம் உதித்தது.

பிரபஞ்ச வெளியில் இனி அந்த ராட்டினம் சுழலக் கூடாது!

போர்வையை மடித்து வைத்து விட்டு வெளியே போய் சைக்கிள் எடுக்கக் கதவைத் திறந்தான்.

"எங்கடா போறே இந்நேரத்துக்கு?"

"வயத்தக் கலக்குது. ஆத்துக்கா போய்ட்டு வர்றேன்."

மறுநாள் காலை பள்ளிக்கு வரும்போது சிநேகிதியோடு பேசி வரும் கலாவை உமாபதி சைக்கிளில் கடக்க வேண்டி இருந்தது.

"உன்ரு ரொம்ப கெட்டுப் போச்சுடீ காந்தா... நேத்து ராத்திரி எங்க கிணத்து ராட்டினத்தை எவனோ திருடிட்டுப் போயிட்டான்!"

உமாபதி அது காதிலேயே விழாதபடி, "காத்து ரட்சிக்கணும் கன்னிமார்களை கன்னி மூலை கணபதியே!" என்ற ஐயப்பன் பாட்டை தியானம் செய்தவாறு கடந்தான்.

ஐந்தாவது ஃப்ளோரில் குஜராத்திப் பெண்மணி இறங்கி திறந்த கதவு மூடி, அப்பழுக்கற்ற தனிமை மீண்டது.

கலா நகர்ந்திருக்கலாம். இருக்க வேண்

அந்தரங்கம் காப்பாற்றப்படும்!



பிறந்த நாளுக்கு மட்டுமல்ல; காதலை, நட்பை,ஏன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வது வரை எல்லாவற்றுக்குமே பொருத்தமான வாசகங்கள் அடங்கிய வாழ்த்து அட்டைகள் விற்பனையாகின்றன என்பது பழைய செய்தி! யாரோ எழுதி அச்சடிக்கப்பட்ட வாசகங்களிலிருந்து தேர்ந்தெடுத்துத்தான் நாம் அனுப்ப வேண்டுமா?

சம்பந்தப்பட்ட நபருக்கே நபருக்கென்று நாமே உருவாக்கிய வாசகத்தை அச்சிட்டு அனுப்ப முடியாதா என்று கேட்பவர்களுக்கும் இப்போது விடை வந்து விட்டது. வாழ்த்து அட்டைகள் விற்கப்படும் கடைக்குச் சென்று உங்கள் வாசகத்துக்குப் பொருத்தமான வாழ்த்து அட்டையைத் தேர்ந்தெடுத்துக் கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்ட பிரிண்டரில் பொருத்தி, உங்கள் வாசகத்தை கம்ப்யூட்டரில் கம்போஸ் செய்தால் போதும்; அந்த வாசகம் அச்சாகி வந்து விடும். இதை நீங்களே செய்யலாம். இப்படிப்பட்ட கடைகள் இப்போது சென்னையில் வந்து விட்டன! இதற்கென்று தனி கட்டணம் ஏதும் இல்லை.

— மானஸா

டும். ஆனால் நகரவில்லை.

"இப்ப சொல்லு!" என்றாள்.

எப்படித் திருந்தினாய் என்ற கேள்விக்குப் பதில் இவனுக்கு எதற்கு?

''கல்யாணமாயி செட்டிலாயிட்டே போல?''

அவள் இமை நிமித்தி ஒரு பார்வை விட்டாள். என்ன தயங்குகிறாயா... இல்லை பயப்படுகிறாயா என்று இரண்டு கொக்கிகள் விழுந்த மாதிரி அவன் நினைத்தான்.

''கல்யாணமாச்சு. செட்டில் தானே ஆவலே.''

"என்ன சொல்றே?''

''ஆமா. புண்ணாக்கு! ரொம்ப நாள் கழிச்சுப் பாக்கறோம். ஆறின புண்ணைக் கௌறிக்கணுமா இப்ப.''

"என்ன கலா?''

"அந்தக் கதயை வுடுன்றேன்.''

"சரி.''

அவள் ஒரு நிமிஷம் அவனையே ஒரு தையல் மிஷின் ஊசி சல்லடை செய்வது போல் பார்த்தாள்.

இன்னும் நான்கு ஃப்ளோர்கள் லிஃப்ட் பயணம் பாக்கி.

"ஆமா. நீ ஏன் எங்க கெணத்து ராட்டினத்தை எடுத்தே?''

உமாபதி உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"கழட்டி வித்துட்டியா?"

"ஒனக்கு எப்படித் தெரியும்?''

"எது?''

"ராட்டினத்தை நான் கழட்னது!''

"பொழுது விடிஞ்கடுச்சான்னு பாக்க பொழக்கடை ரூம் ஜன்னலைத் தொறந்துனு இருந்தேன்.... பாத்தா கெணத்து மேடை மேலே நீ- விஸ்வாமித்ர மகரிஷி!''

சாராய லாரி ஓட்டி சில நடுநிசிகளில் சில குடிசைப் பாய்களில் இருட்டுக் குமட்டலில் நீந்திக் கரை சேர்ந்தவன்தான் உமாபதி.

எனினும் தலைகவிழ்ந்தான்.

"எதுக்குப்பா ராட்டினத்தை எடுத்தே?''

"இன்னும் அத பத்திரமா வச்சிருக்கேன்!''

"என்னது?''

"ஆமா கலா.''

"எப்படி எப்படி... ஏன்? ஏன்?''

சொல்வதா விட்டு விடுவதா?

"ஆண் மனசு என்ற கடற்கரையில் இது வரை எந்த அலையும் தொடாத பெரிய அலை வந்து சென்ற சுவடு அது. காரணம் சொல்வது விகல்பம்.''

"சொல்லமாட்டே?'' என்று கலா சுவாதீனமாக அவன் தோள் மீது கைவைத்துக் கேட்டாள்.

அவள் உதடுகள் இரண்டங்குல தூரத்தில் இருந்தன. இடை இரண்டு அங்குல இடைவெளியில்.

இது இங்கே இப்படி இவ்வளவு அகாலமாக உதித்திருக்க வேண்டாம். அதை உமாபதி அவளுக்குத் தெரிவிக்க முயன்றான்.

ஏழாவது ஃப்ளோரில் லிஃப்ட் நின்று கதவு திறந்து மூடி மேலே உயர்ந்தது. யாரும் ஏறவில்லை.

"ராட்டினத்தை நான்தான் எடுத்தேன்னு பார்த்தும் நீ ஏன் யாரு கிட்டயும் சொல்லலே?''

"ப்ச்... ராட்டினந்தானா தொலைஞ்சுது. இன்னம் என்னென்னவோ தொலைஞ்சுது. அத வுடு... நீ ஏன் ராட்டினத்தை எடுத்தே. ஏன் இன்னும் பத்திரமா வச்சிருக்கே?''

கலா அவன் தோள்மேலிருந்த கையை எடுக்கவில்லை. அது அவசிய மற்றது என்று கருதினாளா?

ஆனால் உமாபதிக்கு உடல் கூசிற்று.

மனசுக்குள் கலைமான் "ஹோஷியார்" என்று வானோக்கிக் கை உயர்த்திக் கத்தினான்.

கலைமான் கலைமான் நீ ஏன் நான்



நுழைந்த குடிசைகளுக்குள் "ஹோஷியார்" சொல்லவில்லை? இப்போது சொல்லி என்ன லாபம்?

உமாபதி தன் தோள் மேல் கலாவின் கையைத் தலை திருப்பிப் பார்த்தான்.

அவன் பார்த்ததை அவளும் பார்த்தாள். ஆனால் கையெடுக்கவில்லை.

"இதுக்குத்தான்" என்றான் கண்களால் அவள் கையைக் காட்டியபடி.

"என்னப்பா சொல்றே?"

"ஆமாம்... அன்னிக்கு சாய்ங்காலம் நாங்கல்தான் பேட்டைல மேட்ச் முடிஞ்சு திரும்பி வர்றோம். நீ ராட்டினத்துக்கு ஆயில் கேன்ல எண்ணெய் போடறே."

"ச்சச்சச்" என்று கலா நாக்கைக் கடித்தாள். அவன் எதைப் பார்த்தானோ என்று.

"ராட்டினத்து மேலே எனக்கு அன்னிக்கு ரொம்பப் பொறாமை ஒன்னோட ஒவ்வொரு விரலும் பட்டுதே."

அவள் உதட்டைக் கடித்து ஒரு குத்திட்டிப் பார்வை பார்த்தாள்.

கையை எடுத்துக் கொண்டாள்.

பெருமூச்சு விட்டாள்.

கண் தாழ்த்தினாள்.

"அதுக்கேதான் நானும் யாருக்கும் சொல்லலே."

"எதுக்கே தான்?"

"ஆமாம்... கோனார் நோட்ஸ் மாதிரி பதவுரை, பொழிப்புரை... கருத்துரை சொல்லணும் இவருக்கு."

"கலா?"

"ஏம்ப்பா... நீ கிரவுண்ட்ல எறங்கி பேட்டைப் புடிக்கறப்ப எவ எவ கண்ணுலே என்னா என்னா பார்வைன்னு கவனிச்சிருக்கியா?"

"கவனிச்சா பால் மிஸ் ஆயிடுமே!"

"அதான்... அவ்ளதான்! அப்ப நான் உன்னை எப்படிப் பாத்தன்னு எப்படித் தெரியப் போவுது?"

நச்சென்று விழுந்தது அவள் அடித்த அடி. யாருக்கு யார் ரசிகர்?

கலாவின் உதடுகளுக்கும் இடுப்புக்குமிடையே நின்ற இடைவெளி அபாய எல்லையைத் தொடுவதை உமாபதி உணர்ந்தான். அவள் சுவாசம் மேலே பட்டது.

"கலா?"

"இப்ப சொல்லு கலா கலான்னு! அப்ப பெரிய ரிஷி புத்திரரு."

அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ராட்டினம் திருடற ரிஷி" என்றான்.

அவள் சிரித்தாள்.

வினோதமான போராட்டம்!

போராட்டங்கள் பல விதம். அதில் இதுவும் ஒரு ரகம். இரண்டு வாரங்களுக்கு முன்பு, இந்தோனேஷிய அரசைக் கடுமையாக விமர்சித்து, ஜகார்த்தா நகரின் கலைக் கல்லூரி மாணவர்கள் நாடகம் ஒன்றை அரங்கேற்றினார்கள். அதனால் கோபமுற்ற காவல் படையினர் குழப்பம் விளைவிக்க, நாடக அரங்கம் போர்க்களமாக மாறியது. மாணவர்களுக்கும் காவல் துறையினருக்கும் ஏற்பட்ட இந்த மோதலில், துப்பாக்கிச் சூட்டில் 14 மாணவர்கள் இறந்து போனார்கள். நாற்றுக் கணக்கான பொதுமக்கள் படுகாயமுற்றார்கள்.



இந்தோனேஷிய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கவும், இறந்துவிட்ட மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் அடுத்த வெள்ளிக் கிழமையை "கறுப்பு வெள்ளி"யாக அனுஷ்டித்து பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை ஜகார்த்தா நகரில் மாணவர்கள் நடத்தினார்கள். எல்லா மாணவர்களும் கறுப்பு உடைகள் அணிந்து, மனித எலும்புக் கூடு மாடல்களைக் கையிலேந்தி வந்தது வினோதமாக இருந்தது!

தி டைம்ஸ் ஆப் இந்தியாவிலிருந்து :
அ. சங்கரன்

லிஃப்ட் எட்டாவது ஃப்ளோரில் நின்றதையும் கதவு திறந்ததையும் இருவரும் பார்த்தனர். மூடியதையும் பார்த்தனர்.

"எறங்கறதுதானே" என்று சுவாதீனமாக அவன் பின்னந்தோளை அணைத்து உமா

பதியின் இடது கன்னத்தை நெருங்கியவாறே கலா கேட்டாள்.

''சொல்றதுதானே'' என்று அவள் அணைப்பிலிருந்து விலக முயன்றபடியே கேட்டான் உமாபதி.

''பாக்கி குடுக்கணுமே?''

''ஏய்!''

''இது உன் பேட்டிங்குக்கு. இது உன் பௌலிங்குக்கு.. இது'' என்று கலாவின உதடு கள் அவன் உதடுகளை நெருங்கி வந்தன.

''ராட்டினத்துக்கு'' என்ற வார்த்தைகள் அவன் உதடுகளிலிருந்து சிறகுத்தோடு வெளி வந்தன. சட்டென்று சுதாரித்து உமா பதி விலகினான்.

''போதும் கலா. நாளைக்கு ராட்டினத் தோடு வந்து மீதியை வாங்கிக்கறேன்.''

''நாளைக்கும் தண்ணி லாரி ஓட்டிணு இங்க வருவியா?''

''நீ இஞ்சினியரைப் பாக்க வருவே இல்லே.''

''கட்டாயம்.''

''கட்டாயம்?''

''ஆசைப்பட்டு ராட்டனத்தைக் குழட்டினே. அத நீயே வச்சுக்க.''

''இனிமே வேணாம்.''

அவள் ஒன்பதில் இறங்குகிறவரை சிரித்த வாறே அவளைப் பார்த்தான். அவளும் சிரித்தபடி பார்த்தாள். எதுவும் வேண்டாம்! இப்படியே லிப்டில் ஏறி இறங்கி ஏறி இறங் கியே போய்க் கொண்டிருக்கலாம் போலிருந் தது.

எட்டில் இறங்கி மெட்ரோ வாட்டர் மானேஜரைப் பார்க்க நடந்தபோது உமாபதி மனசில் ராட்டினம் குறுக்கிட்டது.

வேறொரு ராட்டினம்.

ஆந்திரா பார்டரில் பெத்தய்யகாரி பேட்டா சாலையோரத்துக் குடிசை. போய்த் திரும்பிய அடுத்த சிங்கிளில் இறங்கத் தூண்டிய இடம். லாந்தர் வெளிச்சம். சிறு கூட்டம். வீட்டுக் கிணற்றடி.

ராட்டினத்தில் கயிறு விட்டு எதையோ இழுத்துக் கொண்டிருந்தார்கள்.

''என்னய்யா?''

பழகிய பழைய ஆள் நிமிர்ந்து பார்த் தான்.

''சனி போயிந்தி. ஆ பில்ல பாவிலோ படி ஆத்மஹத்தி சேஸ்கொனிந்தி.''

அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டாளாம்.

உமாபதி அந்த ராட்டினத்தின் மேல் படர்ந்த லாந்தர் வெளிச்சத்தைப் பார்த் தான். நீ கூடக் காரணம் என்று சொல் வது போல் அது கிறீச்சிட்டது.

கலைமான் தேவலாபுரத்து கிரிக் கெட் மைதானத்திலிருந்து ''ஹோஷி யார்'' என்று வானோக்கிக் கை உயர்த்தி னான்.

அடுத்த நாள் சொன்னபடி அதே நேரத்துக்கு உமாபதி லிஃப்ட் அருகே நின் றான். கையில் புது மெருகு குலையாமல் அவ னால் பாதுகாக்கப்பட்டிருந்த ராட்டினம்.

கலா வந்தாள்.

''ஏய்.. என்னப்பாது?''

அவன் சிரித்துக் கொண்டே ராட்டி னத்தை நீட்டினான். அவன் கை தீண்டாமல் கலா அதை வாங்கிக் கொண்டாள். அவள் கண்களில் எதையோ புரிந்து கொண்ட பார்வை.

அவளை மேலும் கீழும் ஏற இறங்கப் பார்த்தான். உமாபதி சபரிமலைக்கு மாலை போட்டு கறுப்பு வேட்டி கட்டியிருந்தான்.



''தலைவரே!
நல்லாத்தான் பேசறீங்க, ஆனா கொஞ்சம் மாடர்னா பேசினா எடுப்பா இருக்கும்...!''

''மணமக்களுக்குத் திருமண வாழ்த்துச் சொல்லும் போது மாடர்னா என்னய்யா பேச முடியும்?''

''அதுக்காக 'சோடா பாட்டிலும் கோலியும் போல'ன்னு வாழ்த்தணுமா, தலைவரே!''

– சா. அனந்தகுமார்.

காதில் விழுந்தவை

● நவம்பர் 29ஆம் தேதியிலிருந்து டிசம்பர் ஆறாம் தேதி வரை தமிழகத்தில் எந்தவித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் பார்த்துக்கொண்டதில் காவலர்களுக்குப் பெரும்பங்கு இருக்கிறது. வேறு ஒரு காரணமும் இருக்கிறது என்கிறார் உளவுத்துறை அதிகாரி ஒருவர். 'அது என்ன?' என்றபோது அவர் சொன்னார். ''வட மாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க அடி மேல் அடி வாங்கியதல்லவா. எனவே காங்கிரஸ் பலம் பெற்று வருவது கண்கூடு. இது போன்ற சமயத்தில் ஏதாவது நாசகார வேலைகளில் ஈடுபட்டால் நடுநிலை மக்கள், மைனாரிட்டி மக்களுக்கு எதிராக, பா.ஜ.க.வுக்கு ஆதரவாக மாறும் சூழல் உருவாகும். இந்த நிலை ஏற்படாமல் இருக்கவே தீவிரவாதிகள் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டதாகவும் எங்களுக்குத் தகவல் உண்டு. பா.ஜ.க.வை விட காங்கிரஸ், மைனாரிட்டி மக்களுக்கு நெருங்கியதல்லவா. அது செல்வாக்குப் பெறுவதற்கு அவர்கள் தடையாக இருக்க விரும்பவில்லை. அமைதிக்கு இதுவும் ஒரு காரணம்!'' என்றார் அவர். இதற்கிடையில் அந்தப் பதற்றமான காலகட்டத்தில் பந்தோபஸ்தில் ஈடுபட்ட ஒரு லட்சம் காவலர்களுக்கும் ஊக்கத் தொகை கொடுக்க வேண்டும் என்று காவல்துறை தலைமை, அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளதாம். ஆனால் ஊக்கத் தொகையை நிர்ணயிப்பதிலும் நிதி ஒதுக்குவது தொடர்பாகவும் நிதி இலாகா தடை போடுவதாகவும் சொல்கிறார்கள். வழக்கம்போல முதல்வரின் ஆதரவை எதிர்பார்த்து நிற்கிறார்கள் காவலர்கள்.

● வாஸ்து எல்லோரையும் பிடித்து ஆட்டுகிறது. பெரியார் பரம்பரையில் வந்தவர்கள்கூட வாஸ்துவுக்குத் தான் பணிந்து வாசல் கதவுகளை மாற்றியமைக்கும்போது, ஆத்திகக் கூடாரமான அ.இ.அ.தி.மு.க.வைப் பற்றிச் சொல்லவா வேண்டும். அவ்வை சண்முகம் சாலையிலுள்ள தலைமை நிலையம், பார்த்துப் பார்த்து வாஸ்து முறைப்படிதான் கட்டப்பட்டது. இப்போது ஆந்திர வாஸ்து நிபுணர் ஒருவர் தலைமை நிலையத்தில் தெருவைப் பார்த்து இருக்கும் எம்.ஜி.ஆர் சிலையை,

அடக்கி வாசிக்கிறார்களாம், தீவிரவாதிகள்!

கட்டடத்தைப் பார்த்து வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறாராம். எம்.ஜி.ஆர். திரும்பிப் பார்ப்பாரா?

● ஜெ.ஜெ. தொலைக்காட்சியில் நிர்வாகியாக இருந்து, இப்போது அமலாக்கப் பிரிவால் தேடப்பட்டு வரும் நபர் ஒருவர், சென்னையில்தான் இருக்கிறாராம். என்ன செய்யப் போகிறது அமலாக்கப் பிரிவு?

● சமீபத்தில் பொறியியல் படிப்பு கேள்வித்தாள் அவுட் ஆனதற்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள்தான் காரணமாம். துணைவேந்தரான மனோகரனைக் கவிழ்ப்பதற்கு சில சுயநிதிக் கல்லூரி அதிபர்களின் தூண்டுதலின் பேரில் அவர்கள் செயல்பட்டு வருகிறார்களாம்!

— தில்லப்பா

● கலை அரசு, கோவை - 42.

? இந்த டிசம்பர் ஆறில் காட்டிய கெடுபிடிகளைச் சென்ற ஆண்டே கருணாநிதி காட்டியிருந்தால் கோவையில் குண்டு வெடித்திருக்காது அல்லவா...?

! பாபர் மசூதி இடிக்கப்படாமலே இருந்திருந்தால் பிரச்னையே இருந்திருக்காதல்லவா!

● 'ஸ்ரீகவி' நாயகன், ஸ்ரீவில்லிப்புத்தூர்.

? இருபது ஆண்டுகளுக்குப் பின் கருணாநிதி ஆட்சியைப் பற்றி மக்கள் பேசுவார்கள் என்று ரஜினிகாந்த் கூறியதைப் பற்றி...?

! நல்லபடியாகப் பேசினால் சரிதான்!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? பெற்றோரின் கடமை என்று எதைக் கருதுகிறீர்கள்...?

! குழந்தைகளைச் சிந்திக்கவும் கேள்வி கேட்கவும் ஊக்குவிப்பது முக்கிய கடமை. அவற்றுக்குப் பதில் தெரியாவிட்டால் மரியாதையாக ஒப்புக் கொண்டு விட்டு பிறகு பதிலைக் கண்டு பிடித்தோ யோசித்தோ சொல்வது இன்னொரு முக்கிய கடமை.

● ஆர். சாலமோன், ஆலங்குளம்.

? பார்லிமெண்ட் அமளி...?

! குழாயடிச் சண்டையில் நான் முந்தி - நீ முந்தி; கூட - குறைய என்றெல்லாம் பலவித சண்டைகள் உண்டு. ஆனால் குழாயடிக்குப் பானையைக் கொண்டு வரவே கூடாது என்கிற குழாயடிச் சண்டையை இப்போதுதான் பார்க்கிறோம்! சரித்திரம் படைத்துள்ள இன்றைய பார்லிமெண்டுக்கு வாழ்த்துக்கள்!

● ந. வந்தியக்குமாரன், சென்னை - 41.

? ஒரு கோடி ரூபாயை மொத்தமாகப் பார்த்திருக்கிறீர்களா...?

! ஹய்யோ! ஹய்யோ! அறுபது கோடி ரூபாயை ஒட்டுமொத்தமாகப் பார்த்திருக்கிறார் ஐயா, அண்டை மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர்! ஐரோப்பிய லாட்டரியில் விழுந்ததாம்! லாட்டரிப் பைத்தியம் நம்மிடையே மேலும் அதிகமாகப் போகிறது! ஒரே ஒரு ஆறுதல் : அறுபது கோடியில் கொஞ்சமாகத் தமக்கு என்று ஒதுக்கிக் கொண்டு, பாக்கியை அரசு உதவியுடன் மின்-உற்பத்தி நிலையம் அமைக்க முதலீடு செய்யப் போகிறாராம்! எல்லோர்க்கும் பெய்யும் மழை!

• வயிற்றெரிச்சல்...



• ...விமர்சனம்!



● வசந்தா சித்திரவேலு, கருப்பம்புலம்.

? 'வேலைக்குச் செல்லும் பெண்களில் பத்து சதவிகிதம் பேர் மட்டுமே ஒழுக்கமாக இருக்கிறார்கள்' என்று காஞ்சி மடப் பெரியவர் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சொல்கிறாரே...?

! ஜெயேந்திரர் சொல்கிறார் என்பதால் கூட ஒரு தவறான கருத்துக்கு மதிப்பு ஏற்படாது. பெண்கள் ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிற போது, இத்தகைய பொறுப்பற்ற விமர்சனங்கள் பொறுப்பான இடங்களிலிருந்து வரக் கூடாது.

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? தங்களுக்கு வழங்கப்படும் தொலைபேசி, சமையல் கேஸ் இணைப்பு ஒதுக்கீட்டை மீண்டும் தர வேண்டும் என லோக் சபாவில் எம்.பிக்கள் பலத்த கூச்சல் எழுப்பினார்களாமே...?

• கடவுள் தத்துவம்



! இந்த உரிமைகளை எம்.பி.க்களுக்குத் திரும்ப வழங்கியுள்ள கேரள உயர் நீதி மன்றம், அவற்றை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு நன்னடத்தை விதிமுறைகளையும் வகுத்துக் கொடுத்திருக்கிறது. தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் போலன்றி இவையாகிலும் கடைப்பிடிக்கப் பட்டால் உரிமைகள் துஷ்பிரயோகமாகாமல் இருக்கும்.... ஹூம்...!

• கருத்தும் மதிப்பும்!




● மு. இரவிச்சந்திரன்,
சேலம் - 9.

? 'நான் கடவுளை ஏற்றுக் கொள்வதில் பிரச்னை இல்லை.... தம்மைக் கடவுள் ஏற்றுக் கொள்வாரா என்பது தான் பிரச்னை' என்று கருணாநிதி கிண்டலடிக்கிறாரே...?

! கருணாநிதி கிண்டலடிப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கடவுள் நம்மை ஏற்றுக் கொள்கிற மாதிரி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் எல்லா மதங்களுக்கும் அடிப்படைத் தத்துவம். அதைப் புரிந்து கொண்டு கருணாநிதி பேசுகிறார் என்றே நினைக்கிறேன்.

● நீடா. சி. இளஞ்செழியன், சாரியமங்கலம்.

? வேலை நிறுத்தத்தால் அரசுக்கு இழப்பு என்பதை முன்பு அரசியல் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இப்போது



பார்லிமென்ட் அமளி குறித்து...?

அரசியல் தலைவர்களே முன்நின்று வேலை நிறுத்தம் செய்கிறார்களே...?

! தவறுதான். அதிலும் விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசு மட்டுமே தான் காரணம் என்பது போல் ஒரு மாயையை உருவாக்க முயன்றது ரொம்பத் தவறு. வேலை நிறுத்தங்கள் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தாது; மாறாக அதிகரிக்கவே உதவும். இன்றைய பொருளாதாரச் சூழலில் கடின உழைப்புதான் நாட்டைக் காப்பாற்றும் என்பதை உணர்த்துவதுதான் அனைத்துத் தலைவர்களின் கடமை.

● சுநா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? பொது சுகாதாரம் பற்றி நம்மவர்களிடையே அவ்வளவாக அக்கறை இல்லாதற்கு என்ன காரணம்...?

! தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதால் ஆரம்பப் பள்ளிகளிலேயே சுய சுகாதாரம், பொது சுகாதாரம் பற்றி காரண – காரியங்களுடன் விவரமாகச் சொல்லித்தரப்பட வேண்டும். இதன் பிறகும் தப்பாக நடப்பவர்கள் மீது கடுமையான நட வடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரண்டும் இல்லாத போது மக்களுக்கு அக்கறை உண்டாகாததில் வியப்பில்லை.

● அ. சுகுமார், காட்டுக்கானூர்.

? டிசம்பர் ஆறாம் தேதியையொட்டி நடைபெற்ற கைது நடவடிக்கையால் கருணாநிதியைச் சிறுபான்மையினருக்கு விரோதியாக சிலர் வர்ணிப்பது பற்றி...!

! டிசம்பர் ஆறாம் தேதியையொட்டி அரசு முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டிய அவசியம் புலனாய்வுத் துறைக்குக் கிடைத்த துப்புகளினால் ஏற்பட்டிருக்கலாம். அதையொட்டி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கலாம். சென்ற ஆண்டு போல் இப்போதும் மெத்தனமாக இருந்து விட்டு, அன்றைய தினம் அசம்பாவிதமாக ஏதும் நடந்திருந்தால் ஒருவர் பாக்கியின்றி அரசையும் முதல்வரையும்தானே குறைகூறி பழித்திருப்பார்கள். ஆட்சியில் இருப்போருக்கு இதுபோன்ற சிக்கல்கள் ஏற்படத்தான் செய்யும். தாம் சிறுபான்மையினரின் விரோதி அல்ல; வன்முறைக்கு மட்டும்தான் விரோதி என்பதைத் திரும்பத் திரும்ப கருணாநிதி தெளிவாக்கியிருக்கிறார். புரிந்து கொள்ள மறுப்பவர்களை என்ன செய்வது...? தூங்குவது போல் பாசாங்கு செய்தால் தட்டி எழுப்பவா முடியும்?!

● ஜி. ராமதாஸ், கணபதி அக்ரஹாரம். ❑

? சமத்துவம், உரிமை, சலுகை, இட ஒதுக்கீடு – இவற்றுள் பெண்களுக்கு அதிக நன்மை பயப்பது எது...?

! இந்த நான்குக்கும் மேலான ஒன்று கல்வி. அதை அளித்தால் பின்னிரண்டுக்கு அவசியமிராமல் போகும்; முன் இரண்டுக்கும் போராட பலம் பெருகும்.... அந்த பலமே வளர்ச்சியுற்று, ஒரு கட்டத்தில் போராட்டத்துக்கும் அவசியமின்றிப் போகும்.

● இரா. புவனேஸ்வரி, சென்னை – 81.

? சந்திரபாபு நாயுடுவின் தோற்றம் பஸ் ஸ்டாண்டு பிக்பாக்கெட்காரன் போல் உள்ளது என்கிறாரே ரேணுகா சௌத்ரி...?

! வேறு எந்தவிதமாகவும் விமர்சிக்க முடியாமல் இருக்கிறதே என்ற வயிற்றெரிச்சலில் சொல்லியிருக்கிறார் போலிருக்கிறது.

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? குடும்பத்தில் ஆண் ஆதிக்கம் இருப்பது நல்லதா? பெண் ஆதிக்கம் இருப்பது நல்லதா...?

! அன்பின் ஆதிக்கம் இருப்பதே நல்லது.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ஜி. ராமதாஸ்,
5/46, விஜித்திரராஜபுரம்,
கணபதி அக்ரஹாரம் போஸ்ட்,
அய்யம்பேட்டை வழி,
தஞ்சை மாவட்டம் - 614 202.

வட்டமேஜை

✉ ஆர்ய பட்டா (தொடர் கதை) திகிலுடன் தொடங்கி, சுவாரஸ்யமாகப் பயணித்து, திடுக்கிடும் முடிவுடன் முற்றுப் பெற்ற விறு விறுப்பான நவீனம்! கங்கிராட்ஸ் சுஜாதா சார்!
மயிலை, நெய்வேலி ஸ்ரீவித்யாகுமார்.

✉ விஞ்ஞானி சுஜாதாவால் உருவாக்கப்பட்டு, கல்கி ஸ்தலத்தில் இருந்து ஏவப்பட்ட ஆர்யபட்டா எனும் இருபது வார ஆர்ப்பாட்டம், வாசகர் இதயத்தில் இன்னும் பலநாள் வலம் வந்து கொண்டிருக்கும்!
கரூர்-1, சத்தியமூர்த்தி.

✉ கொலையும் செய்வாள் பத்தினி என்ற பழ(ங்கால)மொழிக்கு தேசபக்தி முலாமிட்டு, பளபளக்க வைத்து விட்டார்.
நெய்வேலி-3, எஸ். இந்துமதி.

✉ ஒவ்வொரு வாரமும் கல்கி எப்போது வரும் என்று எதிர்பார்க்க வைத்து விடுகிறார் ஜெயஸ்ரீ ராஜ் ('ஹைர ஹைர ஹைரோப்பா').

கங்கிராட்ஸ் சுஜாதா!

✉ பயணக் கட்டுரை சுவையாக இருக்கிறது என்று மட்டுமல்ல, 'மெடிட்டரேனியன் மிசை நிலவினிலே/ வெனிஸ் நன்னாட்டிளம் ஆண்களுடனே' போன்ற குறும்புத்தனமான வரிகளையும் ரசிக்க முடிகிறது.
சென்னை, பாலகல்கி.

✉ உயர்வும், பொருளாதாரத் தேக்கமும் பி.ஜே.பி.-யை சரிவிலிருந்து மேலும் சரிவுக்குத்தான் கொண்டு செல்ல உதவும். ஆட்சி மட்டுமே குறியாக இருந்ததால் இவர்களுக்கு மக்கள் நலன் தெரியவில்லை. வாஜ்பாயி பலராலும் ரிமோட் கண்ட்ரோல் முறையில் இயக்கப்படும் பிரதமர். அப்படியிருக்க இவரால் எப்படி நல்லாட்சி தர முடியும்?
மொரட்டுப்பாளையம், சுநா. இராஜேஸ்வரன்.

✉ மகாராஜாக்கள் இசைக்கு ஆதரவு அளித்த காலம் போய், சபாக்களுக்குத் தொழிலதிபர்கள் இசை வளர ஆதரவு அளிப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். அரசும் ஆதரவு அளிக்க வேண்டும்.
சென்னை-101, என். பாலசுப்பிரமணியன்.

✉ "மக்கள் நலன், நாட்டு நலன் என்கிற நோக்கில் மட்டுமே முடிவுகள் எடுத்துச் செயல்பட்டால், எஞ்சியுள்ள நாட்களில் நற்பெயர் அடைய வாய்ப்பு உண்டு" என்ற தலையங்கத்தின் எச்சரிக்கை, பா.ஜ.க.வுக்குப் புரிந்தால் சரி!
திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்.

✉ கிழி கிழியென்று கிழித்துத் தோரணம் கட்டித் தொங்க விட்டிருந்தாலும் 'வெள்ளி நிலவே' விமர்சனம் நச்சென்று படு கச்சிதமாக இருந்தது!
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ கன்னட ஏரிக்கரையில் அமரர் கல்கிக்கு எடுத்த இனிய விழாவை நேரில் பார்க்க முடியாத குறையை கட்டுரை சட்டெனப் போக்கி குஷிப்படுத்தியது!
மதுரை-16,
ஆர். லட்சுமி.

✉ அஸ்திவாரமின்றி... வானில் தொங்க உள்ள விண்வெளி ஓட்டல், வளரும் அறிவியலுக்கு ஓர் எடுத்துக்காட்டு. 'திரிசங்கு சொர்க்கம்' புராணங்களில் மட்டுமே படித்தது. இன்றோ நனவாகி விட்டது.
குடந்தை, சு. தியாகராசன்.

✉ நந்தனின் "வேலி" சிந்திக்கத் தூண்டும் யதார்த்தமான சிருஷ்டிப்பு.
மேலகிருஷ்ணன்புதூர், பிரபாலிங்கேஷ்.

✉ கனடா தேசத்தில் வன்முறைக் காட்சிகளை ஒளிபரப்பத் தடை உத்தரவைப் பெற, சிறுமி விர்ஜினி நடத்திய இயக்கம், மற்ற தேசங்களுக்கு ஒரு பாடம்.
சேலையூர், கே. வி. ராமன்.

✉ எஸ். சந்திரமௌலியின் வேட்டை, ஆரம்பம் முதல் கடைசி வரை சிரிக்க வைத்தது!
தஞ்சாவூர்-9, கே. மித்ரா

✉ ஆன்மீகப் போர்வையில் பெண்களுக்கு வக்காலத்து வாங்குவதாக லட்சுமி பங்காரு அடித்த அரசியல் ஸ்டண்ட் தராசுவிடம் பலிக்கவில்லையே!
திருவண்ணாமலை, ஆர்.ஆர். சாமி.

செ ன்ற ஞாயிறு காலை, சோம்பேறித் தனமாய் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'வின் முகத்தில் விழித்த மும்பைக்காரர்களை திடுக்கிட்டு, 'ஹர ஹர மஹாதேவ' என்று கன்னத்தில் போட்டுக் கொள்ள வைத்தது, சிவசேனைக்காரர்களின் திடீர் நிர்மால்ய தரிசனம்!

கோர்வாடி பகுதி சிவசேனா எம்.எல்.ஏ. ஸ்ரீகாந்த் ஸர்மல்கர் தலைமையில் ஐம்பது சிவசேனைத் தொண்டர்கள் 'பாலி ஹில்'லிலுள்ள 'ஸாலிடேர்' பங்களா முன், வெறும் அண்டர்வேருடன், கூச்சலும் குழப்பமுமாய் கூடி ஆட, இந்தக் கலியுக கோபாலர்களின் ஆடையை எல்லாம் எந்த ராதை அபகரித்துக் கொண்டாளோ என பதைபதைக்க வைத்தது!

அப்புறம்தான் இது பாலகிருஷ்ணனின் தாபத்தைக் கிளறிய ராதாவைப் பற்றிய விவகாரமல்ல; பால் தாக்கரேயின் கோபத்தைத் தூண்டிய ராதாவைப் பற்றிய விஷயம் என்பது புலனாயிற்று. ஆம்! தீபா மேத்தாவின் ''Fire''ல் வரும் ராதாவும் (ஷபானா) சீதாவும் தான் (நந்திதா) இப்படிமும்பையை (+ தில்லி – புனா) ஆட்டிப் படைக்கிறார்கள். சீதாவுக்கும் அக்னிக்கும் அப்படி என்ன ராசியோ? ஒன்று பற்றி எரிகிறார்; அல்லது பற்ற வைக்கிறார்!

ரசக்குறைவான இந்தச் சம்பவத்தின் பின், ரசமான பல கிளைத் தகவல்கள்.

முதலில் இயக்குநி தீபா மேத்தா பற்றி – எல்லா NRI களுக்குமுள்ள நோய் இவருக்கும் உண்டு; அதாவது இந்தியத்தனமுமில்லாமல், அந்நியத்தனமுமில்லாத ஒரு இரண்டுங்கெட்டான் கலாசாரம். (கண்ணில் ஒன்றரை வண்டி மையுமிருக்கும்; கையில் சிகரெட்டும் புகையும்) பஞ்சாபிக் குடும்பத்தின் "போலோ தாரா...ரா...ரா" பின்னணி; டிஸ்ட்ரிப்யூட்டர் தந்தையின் தயவில் ஃபிலிம் பாக்ரவுண்ட்! சின்ன வயதிலேயே ஒரு கனடா நாட்டுக்காரரை மணமுடித்து, கனடா பறந்து விட்டார். அங்கே செட்டிலாகி ஏதோ சிலபல டாகுமெண்ட்ரிகளைச் செய்தோமா, ஒரு பெண்ணைப் பெற்றுக் கொண்டோமா, டிவோர்ஸ் வாங்கிக் கொண்டோமா, ஹாலிவுட் 'ப்ரேக்' கிடைத்து 'காமிலா'வை இயக்கினோமா, அப்புறம் இந்திய நினைவுகளுக்கு ஒரு ''Fire'' ஐ எடுத்தோமா, உலக அரங்கில் 14 பரிசுகளை வாங்கிக் குவித்தோமா என்ற அளவில் விட்டிருக்கலாம்.

அதை இங்கே கொண்டு வந்து காண்பிக்க வேண்டுமென ஆசைப்படலாமா? அப்படியே பட்டாலும், இப்போது இங்கே பிரபலமாயிருக்கும் துர்க்கை, சண்டி, காளி இமேஜின் அடிப்படையில், இந்தப் பெண்கள் தங்கள் கணவன்மார்களை 'சதக்'கி, அவர்களைப் பழிவாங்குவது போல கதையை மாற்றி அமைத்திருக்கலாம். ஆனால் ஒரேயடியாக ஓரினச் சேர்க்






• நந்திதாவுடன் தீபா

கையில் ஈடுபடுவது போல், நிழல் தமான நிர்வாணங்களைக் காட்டினால், இலேசில் ஏற்றுக் கொள்வார்களோ?

''Fire'' வாஷிங்டன் டி.ஸி.யில் திரையிடப்பட்டபோதே, பார்க்க வந்த இந்தியர்களில், இளைய தலைமுறைதான் இதை ''bold film'' என்று பாராட்டியதாம்; நாற்பதைத் தாண்டி



• நவீன ஸ்ட்ரிப்டீஸ்

ஆபாசத்தை ஆபாசத்தால்...

யவர்கள் "இப்படி எல்லாம் நம்மூரில் நடக்காது; இது நம் கலாசாரமில்லை" என்று சொல்லி விட்டார்களாம்!

"ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அன்பு கொள்வதை ஏற்றுக் கொள்பவர்கள் ஏன் ஒரு பெண்ணும் மற்றொரு பெண்ணும் அன்பு செய்வதை மறுக்கிறார்கள்?" என்கிறார் தீபா.

"Lesbianism இயற்கைக்குப் புறம்பானது; IPC 377 இதுபோன்ற செயல்களை தண்டிக்கிறது; நமது காம சூத்ராவிலும் காஜுராஹோவிலும் இதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்பதால் இந்திய கலாச்சாரத்துக்கும் இதற்கும் சம்பந்தமில்லை'' என்கிறார் அரசு வக்கீலான ராஜேந்திர ஷிரோத்கர்!

லெஸ்பியன் உரிமைகளுக்குப் போராடுபவரான அஷோக் கவியோ, ஓரினச் சேர்க்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 1883ல் முதன் முதலாக சட்டம் இயற்றியவர் தாமஸ் மெக்காலே என்ற அயல் நாட்டவர்தாம்; இந்தியர்கள் அதற்கு எதிரி அல்ல என்கிறார்.

தீபாவை விட்டு விட்டு ஷபானா ஆஸ்மிக்கு வருவோம். அவர் தனி மனித உரிமைகளைப் பற்றிக் கொண்டு நிற்கிறார்.

"இல்லத்தில் ஏமாற்றமடைந்த பெண்கள் இப்படியும் நடந்து கொள்வார்கள் என்று, இப்பிரச்னைக்கு ஒரு குறிப்பிட்ட கோணத்தில் ஒரு அணுகு முறை; ஒரு கலைஞனின் சிந்தனைக் கருவில் உருவாவதுதான் சினிமா; சிவசேனைக்காரர்கள் சினிமாவில் எதைக் காட்ட வேண்டும் எப்படிக் காட்ட வேண்டும் என்பதை எல்லாம் நிர்ணயித்தால் அது கலைஞனின் கருக் கொலைக்கு ஒப்பாகும்" என்கிறார்.

இவரைப் போலவே, கலைஞனின் பேனாவுக்கு பராலிஸிஸ் வந்துவிடும் என்ற பயத்தில், திலீப்குமார், மகேஷ்பட், ஜாவேத் அக்தர் போன்றோர், சுப்ரீம் கோர்ட்டில் இந்தியக் குடியரசிலிருந்து, மராத்திய அரசு, பால்தாக்கரே சிவசேனை... என்று எட்டு பேரை எதிர்த்து பெட்டிஷன் போட்டு விட்டனர்.

இவை எல்லாம் சிவசேனையின் கலா

சாரத் தியில் இட்ட நெய்யானது; முதலில் தியேட்டர் வாசலில் போராட்டம்; அடுத்து போராட்டத்தை எதிர்த்துப் போராடிய 100 பேர் கைது; அடுத்த கட்டமாக, சில பெண் ணுரிமைக் கழகங்கள், ஒரு லட்சம் நிதி திரட்டி, சிவசேனையை எதிர்த்துப் போஸ்ட ரடித்தது. ஆனால் அந்தப் போஸ்டர்களைப் பிரிண்ட் பண்ணவே யாரும் முன்வர வில்லை! கடைசியில் ஒருவர் ரகசியமாக அச் சடித்துக் கொடுத்தாலும் போஸ்டர்களை ஒட்டுவது பெரும் பிரச்னையாயிற்று. ஒரே ஒரு காண்ட்ராக்டர் மட்டும் (ஒரு போஸ்டர் ஒரு ரூபாய்) சம்மதித்தார். ஆனால் போஸ்டர் ஒட்டும் பையன்கள் தலை தெரிக்க ஓடினர்.

கடைசியில் RPI கட்சிக்காரர்கள் தாமா கவே அப்புறப்படுத்தி விட்டனர். அடுத்த கட்டமாகத்தான் இந்த ஸ்ட்ரிப்டீஸ் நடனம்!

"இது எங்கள் உரிமை; ஃபயரில் முழு நிர் வாணங்களைச் சகிக்க முடிந்தவர்கள் இதை சகித்துக் கொள்ள முடியாதா? நாங்கள் அமைதி யாகத் தானே எதிர்க்கிறோம்" என்கின்றனர்.


இப்போது இன்னும் ஒருபடி சென்று, Fire கதாநாயகியின் பெயரை ஷப்னா, ஸாயிரா அல்லது நக்மா என்று மாற்றியமைத்தால் படத்தை திரையிட ஒப்புக் கொள்வதாக தாக்கரே கூறுகிறார்.

''முஸ்தஃபா படம் வெளியிடுமுன், துபாயிலிருந்து வந்த ஒரு மிரட்டலுக்குத் தலை வணங்கி, எவ்வளவு மாற்றம் செய் தார்கள்? மனித உரிமைகளைப் பற்றி பேசு பவர்கள், ஸல்மான் ருஷ்டியின் நாவல் தடை விதிக்கப் பட்டபோது காற்று வாங்கிக் கொண்டிருந்தார்களா?'' என்று காரசார மாகக் கேட்கிறார்.

இந்தியா போன்ற, சினிமா நாயக நாயகி யரை ஹீரோ(யின்) வர்ஷிப் செய்து, அவர் களைப் பின்பற்றும் ஆட்டு மந்தைக் கூட்டம் அதிகமுள்ள நாட்டில், ''Lesbianism'' ஐ அம்பலப்படுத்துவது புதுப் பிரச்னைகளைக் கிளப்பும் என்பது உண்மைதான். ஆனால் ஆபாசத்தை கடைப் பிடித்தால், நாம் பதினெட்டாம் நூற்றாண்டை நோக்கி அல்லவா போய்க் கொண்டிருப்போம்!

ஆக மொத்தம் Fire, cross-fire ஆகி விட்டது! தீபாவின் அடுத்த படமான ''Water'' வெளிவந்து இந்த ''Fire'' ஐ அணைக் குமோ என்னவோ? அதுவரை சிவசேனைக் காரர்கள் புண்ணியத்தில், மும்பை வாசி களுக்கு தினம் ஒரு சினிமாதான்!

— ஜெ.ஆர்.



சாந்துப் பொட்டு

ஜெயா பத்மநாபன்

"பானு! சீக்கிரம் அலங்காரம் முடித்துக் கொள். பெண் பார்க்க பிள்ளை வீட்டார் வரப் போகிறார்கள்!" – மூன்றாவது முறையாக அம்மாவின் குரல் மீண்டும் ஒலித்தது. எனக்கு சலிப்புத்தான் வருகிறது. இதுவரை எட்டுப் பேர் வந்து பெண் பார்த்துப் போய் விட்டார்கள். திரும்பத் திரும்பக் காலில் விழுந்து கும்பிடு போட்டால் ஊருக்குப் போய் பதில் அனுப்புவதாகப் போய் விடுகிறார்கள்.

அம்மாவும் அப்பாவும் தபால்காரரை எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்துக் காத்திருப்பார்கள். ஒருநாள் பதிலும் வரும் பெண் மிகவும் கறுப்பு என்று. மற்றொரு நபர் பெண் கறுப்பாக இருப்பதால் வரதட்சணையை அள்ளி வீசும்படி லிஸ்டுகளை தருவார்கள். அவர்கள் கேட்பதைத் தந்து விட்டால் கறுப்பு நிறம் வெண்மையாகத் தெரிந்திடுமா அவர்களுக்கு? நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த எனக்குத் திருமணம் செய்ய என் பெற்றோர்தான் எத்தனை கஷ்டப்படுகிறார்கள். இப்போது வரப் போகிறவர் ஒன்பதாவது நபர். இவர்களும் அதே பல்லவியைத்தான் பாடி விட்டுப் போகப் போகிறார்கள்.

அம்மாவின் தொந்தரவுக்காக வேண்டாவெறுப்பாக என்னைச் சிறிது அலங்காரம் செய்து கொள்கிறேன். கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறேன். களையான முகம்தான். இருந்து என்ன பிரயோஜனம்? எங்கிருந்து வந்தது இப்படி ஒரு கறுப்பு. சே! என் மீதே எனக்கு ஒரு வெறுப்பு. பெண் பார்க்க ஒரு பட்டாளமே திரண்டு வருகிறார்கள் என்று அம்மா சொல்வதில் இருந்து தெரிந்து கொண்டேன். அம்மா, அப்பா, பிள்ளைகள் மூவர்,





பெண்கள் இருவர், தாத்தா, பாட்டி சகிதம் வரப் போகிறார்களாம். இந்த அழகு ராணியைப் பார்க்க இத்தனை பேர்! எனக்கு சிரிப்புத்தான் வருகிறது.

எனக்குள் ஒரு குரூர எண்ணம். வருகிறவர்கள் எப்படியும் வழக்கம் போல நிராகரிக்கத்தான் போகிறார்கள். அதற்கு முன்பாக நானே ஏதாவது குறைகண்டு பிள்ளையைப் பிடிக்கவில்லை என்று முந்திக் கொண்டு சொன்னால் என்ன? பழிக்குப் பழி. அதுதான் சரி. என் மனம் சிறிது லேசானது.

"அம்மா! அவர்கள் வந்தாச்சு!" – தம்பி ராகவனின் குரல் கேட்கிறது. அதைத் தொடர்ந்து அம்மா, அப்பாவின் பரபரப்பு, உபசரிப்பு என் காதில் விழுகிறது. இதுவரை தைரியமாக எனக்குள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தாலும் ஏனோ துக்கம் என் நெஞ்சை அடைக்கிறது. வரப்போகும் ஏமாற்றத்தை எதிர்கொள்ள முடியாமல் உள்ளம் சோர்வடைகிறது.

சிறிது நேர உரையாடலுக்குப் பின், "பெண்ணை வரச் சொல்லுங்கள்!" என்ற குரலைத் தொடர்ந்து, "பானு! வாம்மா" என்று அப்பாவின் குரல் கேட்கிறது.

அம்மா தந்த காப்பி, பலகாரங்களை எடுத்து வந்து வந்தவர்களுக்குக் கொடுக்கிறேன். எல்லோருக்கும் நமஸ்காரம் செய்கிறேன். "இவர்தான் மாப்பிள்ளை" என்று அறிமுகப்படுத்த, அவரை ஒருகணம் நிமிர்ந்து பார்க்கிறேன். மின்னல் அடித்தது போல் தங்க நிறம்! அப்படியொரு அழகு! நான் திணறி விட்டேன். ஒரு வினாடி. என் கரு விழியோரங்களில் கண்ணீர் திரையிட்டு மறைத்தது. நான் உள்ளே வந்து விட்டேன்.

இப்போதும் நான் தோற்றுப் போனேன். என்ன காரணம் சொல்லி பிள்ளையை நான் நிராகரிக்க முடியும்? வழக்கம் போல் அவர்கள்தான் என்னை நிராகரிக்கப் போகிறார்கள். வரும் நபருக்காக மீண்டும் இந்தப் பெண் பார்க்கும் படலத்தை அம்மா தொடரப் போகிறாள். அடுத்து திடீரென்று என் பெயர் அடிபடவே நான் இரு காதுகளையும் தீட்டிக் கொண்டு கேட்கலானேன். அம்மா அப்பாவின் தவிப்பை என்னால் உணர முடிகிறது. "எனக்கு இது புதிது இல்லையே" என்னை நானே தேற்றிக் கொள்கிறேன்.

"பெண்ணை எங்களுக்கும் பையனுக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு. நீங்க வரதட்சணை சீர் என்று எதுவுமே செய்ய வேண்டாம். உங்கள் சௌகர்யப்படி உங்க பெண்ணுக்குச் செய்யுங்கள். சீக்கிரம் ஒரு நல்ல நாளாப் பாருங்க!" என்று சொன்னார்கள். என் காதுகளையே என்னால் நம்ப முடியவில்லை.

அப்பா நெகிழ்ச்சியில் உருகுகிறார்... "எத்தனையோ பேர் வந்து பார்த்துவிட்டு வேண்டாம்னாங்க... எங்க குழந்தையும் நாங்களும் பட்ட மனக்கஷ்டம்..."

அவரைப் பேச விடாமல் குறுக்கிட்டார் சந்திரனின் அப்பா.

"ஆண்டவன் படைப்பில் எல்லாமே அழகுதான். பையன் சந்தனப் பொட்டு என்றால் பெண் சாந்துப் பொட்டு. எதுல அழகு இல்லை?" என்று சொல்லச் சொல்ல அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வாயெல்லாம் பல். சந்தோஷமாக அவர்கள் விடைபெறுகிறார்கள். அம்மாவும் அப்பாவும் வாசல் வரை சென்று வழி அனுப்புகிறார்கள்.

என்னிடமும் கூறி விடைபெற்றார்கள். மாப்பிள்ளை சந்திரன் மேகத்தினிடையே எட்டிப் பார்க்கும் வெண்ணிலவைப் போல என்னைப் பார்த்துப் புன்முறுவலுடன் தலையசைக்கிறான். இப்போது என்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்கிறேன். அட! என் முகம் கூட செவ்வானமாகச் சிவந்து விட்டதே! முதன் முறையாக என்னை நான் நேசிக்கத் தொடங்கினேன். ●

90

துணையொன்றுமில்லை

விஷ்ணு என்கிற திருநாமத்தின் மகிமையைச் சொன்னேன். அவனோடு எப்போதும் உறைகின்றவள் லக்ஷ்மி. லக்ஷ்மி கல்யாணம் என்கிற உத்தமமான திருக்கல்யாணம் – எம்பெருமான் பரம குதூகலனாய் இருக்கிறான்.

லக்ஷ்மிக்கும் நாராயணனுக்கும் கல்யாணம் உண்டா என்று ஒரு விசாரம்! ஆரம்பமே விசாரம்தான்! கல்யாணம் என்றால் வது ஓரிடத்திலே இருக்க வேண்டும்; வரன் இன்னொரு இடத்திலே இருக்க வேண்டும். இவர்கள் இரண்டு பேரையும் சேர்த்து வைப்பதுதானே கல்யாணம். இங்கே லக்ஷ்மியை விட்டு நாராயணன் பிரிந்தால்தானே கல்யாணத்துக்கே அவசியம்... எப்பொழுதும் சேர்ந்தே இருக்கிறாள் அல்லவா!

வேதம் சொல்கிறபோது 'ஹ்ரீ' என்று பூமாதாவைச் சொல்லி அப்புறம் லக்ஷ்மியைச் சொல்கிறது. பூமி சமேதனாக, லக்ஷ்மி சமேதனாக இரவு-பகல் வித்தியாசமில்லாமல் ஸ்ரீயுடனும் பூமிதேவியுடனும் சேர்ந்தே இருக்கிறான். இந்த தத்துவத்தைப் பிரிக்கவே முடியாது; சேர்ந்தே இருக்கிறது. அப்படியிருக்கும்படியான இந்தத் தத்வம் கல்யாணம் பண்ணிக்கொண்டது என்று சொன்னால் எப்படிப் பொருந்தும்...?

ஆண்டாள் கல்யாணம் என்று சொல்கிறோம்; சீதா கல்யாணம் என்று சொல்கிறோம்; ருக்மிணி கல்யாணம் என்று சொல்கிறோம். – இப்படி இத்தனை கல்யாணங்கள் நடந்திருக்கின்றனவே... உண்மையில் நடந்ததா இல்லையா? இந்திர ஜாலம் போன்ற பொய்யா...? உண்மையில் நடந்தது என்றால், பகவானுடைய நிலையிலேயிருந்து ஆராய்ந்து பார்த்தால், அவனுக்குக் கல்யாணம் என்பது வேண்டியதேயில்லை...

த்வய மந்த்ரத்தைப் பார்த்தோமானால், லக்ஷ்மி மந்த்ரம் என்றே பெயர் அதற்கு. 'ஸ்ரீமத்' என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் எப்போதும் சேர்ந்தே இருத்தல் என்று அர்த்தம். அந்த எம்பெருமானை விட்டு அவள் பிரிவதேயில்லை. அவளை விட்டு இவன் பிரிவதேயில்லை. நாராயணன் வந்தான் என்றால், லக்ஷ்மியோடு வந்தான் என்றே அர்த்தம்.

சிவம் என்றால் மங்களம் என்று அர்த்தம். பரமசிவனுக்கு ஏன் மங்களம் என்று பெயர்...? சக்தியோடு சேர்ந்திருப்பதனாலே அவன் சிவனாகிறான்.

''லக்ஷ்மி கல்யாணத்துக்கு (உபன்யாஸத்துக்கு) வருகிறீர்களா?'' என்று ஒருவர் கூப்பிடுகிறார்... ''என்னால் வர முடியாதே... சக்தியேயில்லையே!'' என்கிறார் இன்னொருத்தர். ''என்ன நடந்தது என்பதை நீரே கேட்டு வந்து சொல்லி விடும்...''

''சரி! நீர் சிவனே என்று உட்கார்ந்து கொண்டிரும்... நான் போய் விட்டு வருகிறேன்...'' என்று புறப்பட்டு விட்டார் இவர்! சக்தி இருந்தால்தானே சிவனுக்குப் பெருமை! சொல்லும் பொருளும் போலவே சிவனும் சக்தியும். ஆகையினாலே பரமேச்வரனையோ நாராயணனையோ தனித்து ஆவாஹனம் பண்ணுவதில்லை.

யக்ஞத்தில்கூட நரசிம்ஹனை லக்ஷ்மியோடு சேர்ந்திருக்கும்படியானவனாகத்தான் உபாஸனை பண்ணு

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



கிறோம்; ஆவாஹனம் பண்ணுகிறோம். தனி உக்ர மூர்த்தியான நரசிம்ஹனின் ஆராதனம் வேண்டாம் என்கிறது சாஸ்திரம்.

இப்படிப்பட்ட திவ்ய தம்பதிகள் சங் கல்பித்து, அவதாரம் பண்ணி பல கல் யாணங்களைப் பண்ணிக் கொண்டார்கள். அந்தக் கல்யாணம் எதற்கு...? அவர்கள் அப்படி பண்ணிக் கொள்ளாவிட்டால் நாமெல்லாம் இங்கே ஒன்று கூடுவோமா? அந்த பிரபாவத்தைப் பேசுவோமா...? பேசுவதனாலே லோகத் துக்கெல்லாம் கல்யாணம் ஏற்படும். இர ண்டு கங்களிலே நித்ய கல்யாணம் நடக்கும் லோகத்தில் எல்லோருக்கும் சர்வ

க்ஷேமமும் பரம மங்களமும் உண்டாகும். குழந்தைகளுக்குக் கல்யாணம் ஆக வில்லையே என்று வருத்தப்படக்கூடிய தாய் – தந்தையர்க்கெல்லாம் கவலை நீங்கும். பகவான் திருநாமத்தை ஸ்மரிப்பதனாலே பரம மங்களத்தைக் கொடுத்து விடுகிறான். ஆகையினால்தான் லோக கல்யாணார்த்தமாக – எல்லோருடைய க்ஷேமத்தின் பொருட்டும் பரமாத்மா அவதார காலத்தில் இறங்கி வந்து தன்னிடத்தில் இல்லாததைக் காட்டிக் கொடுக்கிறான். திருக்கல்யாணம் பண்ணிக் கொண்டு அனுக்கிரஹம் பண்ணுகிறான். இது அவனுடைய தயையின் காரியம். அவன் தயை இருக்கிறதே... அதுதான் இறங்கி வந்து இப்படியெல்லாம் திருக்கல்யாணம் பண்ணிக் கொண்டு, நம்மையெல்லாம் சேர வைத்து, பேச வைத்து, ஆனந்திக்கப் பண்ணுகிறது. எப்போதும் சேர்ந்தே இருக்கும்படியான மஹாலக்ஷ்மிக்கு அந்த எம்பெருமானுடன் சேர்ந்து இருப்பதே கல்யாணம். பரம மங்களமான அந்தத் திருக்கல்யாண உத்ஸவ சரித்திரத்தின் வாயிலாக பரமாத்மா நமக்கு இதையே காட்டிக் கொடுக்கிறான்.

ஸ்ரீ இருக்கிறாளே, மஹாலக்ஷ்மி... அவள் ப்ருகு வம்சத்திலே தோன்றினாள் என்று சொல்லப்படுகிறது. கலசத்தில் தோன்றினாள் என்று சொல்லப்படுகிறது. எங்கேயிருந்து அவள் தோன்றினாள்...?

சுவாமி தேசிகன், ஸ்ரீ ஸ்துதியிலே சொல்கிறார் பாருங்கள்... 'விஷ்ணு வக்ஷஸ்தலம் அவளுக்கு இருப்பிடமா? யக்ஞ பூமி இருப்பிடமா? இல்லை கலசம் இருப்பிடமா? அல்லது ப்ருகு வம்சம் இருப்பிடமா...? இருப்பிடம் எது என்றே தெரிந்து கொள்ள முடியவில்லையே... அவள் பெருமையை எப்படி உணர்வது...?' என்று ஆச்சர்யப்படுகிறார் சுவாமி தேசிகன்.

மஹாலக்ஷ்மியின் பெருமையை உணர்வது அவ்வளவு சுலபமா...? கூரத்தாழ்வார் என்கிற ஆசார்யர் ஸ்ரீ ஸத்வம் என்கிற ஸ்தோத்திரத்தில் மஹாலக்ஷ்மியையே பார்த்துக் கேட்கிறார்: ''அம்மா! உன்னுடைய பெருமை உன் வல்லபனான நாராயணன் உணர்வானா...?' ஹரியினாலும் உணராத பெருமையல்லவா உன்னுடைய

அருள்வாக்கு

கடவுள் மகா சக்தி படைத்தவர் மட்டுமல்ல; பரம காருண்யமும் பொருந்தியவர். எனவேதான் அவர் அனைத்துக்கும் அப்பாற்பட்ட அருவமாயினும், பக்தர்கள் தங்கள் இந்திரியங்களால் கிரகித்து, கண்ணாரக் கண்டு, வாயாரப் பேசி, கையார ஸ்பரிசித்து மகிழும் வண்ணம் பல உருவங்களும் தரிக்கிறார். கடவுள் இல்லை என்று வாதம் செய்கிறவர்களிடம் தம்மை நிரூபித்துக்குக் கொள்வதற்காக அவர் உருவம் எடுத்துக் கொண்டு வர மாட்டார். 'கடவுள் உண்டு. அவரை அநுபவிக்க வேண்டும்' என்று தாபத்துடன் வேண்டுகிறவர்களிடம் கருணைகொண்டு அவர்

பெருமை...''

''ஏன்...?'' என்று ஒரு கேள்வி போட்டுக் கொண்டு அவரே சொல்கிறார்...

''உனக்கே தெரியாது உன் பெருமை!'' என்கிறார்!

''உன்னாலும் உணரப்படாதது உன் பெருமை. அதை அடியேன் பேச வந்தது எவ்வளவு பரிஹாஸாஸ்பதம்! கேலிக் கூத்தாக அமையும்!'' என்கிறார்.

வனஸ்பதி, ப்ருஹஸ்பதி என்று இரண்டு சப்தங்கள். இந்த இரண்டுக்கும் வேதத்திலே சப்தம்கூட ஒரே மாதிரிதான் வரும்... ஆனால் இது இரண்டுக்கும் ஏகப்பட்ட தாரதம்யம் இருக்கிறது! வனஸ்பதி என்றால் ஒரு மரம். ப்ருஹஸ்பதி என்றால் தேவர்களுக்கெல்லாம் குரு. ஆசார்யர்களுக்கெல்லாம் குரு... அதனால்தான் வால்மீகி ராமனை வர்ணிக்கிறபோது 'ப்ருஹஸ்பதி ஸமோ புத்யா...' என்று புத்தியிலே ப்ருஹஸ்பதிக்குச் சமமானவனாக ராமனை வர்ணிக்கிறார். அப்படியானால் எப்பேர்ப்பட்ட புத்தியுடையவர் ப்ருஹஸ்பதி என்று பார்த்துக் கொள்ளுங்கள்!

கூரத்தாழ்வார் இங்கே என்ன சொல்கிறார்... ''அம்மா மஹாலக்ஷ்மி! ஒருத்தரை மரம் என்று சொல்வதற்கும் ஒருத்தரை ப்ருஹஸ்பதி என்று கொண்டாடுவதற்கும் என்ன காரணம்...?' என்று கேட்கிறார்.

'மரமாட்டம் நிற்கிறது பாரு...' என்று



களுக்கே உருவத்துடன் காட்சி தருவார். அருவமாயினும் உருவம் கொள்வார். மின்சார ஒயரில் வருகிறபோது அருவமா யிருந்தாலும், காற்றடக்கமான ஒரு கண்ணாடிச் சிமிழும் (bulb) அதனுள் ஒரு சிறு கம்பியும் (filament) சேர்த்து ஸ்விட்சைப் போட்டால் அருவ மின்சாரமே ஜோதி ரூபமாகிற தல்லவா? பக்தர்கள் தங்கள் இதயச் சிமிழில் பக்தி என்ற கம்பியைப் பூட்டிக் கொண்டு சிரத்தை என்கிற ஸ்விட்சைத் தட்டி விட்டுக் கொண்டால் அருவமான கடவுள் திவ்ய மங்கள ஜோதியாகத் தரிசனம் தருவார். சூரிய வெப்பத்தில் கடல் நீர் ஆவியாகப் போகும்போது அருவமாகி விடுகிறது. அதுவே மேகமாகக் குளிர்ந்தால் நம் கண்ணுக்குத் தெரிகிற மழையாகிறது. இன்னமும் குளிர்ந்தால் கெட்டியான பனிக்கட்டியே ஆகிறது. நம் இதயம் எத்தனைக்கெத்தனை குளிர்ந்து ஈசுவரனை ஸ்மரிக்கிறதோ, அத்தனைக்கத்தனை ஸ்தூலமாக அருவ தத்துவம் உருவம் கொள்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

அறிவிலிகளை லோகத்திலே சொல்வார்கள். அஞ்ஞானிகளைப் பார்த்து 'மரம்! மரம்!' என்கிறோம். பிருஹஸ்பதியாய் – புத்திசாலியாய் இருந்தால் 'ஓ! அவரா மஹா ஞானியாயிற்றே...' என்கிறோம். குரலிலேயே நம் உற்சாகம் தெரியும். பெரிதாக, உச்ச ஸ்தாயியிலே உச்சரிப்போம்.

"ஒருத்தரை ஓஹோ என்று கொண்டாடுவதற்கும், ஒருத்தரை ஒன்றும் தெரியாது' என்று கீழே தள்ளுவதற்கும் என்னம்மா காரணம்...?" என்று கூரத்தாழ்வார் கேட்கிறார்: "உன்னுடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தினுடைய ஏற்றத் தாழ்வே காரணம்."

எங்கே மஹாலக்ஷ்மி கடாக்ஷம் வீசுகிறதோ அவர் ஏகமாக பிரகாசிக்கிறார். எங்கே கடாக்ஷம் இல்லையோ அவன் சாமானியனாயிருக்கிறான். ஆகையால், லக்ஷ்மி கடாக்ஷம் இருந்தால்தான் சரஸ்வதி கடாக்ஷமும் சித்திக்கும். வேதமானதுகூட சொல்கிறது – லக்ஷ்மி கடாக்ஷம் வழியாகவே சரஸ்வதி கடாக்ஷம் வருகிறது என்று...

லோகத்திலே, சாமான்யமாக, லக்ஷ்மி படத்தையும் சரஸ்வதி படத்தையும் பக்கத்து பக்கத்தில் மாட்டலாமா என்று சிலபேர் சந்தேகப்படுவார்கள். லக்ஷ்மி, நாராயணனின் தர்மபத்னி. பிரும்மாவோ நாராயணனுடைய பிள்ளை! பிள்ளையினுடைய மனைவி சரஸ்வதி. லக்ஷ்மிக்கு நாட்டுப் பெண், மருமகள்! மாமியாரும் மருமகளும் பக்கத்திலே இருந்தால் நித்ய யுத்தம்தான். அதனால் படங்களைச் சேர்த்து மாட்டக் கூடாது... என்பார்கள்.

ஆனால், நம் கிரஹத்திலே நடப்பதைப் போய் அங்கே சொல்லலாமா...! அவர்களிடம் இதெல்லாம் உண்டா! லக்ஷ்மி கடாக்ஷம் இருந்தால்தான் சரஸ்வதி கடாக்ஷமே வரும். அஷ்ட லக்ஷ்மியிலே வித்யா லக்ஷ்மி விசேஷமாக விளங்குகிறாள். அவளுடைய கடாக்ஷம் இருந்தால்தான் வாக்தேவி விசேஷமாக நம் வாக்கிலே வருவாள். ஆகையினாலே, உத்தமோத்தமமாயிருக்கும்படியானது மஹாலக்ஷ்மி கடாக்ஷம்... அதைத்தான் கூரத்தாழ்வார் ஆச்சர்யமாய்ச் சொல்கிறார்: 'அம்மா உன் உயர்ந்த பெருமையை எல்லோரும் உணர முடியாது. கடாக்ஷ ஏற்றத் தாழ்வினால் அல்லவா இந்த நிலை ஏற்படுகிறது...' என்று.

ஆளவந்தார் என்கிற ஆச்சாரியார் சொல்கிறார் பாருங்கள்... 'உன்னை என்னவென்று சொல்வேன்! உன் பெயரே 'ஸ்ரீ' என்று இருக்கிறதே. வேறு என்னவென்று நாங்கள் சொல்ல முடியும்? கற்பிக்க முடியும்? ஸ்ரீ என்ற சொல்லிலேயே எல்லாம் அடக்கம். இதை வியாகரண சாஸ்திர ரீதியாக ஆறுவிதமாகப் பொருள் சொல்கிறார்கள் ஆசார்யர்கள். அடுத்த வாரம் விளக்குகிறேன்...

(தொடரும்)


FOR ONLY
GENERAL

"முக்கியமான விஷயம்
சொல்லணும்னு வரச் சொல்லிட்டு
இப்ப எல்லா புத்தகத்துக்கும்
அட்டை
போடணும்ன்றீங்களே!"

"இவ்வளவு பெரிய
லைப்ரரில வேலை பார்க்கறீங்க,
இன்னமும் ஸ்பெல்லிங் மிஸ்டேக்
இல்லாம லவ் லெட்டர் எழுத
வரலையே உங்களுக்கு!..."

"உன்னை வர்ணிக்க
வார்த்தைகளே இல்லை...."
"அதனாலதான் லைப்ரரிக்கு
அழைச்சுட்டு வந்தீங்களா..."

"இத்தனை புக்கையும் படிச்சு
முடிச்சப்புறம்தான் கல்யாணமா...?
குட்டை!"

"எங்கிட்ட இரவல்
வாங்கிட்டுப் போன புத்தகங்களை
வைச்சு ஒரு லைப்ரரியே
ஆரம்பிச்சுட்டீங்களே, நீங்க நாசமாப்
போக!"

— மௌஷ்மி



அக்னிசர்மா பக்கம்

மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க வசீகரமான தோற்றம் ஒன்னு போதுங்க! எப்பேர்ப்பட்ட உம்மணாமூஞ்சியும் நீங்க சொல்றதை மதிச்சுக் கேட்டாகணும்! போதாக்குறைக்கு கேதுவும் செவ்வாயும் உங்களை ஸ்ட்ராங்கா சப்போர்ட் பண்றதால, இந்த வாரம் உங்க பெரும்பாலான எண்ணங்கள் நல்லபடியாவே நிறைவேறும். பெண்களுக்கு மட்டும் சின்னதா ஏதாவது ஒரு கவலை, மனசை அரிச்சுக்கிட்டே இருக்கும். கண்டுக்காதீங்க. பெரியவங்க கிட்ட மரியாதையா நடந்துக்கங்க.

ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

எத்தனை கவலை? எத்தனை சிக்கல்! பாவங்க நீங்க. ஆபீஸ்லயும் ஆயிரம் பிரச்னை. வீட்டுக்கு வந்தாலும் சம்சாரத்தோட/புருஷனோட நச்சரிப்பு. பத்தாத குறைக்கு, உங்களுக்கு எக்கச்சக்க கனவுகள், திட்டங்கள் வேற! எதையும் நடைமுறைப்படுத்த முடியாம திண்டாடுவீங்க. இதுக்கெல்லாம் என்ன காரணம்? டோட்டலா எல்லா கிரகங்களும் உங்க விஷயத்துல ஸ்டிரைக் பண்ணிட்டிருக்கறதுதான்! வேலைல கவனமா இருங்க. சின்னச் சின்ன தப்புங்க கூட உங்க விஷயத்துல பூதாகரமா விஸ்ரூபம் எடுக்க சான்ஸ் அதிகம். வியாபாரிகள் அகலக்கால் வெக்காம இருக்கறது நல்லது.

மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

டெல்லி சீட் பிடிச்ச சோனியா காந்தி மாதிரி, குஷியா இருப்பீங்க. எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் எல்லோருக்குமே இது பிரமாதமான வாரம். திட்டம் போட்டு செய்ய நினைக்கிற எல்லா காரியங்களும் தடங்கல் இல்லாம சீரா ஒர்க் அவுட் ஆகும். சிலருக்கு வெளிநாட்டுத் தொடர்பால ஏதாவது நன்மை நடக்கலாம். வர்த்தகத் துறை, காண்ட்ராக்ட் மாதிரி தொழில்ல இருக்கறவங்களுக்கு அரசு மூலம் ஏதும் லாபம் கிடைக்கலாம். பெண்களுக்குத் தாய்வீட்டிலேருந்து ஏதாவது பொருள் வரவு இருக்கும். கல்யாணமாகாதவங்களுக்கு, இப்ப கல்யாணம் கை கூடும் நேரம் வந்திருக்கு!



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பொதுவா சிக்கல் இல்லாத வாரம் தான் இது! நினைச்சபடி காரியம் நிறைவேறும். குறிப்பா கணிதம், கம்ப்யூட்டர் துறைல இருக்கறவங்கன்னா வெற்றிப் பாதை பளிச்சினு தெரியும். சிலருக்கு வெளிநாடு சான்ஸ் வரலாம். உல்லாசமான அனுபவங்கள் கண்டிப்பா உண்டு. ஆனா உடல் நலத்துல எச்சரிக்கை அவசியம். இந்த ராசிக்காரங்களுக்கு இப்ப வயிறு சம்பந்தமான பிரச்னைகள் ஏதும் வரலாம். வயசானவங்களுக்கு முதுகுல ஏதும் பிரச்னை வரலாம். எதுக்கும் கொஞ்சம் டாக்டர் ஃபீஸ் தயாரா எடுத்து வெச்சுக்கறது நல்லது. பெண்களுக்கு உத்தியோக ரீதில சிறப்பான வாய்ப்புகள் ஏதும் வர வாய்ப்பு இல்லை.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


வீட்டுல ஏதோ விசேஷம் வரப்போவுதுங்க. அநேகமா அது ஒரு கல்யாணமா இருக்கலாம்! எதிர்பாராத பண வரவு, விருந்தினர் வருகைன்னு இந்த வாரம் நீங்க ஒரே குஷியா இருப்பீங்க. பூர்வீக சொத்துகள் சம்பந்தமா ஏதாவது வழக்கு நடந்துட்டிருந்ததுன்னா, இப்ப அது நல்லபடியா தீர்ப்பாகும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கூடும் சமயம் இது. குறிப்பா காய்கறி, பழ வியாபாரிகள் காட்டுல மழைதான்! இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு, வெளிநாடு சான்ஸ்னு உற்சாக மூட்டறாப்பல ஏதேனும் வரலாம். பெண்களைப் பொறுத்தவரை அவங்க வெச்சதுதான் வீட்டுல சட்டம்! கொஞ்சமா உடல் நலத்துல கவனம் காட்ட வேண்டிய அவசியம் இருக்கு

கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

ரொம்ப சவாலான வாரம்! உங்க எதிரிகள் உங்களைக் கவிழ்க்க, கண்ணுல பன்னீர் விட்டுட்டுக் காத்திருக்காங்க. ஆபீஸ்ல ஒரு சின்ன தப்பு செய்வீங்களா, போட்டுக் குடுத்து மாட்டி விடலாமான்னு ஒரு கோஷ்டியே உங்களுக்கு எதிரா நடக்குது. வீட்டுலயும் அதே நிலைமை தான்! வாழ்க்கைத்துணைவர்/வியோட அடிக்கடி மனஸ்தாபம், புகார்க் காண்டம்னு இந்த வாரம் கொஞ்சம் கஷ்டமாத்தான் கழியும். இது தவிர பலருக்கு ராத்தூக்கம் இல்லாம உழைக்க வேண்டி வரலாம்! வேளைக்குச் சாப்பிடறது கூட ஒரு பெரிய விஷயமா இருக்கும். அலைக்கழிப்பு எந்த ரூபத்துல வரும்னு சொல்ல முடியாது. ரொம்ப எச்சரிக்கையா இருங்க. கடன் வாங்காதீங்க. யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போடாதீங்க.

நடக்குமென்பார், நடக்கும்!

முக்கியமா, ஒருத்தரைப் பத்தி வேற ஒருத்தர்கிட்ட அபிப்பிராயமே சொல்லாதீங்க.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

பணப் பிரச்னை இல்லைங்கறதே பெரிய ரிலீஃப் இல்லையா? ஆனா நீங்க ஆபீஸ்ல ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். நண்பர்களை அளவுக்கு மீறி நம்பாதீங்க. கடன் குடுக்கற பிஸினஸ் வேணாம். சிலருக்கு சிடுமூஞ்சி மேலதிகாரிகளால சில்லறைப் பிரச்னைகள் வரலாம். பெண்களுக்கு மட்டும் பலன் நல்லாவே இருக்கும். மாமியார் - மருமகள் உறவு சுமுகமா இருக்கும். வீட்டுல நிம்மதியும் அமைதியும் இருக்கும். ஆனா, உறவுக்காரங்ககிட்ட லேசா சர்ச்சை ஏதாவது உண்டாகலாம். வாக்குவாதத்தைத் தவிர்த்துடுங்க. இந்த வாரம் ஏதாவது ஒரு மகான் தரிசனம் சிலருக்குக் கிடைக்கலாம்!



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்களுக்கு என்னங்க! ராஜா மாதிரி உக்கார்ந்த இடத்துல எந்தக் காரியத்தையும் சாதிச்சிடுவீங்க. உங்களுக்கு உதவி செய்ய எல்லாருமே தயாரா இருப்பாங்க. கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் கூடி வரும். பணப் பிரச்னையே கிடையாது! வீட்டுல மகிழ்ச்சிக்குக் குறைவே இருக்காது. ஆனா, உங்க மனைவி உடல் நலத்துல நீங்க அக்கறை காட்ட வேண்டியது ரொம்ப முக்கியம். இந்த வாரம் உடன் பிறந்தவர்களோட அதிகம் வாக்கு வாதம் பண்ணாம இருக்கறது பெட்டர். மனஸ்தாபம் பெரிசாகும் அபாயம் இருக்கு!




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

விஞ்ஞானிகள், இஞ்சினியர்களுக்குப் புகழும் பணமும் குவியும் வாரம் இது! நினைச்ச காரியம் சுலபமா நடந்துடும்! எல்லா தரப்புலேருந்தும் உங்களுக்கு உதவி கிடைக்கும். சுய தொழில் செய்யறவங்களுக்கு லாபம் கூடும். பெண்களுக்குப் புதுப் புடைவை வாங்கற யோகம் உண்டு. மாணவர்கள் அதிக அக்கறை செலுத்திப் படிச்சாலொழிய முன்னேற்றம் கொஞ்சம் சிரமமாகவே இருக்கும். இளைஞர்களுக்குக் காதல் அனுபவங்களுக்கு வாய்ப்பு உண்டு! வயசானவங்களுக்குக் கோயில், குளம்னு உலா போகும் அதிர்ஷ்டம் வரலாம். தொழில், வியாபாரம் எல்லாம் சிறப்பாவே இருக்கும் சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு, அல்லது உள்ளூர் தொழிலுக்கு வெளிநாட்டு முதலீடுன்னு ஏதாவது லக் அடிக்கலாம்!




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் காட்டுல மழை! இந்த வாரம் உங்க முயற்சிகளெல்லாமே பெருவெற்றி பெறும்! எதிரிகள் காணமப் போயிடுவாங்க. வளர்ச்சிப் பாதைல ஜோரா நடை போடுவீங்க. பெண்களுக்கு நகை யோகம் இருக்கும். குடும்பத்துல மகிழ்ச்சி தாண்டவமாடும்! நிலம், வீடு வாங்க இது சரியான சமயம். அதே சமயம் வீட்டு உறுப்பினர்களோட உங்க நல்லுறவை வெளிப்படையா காண்பிக்கக்க வேண்டிய கட்டாயம் இருக்கு.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

கேது பலமா உங்களை சப்போர்ட் பண்றார். கவலையே படாதீங்க. மலை மாதிரி வர்ற பிரச்னைகள் தூசா போயிடும். உடம்பு கொஞ்சம் படுத்தும்தான்! ஆனாலும் பெரிய பாதிப்பு இருக்காது. வீட்லயும் வெளியிலேயும் உங்க மதிப்பு ஓஹோதான். மூத்த மகன் அல்லது மகளால உங்களுக்குப் புகழ் கூடறா மாதிரி ஏதாவது ஒரு சம்பவம் நடக்கும். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் வரும். வராத பழைய பாக்கிகளும் வந்து சேரும். சிலருக்கு மகான்கள் தரிசனம் கிடைக்கலாம்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எதையும் ரொம்ப கஷ்டப்பட்டே செய்து முடிக்க வேண்டி வரும். தடைகள் நிறைய இருக்கும். ஆபீஸ்ல சில பிரச்னைங்க வரலாம். அதிகாரிங்க அதிருப்திக்கு ஆளாகலாம். உங்க நெருங்கிய நண்பர் யாராவது ஒருத்தர் பிரிஞ்சி போகலாம். மனசுல எப்பவும் ஏதாவது குழப்பம் இருந்துக்கிட்டே இருக்கும். புதிய முயற்சிகளுக்கு இது சரியான சந்தர்ப்பம் இல்லை. ரொம்ப அவசியம்னா பெரியவங்ககிட்ட அபிப்பிராயம் கேட்டுட்டு செய்ங்க. கடன் கொடுக்கல் வாங்கல் மட்டும் கூடவே கூடாது! ●



• இமானுவலுக்குச் சிலை

யினிங் எடுத்திருப்பார்களோ?) ஏமாறாதீர்கள்! தீவிரவாதக் கருணையாளர்கள் மட்டும் முன் கூட்டியே காசைக் கையில் தனியாக வைத்துக் கொள்ளுங்கள்!"

ஆப்பனைன் மலைகள் (Appenines) வழியாக, ஏழுமலையூரான (city of 7 Hills) ரோமுக்கு செல்ல வேண்டும்;



• செயின்ட் பீட்டரின் 'பாஸிலிகா'

"இது 'டிவைன் கமெடி'யை எழுதிய தாந்தேயின் நினைவாலயம். இத்தாலிய மொழியின் தந்தையாகப் போற்றப்படும் இவர், தமது கதாபாத்திரங்களை எல்லாம், பிரபலமானவர்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கியவர். இவர் இறந்தபோது, உடல் ஒரு பிரச்னையாயிற்று. போப், இவர் பிறந்த மண்ணான ஃப்ளாரன்ஸில்தான் அடக்கம் செய்ய வேண்டும் என்றார். இந்த ஊர் மக்களோ, 'கூடாது; அவர் இங்கேதானே வாழ்ந்தார்?' என எதிர்ப்புத் தெரிவித்து, உடலை எங்கேயோ ஒளித்து வைத்து விட்டனர். எவ்வளவு தேடியும் கிடைக்காமல் போகவே, கடைசியில் இங்கே மொட்டையாக ஒரு நினைவுச்சின்னம் மட்டும் நிற்கிறது! - என்று விளக்கினார் மரியா.


நல்லவேளை இதையாவது விட்டு வைத்தார்களே என நாம் எண்ணிக் கொண்டிருக்கையில், மீண்டும் 'ஜிப்ஸி'களைப் பற்றி எச்சரித்தார். "இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டு, பாலுக்குக் காசில்லை என்பார்கள்... (அட..... நம்மூரில் டெக்னிகல் ட்ரெ

இடையில் அஸிஸியில் நிறுத்தி, அங்கிருந்த பாஸிலிகாவை நோக்கிச் சென்றோம். அஸிஸி பூகம்ப மையத்திற்கு மிக அருகிலிருந்தது; அண்மையில் இத்தாலியில் நிகழ்ந்த அதி பயங்கரமான பூகம்பத்தால், வெகுவாக பாதிக்கப்பட்டு வீடுகளெல்லாம் காலியாகி மயான நகரம் போல் மாறி விட்டது.

பாஸிலிகா மூடித்தான் இருந்தது. அங்கே, லோக்கல் டீவிக்காரர்கள், 'பொதுமக்களுக்கு பாஸிலிகாவைத் திறந்து விடலாமா கூடாதா'

இந்தியாவை நினைவூட்டும்





• குளத்தில் காசெறிந்து...

ஜெயஸ்ரீ ராஜ்

என்ற சர்ச்சையைப் பற்றி ஏதோ படம் எடுத்துக் கொண்டிருந் தார்கள்.

மலைச்சரிவிலிருந்து, சுற்றியிருந்த இயற்கைக் காட்சிகள் கண்ணுக்கு விருந்திட்டன. 'பாஸிலிகாவுக்கும் சர்ச்சுக்கும் என்ன வித்தியாசம்?' என்று என் கணவர் அதி அக் கறையுடன் விசாரித்தார். ''வெரிகுட் க்வெஸ்சன்'' என மரியா பாராட்டியது, அவரை 'என் புத்திசாலித்தனத்தைப் பார்' என்பது போன்ற பார்வையை என் மீது வீச வைத்தது. ஆற அமர, நல்ல இடமாகப் பார்த்து மலைச்சரிவில் அமர்ந்து, எங் களையும் உட்கார வைத்து மரியா தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

''உண்மையில் எனக்கும் என்ன வித்தி யாசம் என்பதே புரிய மாட்டேனென் கிறது!'' என்று அவர் முடித்தாரே பார்க்கலாம்!

''ஒருவேளை பிருந்தாவனம், கோயில் என்று நாங்கள் பாகுபடுத்தி யிருப்பதுபோல், 'போப்'களை சமாதியாக வைத்திருக்கும் இடம் பாஸிலிகாவாகவும், தேவாலயம் சர்ச்சாகவும் இருக்குமோ?'' என்ற இவரது விளக்கத்தை மிக ஆர்வத் துடன் ஏற்று, மறுபடியும் தலையைச் சுற்றி ஒளி வட்டத்தைச் சுழல விட்டார் மரியா!

அஸிஸியில் நிறைய 'ஸோவனியர்' கடைகள் - ஸ்கார்ஃபுகள், முரானோ கண் ணாடியில் மணி மாலைகள், திரைகள், டீ ஷர்ட்டுகள் என்று வாங்கத் தூண்டும் ஐட்டங்கள். அழகிய இத்தாலியப் பெண்ணின் கடையில், ஒரு டீ ஷர்ட்டுக்கு விலை கேட்டோம்; 30 ஆயிரம் லீராக்களில் ஆரம்பித்து, கால்குலேட்டர் துணையுடன்

• அஸிஸியில் நாங்கள்....



இத்தாலி!

25 ஆயிரத்தில் வந்து நின்றாள். நாங்கள் 'பைபை' சொல்லிவிட, பின்னால் வெகு நேரத்துக்கு 24,000... 23,000.... 22,000 என்று குரல் தொடர்ந்து கொண்டேயிருந்தது; நம்ம ஊர் பிளாட்பாரக் கடைகள் நினைவுக்கு வர, இனி இறங்காது என நிச்சயப்படுத்திக்கொண்டு, 'அபவுட்டர்ன்' அடித்து டீ ஷர்ட்டை வாங்கிக் கொண்டோம்.

கீழே இறங்கிய பின் பயணம் தொடர்ந்தது. வழியெல்லாம் நிறைய வைக்கோலை ரோல் ரோலாகச் சுற்றி அடுக்கியிருந்தார்கள்; புழுதி படிந்த தெருக்கள்; பெயின்ட் போன வீடுகள்.

ரோம் நெருங்குகையில், வழக்கம்போல் சரித்திர ஏடுகளைப் புரட்டலானார் மரியா! ரோமானியர்கள் வருவதற்குப் பலகாலம் முன்பிருந்தது 'டஸ்கனிய' நாகரிகம்; மத்திய இத்தாலி 'டஸ்கனிப் பிரதேசம்' என்றுதான் இன்றும் அழைக்கப்படுகிறது. சதா சண்டையும் பூசலுமாக இருந்த அந்தக் காலத்தை 'இருண்ட காலம்' என்கின்றனர்; விக்டர் இமானுவேல்தான் இத்தாலியின் முதல் மன்னன்.

டைபர் நதியோரத்தில், புலி ஒன்று பாலூட்டி வளர்த்த ரோமுலஸ் ரீமஸ் இரட்டையர்கள் கதைதான் உலகில் பிரசித்தம். ரோமுலஸ் கி.மு. 753ல் ரோமாபுரியை உருவாக்கி, ரோமானியர்களின் ஆட்சியை நிறுவினான். கி.மு.510ல் மன்னராட்சி முற்றுப் பெற்று குடியரசு பிறந்தது. துண்டுதுண்டாக இருந்த நாடுகளை எல்லாம் ஒருமைப்படுத்திய கரிபால்டிதான் 1870ல் இன்று நமக்குப் பரிச்சயமாயிருக்கும் இத்தாலியைத் தோற்றுவித்தவர். அப்போதிருந்துதான் 'ரோமா' என்கிற 'ரோம்' அதன் தலைநகராயிற்று!

இத்தாலியையும் இந்தியாவையும் இணைக்கும் முடிச்சு பாலமாகப் போடப் பட்டிருக்கிறது போலும்! அன்று வாணிபம் பாலமமைத்தது; இன்றும் சோனியா, போஃபர்ஸ் என்று தொடர்கிறதே...

இரண்டின் தலைநகர்களுக்கும் நிறைய ஒற்றுமை! நகருக்குள் நுழையும்போதே எக்கச்சக்கமான போஸ்டர்கள்! பெரும்பாலும் அரசியல் வகைதான்! 'இங்கே அரசியல்வாதிகள் எல்லோருமே ஒன்று, ஜெயிலில்! இல்லை, ட்ரையலில்! எல்லாம் மாஃபியா தொடர்பான வழக்குகள்!'' என்று ஒற்றுமையை வலுப்படுத்தினார் மரியா. மற்றபடி நெரிசல், குடியிருப்பு, போக்குவரத்து, பொல்யூஷன் போன்றவை பொதுப் பிரச்னைகள்.

நாங்கள் தங்க வேண்டிய 'பிளட்டா பாலஸை' அடையும்போது மாலையாகி விட்டது. 'ரோம் பை நைட்' ஒரு சுற்று வந்துவிட்டு, இரவு, இத்தாலியர்களின் விசேஷமான விருந்தோம்பலை உங்களுக்கு அறிமுகப் படுத்தப் போகிறோம்; பெண்களுக்கு ஒரு சிறப்புப் பரிசும் உண்டு! அரைமணியில் மிக அழகாக ட்ரெஸ் பண்ணிக் கொண்டு தயாராகுங்கள்!'' என மரியா அறிவித்தார்.

ஜீன்ஸ், ஸ்வெட்டர், கோட், க்ளவுஸ் எல்லாம் எறிந்துவிட்டு, இளம் சூரியன் கொடுத்த இதமான தைரியத்தில் ஸல்வார் கமீஸுக்கு தாவி, இண்டியன் ஸ்டைலில் அலங்கரித்துக் கொண்டோம். (சிறப்புப் பரிசென்று ஆசை காட்டியிருக்கிறாரே...) அமெரிக்கப் பெண்கள் எல்லாம், வயலட் வானில் பொன்னிற நட்சத்திரங்கள் வீசிய என் ஸல்வாரைத் தொட்டுத் தொட்டு புளகாங்கிதமடைந்தனர்.

('கல்யாணத்துக்கு வாங்கின பட்டுப் புடைவை! பார்டரே கிழிஞ்சிடுச்சு! தலையைச் சுத்தி தூக்கி எறியேன்!'

'சும்மா இருங்க; பார்டரை எடுத்துட்டு, லைனிங் குடுத்து ஸல்வாரா தைச்சுக் குவேன்!'

'உன் புத்தி உன்னைவிட்டு எங்கே போகும்?')

'நீ எங்கியோ போயிட்ட கண்ணு...' என்றல்லவா அவர்கள் சொல்லாமல் சொல்லிப் பூரித்தார்கள்?

இரவில் ரோம் கவர்ச்சியாகத்தானிருந்தது! கட்டடக் கலையின் அற்புதங்களைத் தாங்கி, கம்பீர அழகில் பெருமிதத்தது. செயின்ட் பீட்டர்ஸ் பாஸிலிகாவைச் சுற்றிய மையப் பகுதியில் இறங்கி நடந்தோம். சதுரக் கற்கள் பதித்த ரோடுகள்.

கைவிரல்களாலேயே இரு ஜோடி பொம்மைகளை, இசைக்கேற்ப ஆட்டு வைத்து, ஒருவர் வேடிக்கை காட்டினார். நிறைய நடைபாதைச் சித்திரக்காரர்கள், எதிரில் போஸ் கொடுத்துக் கொண்டு அமர்ந்திருப்பவரை, அவர்களிஷ்டப்படி

வரைந்து கொண்டிருந்தனர். சிலரை 'கார்ட்டூன்'களாக்கினர். ஒரு பெண் இளவரசியாகிக் கொண்டிருந்தாள். ஒரு உம்மணா மூஞ்சிக்காரர், சித்திரத்தில் 'ஹா..ஹா' என்று வெடிச் சிரிப்புச் சிரித்தார். 'ஒரு ஸிட்டிங்'குக்கு 25,000 லீராதான்... வாருங்களேன்!' என அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

குதிரை மேலிருந்த ராஜா இமானுவலுடன் எல்லோரும் ஃபோட்டோ எடுத்துக் கொண்டோம். ஒளிவெள்ளத்தில் குளித்த 'கொலோசியம்', முசோலினி வீர முழக்கம் செய்த பிரம்மாண்ட கட்டடம்... இப்படியே பார்த்துக்கொண்டு ஒரு ஃபவுண்டனை அடைந்தோம். நடுவில் கிரேக்க தேவதைகள் இதாலியன் சலவைக் கல்லில் உயிர் பெற்றிருக்க, சுற்றிலும் சிறு குளமாய் நீர், அதில் காசுகள். படித்துறையில் நின்று கொண்டு, திரும்பிப் பார்க்காமல், மூன்று காசுகளை தலைக்கு மேலாக நீரில் வீச வேண்டும் – முதல் நாணயம், மீண்டும் இத்தாலிக்கு வருவதற்கு; இரண்டாவது காரிய சித்திக்கு; மூன்றாவது, ஒரு இதாலியப் பிரஜையை மணந்து கொண்டு அங்கேயே 'செட்டிலாகி' விடுவதற்கு. முக்கால்வாசிப் பேர் இரண்டுடன் நிறுத்திக் கொண்டனர்.

இந்தக் காசுகளையெல்லாம் மாதமொரு முறை எடுத்து, குளத்தைச் சுத்தம் செய்வதற்கும், அனாதை இல்லங்களுக்குமாக உபயோகிப்பார்களாம்.

ஒரு பங்களாதேஷிப் பையன் இங்கே சிவப்பு ரோஜாக்கள் விற்றுக் கொண்டிருந்தான். "வந்து ஏழு வருடமாகிறது; சாதாரண காலங்களில் சுமாரான பிழைப்புத்தான்; டூரிஸ்டுகளில் இளம் ஜோடி அதிகமாக வந்தால் அன்று போனஸ்!" என்றான் உற்சாகமாய்! கல்கத்தாக்காரர்களுடன் வங்காளத்தில் அளவளாவினான்.

மைக்கேல் ஏஞ்சலோவின் ஊர் என்பதை நினைவுபடுத்தும் வகையில் வழி எல்லாம் அதி அற்புதமான சிற்பங்கள், அதிசயிக்க வைக்கும் பிரம்மாண்ட கட்டடங்கள். கலாசாரத் தொன்மை காற்றிலேயே கலந்திருந்தது போலிருந்தது. நடந்து நடந்து பசி எடுக்க, எங்களுக்காகப் பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உணவு விடுதிக்குச் சென்றோம்.

ஓ... அது சுவையான அனுபவம்!

(தொடரும்)

இதுவல்லவா சாமர்த்தியம்!



தென் கொரியாவின் சியோல் நகரைச் சேர்ந்த மூன் ஸாங் ஹியூக் என்ற 28 வயது இளைஞர், உலகின் மிகப் பெரும் எண்ணெய் நிறுவனங்களான எக்ஸான் மற்றும் மோபிலாயில் ஒன்றாக இணைய விருப்பதை முன்கூட்டியே யூகித்து, இன்டர்நெட்டில் 'எக்ஸான் மோபில்.காம்' என்ற பெயரில் ஒரு வெப்ஸைட் முகவரியை 70 டாலர் செலவில் தம் பெயரில் பதிவு செய்து கொண்டு விட்டார்.

அவர் எதிர்பார்த்தபடியே இரு நிறுவனங்களும் இணைந்து விடவே, அவரிடமிருந்து அந்த முகவரியை விலைக்கு வாங்கிக் கொள்ள மூன் ஸாங் வீட்டுக் கதவைத் தட்ட ஆரம்பித்துள்ளன. மூன் ஸாங் லட்சாதிபதி ஆகி விடுவார் நிச்சயமாக!

நன்றி: பிஸினஸ் லைன்;தகவல்: வி. சுபத்ரா

வெங்காய மகாத்மியம்

வெங்காயத்திற்கு ஆங்கிலத்தில் ''ஆனியன்'' என்று பெயர். இந்த வார்த்தை ''யூனியோ'' என்ற லத்தின் வார்த்தையிலிருந்து வந்ததாகும். இதற்கு ''பெரிய முத்து'' என்று பொருளாம். வெங்காயம் விற்கிற விலையில் இந்தப் பெயர் பொருத்தம்தானே...!

– பாளை பசும்பொன்

'விண்வெளி விடுதி' கட்டுரை படித்தேன். சில ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சில் ஒருவன் ''விண்வெளி பயணத்தின் 'திரில்'லை அனுபவிக்க வேண்டுமா? உடன 1000 பிராங்குகள் அனுப்புங்கள்'' என்று விளம்பரம் செய்தான். பலர் பணம் அனுப்பினார்கள்.

''பூமி என்ற கலத்தில் அமர்ந்து பல ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் இப்பொழுதே நீங்கள் விண்வெளியில் பயணம் செய்து கொண்டுதான் இருக்கிறீர்கள்'' என்று எல்லோருக்கும் பதில் அனுப்பினான்.

– சிட்லபாக்கம் அ. ஷண்முகசுந்தரம்

அவனது போதி மரங்கள்...

'அல்சர்' வந்ததால்
மதுவை விட்டான்,
'ஆஸ்த்மா' வந்ததால்
'சிகரெட்' விட்டான்,
'அலர்ஜி' ஆனதால்
பொடியை விட்டான்,
பற்கள் குறைந்ததால்
'பான்பராக்' விட்டான்.

கண்கள் மங்கியதால்
'கலர்'களை மறந்தான்,
தெம்பு போனதால்
'சின்ன வீடு' துறந்தான்,
சர்க்கரை நோயினால்
பத்திய மானான்,
செல்வம் கரைந்ததால்
பைத்திய மானான்.

சீர்மை போனதால்
சுற்றம் இழந்தான்,
நாய்போல் புத்தியால்
நட்பை இழந்தான்,
எல்லாம் இழந்தபின் –
இளமை தொலைந்தபின் –
விடுவதற்கு ஏதுமில்லை,
விரைகின்ற உயிர் தவிர....

அனைத்தும் இழந்தாலும்
அவனை இழக்காமல்,
பக்கத்தில் இருக்கின்றாள்
பத்தினியாய் ஒருத்தி....

புத்தனுக்கு போதிமரம் ஒன்று – இந்தப்
பித்தனுக்கு போதிமரம் நூறு....

– ந. காவியன்



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-; Overseas : Rs. 800/- (Air Mail)

வசந்த் & கோ

புத்தாண்டு

சிறப்புத் தள்ளுபடி விற்பனை

இந்த வருடத்தின் மிகக் குறைந்த விலையில் !

டிசம்பர் 18 முதல் ஜனவரி 1ம் தேதி வரை


SAMSUNG
ONIDA
THOMSON
SONY
BPL
PHILIPS
DAEWOO
VIDEOCON Appliances
VIDEOCON Television
GRUNDIG
Godrej
Whirlpool
Kelvinator
SIEMENS Washing Machine
IFB
Electrolux Washing Machine
ULTRA
ONIDA Washing Machine

* புத்தாண்டு தள்ளுபடி விலையிலேயே கடன் வசதி
* வட்டியில்லாத தவணை முறை வசதி.... குறிப்பிட்ட பொருட்களுக்கு
* சுலபத் தவணை முறை வசதி* COUNTRYWIDE மற்றும் Whirlpool Apple மூலம் கடன் வசதி இலவசப் பரிசுகளுடன்

கடன் பெற உங்கள் முகவரி, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை மற்றும் வருவாய் பற்றிய ஆதாரங்கள், வங்கி சேமிப்பு கணக்குப் புத்தகம் மற்றும் காசோலைகள் தேவை

* கிரடிட் கார்டு மூலம் உடனடி கடன் வசதி
* *CITI BANK / VISA / MASTER* கார்டுகளுக்கு சர்வீஸ் சார்ஜ் இல்லை.
* குறிப்பிட்ட பொருட்களுக்கு இலவசப் பரிசுகள்

SPB மெல்லிசை நிகழ்ச்சி
சென்னை, செங்கல்பட்டு கிளைகளில் Colour T.V. அல்லது
Fully automatic Washing Machine வாங்குபவர்களுக்கு ஒரு டிக்கெட் இலவசம்.
(டிக்கெட் இருப்பு உள்ளவரை)



சோபா செட்டுகள், ரெடிமேட் ஷர்ட்டுகள், கம்ப்யூட்டர்கள், பரிசுப் பொருட்கள் சென்னை, தெ. 37/1, வடக்கு உஸ்மான் சாலையில் உள்ள ஷோரூமில் கிடைக்கும்

புத்தாண்டு வரை எல்லா நாட்களிலும் விற்பனை உண்டு

* வசதி நிறுவனங்களின் விதிகளுக்குட்பட்டது

வசந்த் & கோ

SERVING CUSTOMERS THROUGH 27 BRANCHES

சென்னை : • தி.நகர் • தாம்பரம் • புரசைவாக்கம் • கோடம்பாக்கம் • ராயபுரம்
• அடையார் • பாடி • வண்ணாரப்பேட்டை • மயிலாப்பூர் • செங்கல்பட்டு • பாண்டிச்சேரி
• மதுரை • நெல்லை • ஈரோடு • சேலம் • கோயம்புத்தூர் • திருச்சிராப்பள்ளி • தஞ்சாவூர்
• வேலூர் • ஓசூர் • பெங்களூர்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

